விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 26 சனிக்கிழமை (12.11.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 328

## பாடசாலை அதிபர் மர்மமான முறையில் கூரிய ஆயுதங்களால் வெட்டிக்கொலை





### கந்தர்மடத்தில் பயங்கரம்

யாழ்.நகர் கந்தர்மடம் புகையிரத வீதியிலுள்ள வீடொன்றில் வைத்து பாடசாலை அதிபர் ஒருவர் கொடூரமான முறையில் கூரிய ஆயுதங்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். இப் பயங்கரச் சம்பவம் நேற்று முன்தினமிரவு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் மீசாலை மேற்கில் வசிக்கும், வரணி கரம்பன் இடைக்குறிச்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபரும் தேசிய கல்வி நிறுவகத்தின் யாழ்ப்பாண இணைப்பாளருமான சிவசுப்பிரமணியம் தயாபரன் (வயது 43) என்பவரே கொலை செய்யப்பட்டவராவார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, (20ஆம் பக்கம் பார்க்க)

## போரில் குதிக்க புலிகள் முயற்சி!

### முன்னாள் போராளிகள் மூலம் தகவல் கிடைத்துள்ளது என்கிறார் ஜனாதிபதி

(அட்டு) பிரித்தானியா, கனடா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் பணம் வசூலித்து மீண்டும் ஒருங்கிணைந்து போரில் குதிக்க முயற்சித்து வருகின்றனர். இதுகுறித்த தகவல்களை சரணடைந்த விடுதலைப்புலிகள் இயக்கத்தின் போராளிகள் மூலம் தாங்கள் பெற்றுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ரர்ஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## அரசு - கூட்டமைப்பு புதனன்று பேச்சு

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் அரசாங்கத்துடன் அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தையை நடத்த தீர்மானித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இதன்படி இவ்விரு தரப்பினருக்கும் இடையிலான அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை எதிர்வரும் 16ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கடந்த சுற்றுப் பேச்சுவார்த்தைகளின்போது சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் குறித்து இணக்கம் காண்பது தொடர்பில் இதன்போது ஆராயப்படவுள்ளதாக சுமந்திரன் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கூறியுள்ளார்.

இப் பேச்சுவார்த்தையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதன் தலைவர் இரா.சம்பந்தன், பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு அமெரிக்கா, கனடா, லண்டன் உள்ளிட்ட நாடுகளுக்கு சென்று இலங்கையின் இனப்பிரச்சினை, தமிழர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் சமாதான முயற்சி தோல்வியடைந்தது எதனால்?

### அறிக்கை வெளியிட்டது நோர்வே

(ஒஸ்லோ)

இலங்கையில் சமாதான முயற்சிகள் தோல்வியுற்றது ஏன் என்பதை கண்டறிவதற்கு நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கை நேற்று ஒஸ்லோவில் வெளியிடப்பட்டது.

நோர்வே வெளிநாட்டு அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கையின் சமாதான முயற்சிகள் தோல்வியடைந்தது ஏன்? என்ற மதிப்பீட்டுப் பணியை, நோர்வேயில் இருந்து இயங்கும் மைகேல்சன் இன்ஸ்டிடியூட் மற்றும் லண்டனில் இருந்து செயல்படும் கீழ்த்திசை மற்றும் ஆபிரிக்க கல்விகள் கழகம் (சோ-அஸ்)ஆகிய நிறுவனங்கள் இணைந்து செய்திருந்தன.

இந்த அறிக்கை வெளியீட்டு நிகழ்வில், இலங்கைக்கான முன்னாள் சமாதானத் தூதுவரும், நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சருமான, எரிக் சொல்ஹெய்ம், அமெரிக்க முன்னாள் வெளியுறவுத்துறை துணைச் செயலர் ரிச்சர்ட் ஆர்மிட்டேஜ், இலங்கையின் முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இலங்கையில் நடந்த மோதலுக்கு முடிவு காண எடுக்கப்பட்ட இந்த அமைதி வழிமுறை தோல்வியில் முடிந்ததற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன என்று இந்த அறிக்கை கூறுகின்றது.

#### மத்தியஸ்தம் தோற்றதன் காரணங்கள்

இந்த அறிக்கையின் முக்கிய அம்சங்களை விவரித்த (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆணைக்குழு அறிக்கை எதிர்வரும் 20ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிப்பு

அரசாங்கத்தின் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் எதிர்வரும் 20ஆம் திகதி கையளிக்கப்படும் என கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்வறிக்கையின் இறுதி வடிவம் இம்மாதம் 15ஆம் திகதியுடன் பூர்த்தி செய்யப்பட்டுவிடும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை (19ஆம் பக்கம் பார்க்க)

## மாணவரிடையே போதைப் பாவனை; கட்டுப்படுத்த கண்காணிப்புக் குழு

### ஆளுநர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகங்கள், போதைப் பொருள் பாவனை, கலாசார சீரழிவு போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பாடசாலைகள் தோறும் ஒழுக்காற்றுக் கண்காணிப்புக் குழுக்களை அமைத்து மாணவர்களின் ஒழுக்கத்தை உறுதிப்படுத்த வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாணக் கல்வி அபிவிருத்திக் கூட்டம் நேற்று ஆளுநர் தலைமையில் யாழ். பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில்,

- பாடசாலைகள் தோறும்பாடசாலை அபிவிருத்திச்சபை, பாடசாலை அதிபர், ஆசிரியர், பெற்றோர் கொண்ட ஒழுக்காற்றுக் கண்காணிப்புக் குழுக்களை (20ஆம் பக்கம் பார்க்க)

## ஹெரோயின் பயன்படுத்திய எட்டு மாணவர்கள் கைது

### முகவர் இன்று கைதாவார்-பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

போதைப் பொருள் பாவனையில் ஈடுபட்ட யாழ். நகர்ப் பகுதியில் உள்ள பிரபல பாடசாலைகளைச் சேர்ந்த 8 மாணவர்களை யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்று கைது செய்துள்ளதாக யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்துள்ளார்.

இந்த மாணவர்களுக்கு போதைப் பொருட்களை விற்பனை செய்துவரும் முகவரை இன்று கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தப் போவதாகவும் அவர் உறுதிபடத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஹெரோயின் போதைப் பொருட்களைப் பயன்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலும் அவற்றை ஏனைய மாணவர்களுக்கு விற்றனர் என்ற (20ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளை அழிப்பதில் இந்தியா உறுதியாக இருந்தது

## நோர்வே அறிக்கையில் விபரிப்பு

(ஒஸ்லோ)

**இலங்கையில் சமாதான முயற்சிகளை ஆதரிப்பதாக இந்தியா வெளிப்படையாக கூறினாலும் தமிழீழ விடுதலைப் புலிகளை உரிய இடத்தில் அடக்கிவைக்க வேண்டும் என நோர்வேயிடம் இந்தியா அந்தரங்கமாக கூறியது என நோர்வேயில் வெளியிடப் பட்ட ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இலங்கையில் சமாதான முயற்சிகள் தோல்வியுற்றது ஏன் என்பதை கண்டறிவதற்கு நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கை நேற்று ஒஸ்லோவில் வெளியிடப்பட்டது. இவ் அறிக்கையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2003-2004இல் சமாதான முயற்சிகள் மெதுவாக சிக்கறுக்கப்பட ஆரம்பித்தபோது கொழும்பு மீது புதுடில்லி அனுதாபம் கொண்டிருந்தது.

2004ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி அதிகாரத்திற்கு வந்தவுடன் தமிழர் அபிலாசைகளை நிறைவேற்றுமாறு தொடர்ச்சியாக கோரிவந்தது. ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் மீது அதன் இராணுவ ரீதியிலான தெரிவு தொடர்பாக எந்த அழுத்தத்தையும் பிரயோகிக்க வில்லையென அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தனிப்பட்ட சந்திப்புக்களின் போது விடுதலைப்புலிகளுடன் அதிகநட்பாக இருப்பது குறித்து நோர்வேயை இந்தியா விமர்சித்தது.

அத்துடன் விடுதலைப்புலிகளை உரிய இடத்தில் வைக்க வேண்டிய தன் அவசியத்தையும் வலியுறுத்தியது என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

202 பக்கங்களைக்கொண்ட அந்த அறிக்கையானது, நோர்வே வெளிவிவகார அமைச்சின் ஆவணங்கள் மற்றும் சமாதானச் செயற்பாட்டில் முக்கிய பாத்திரம் வகித்த நபர்களுடனான செவ்விகள் ஆகியவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

நோர்வேயின் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைப் படைகளுக்கு இந்தியா ரேடர் மற்றும் புலனாய்வுத் தகவல்களை வழங்கியது. இலங்கைக்கு இராணுவ தாக்குதல் கருவிகளை தான் வழங்க மாட்டாது என இந்தியா கூறிவந்தது.

ஆனால் அவற்றை இலங்கை வேறு எங்காவது வாங்கிக்கொள்வதை அது ஆட்சேபிக்கவில்லை மிக முக்கியமாக விடுதலைப்புலிகள் மீதான இந்தியாவின் எதிர்ப்பானது இலங்கை அரசாங்கத்திற்கான உறுதியான ஆதரவாக மாறியது.

பொது மக்கள் உயிர் இழப்புக்களை மட்டுப்படுத்துமாறு இந்தியா சில கோரிக்கைகளை விடுத்தாலும் விடுதலைப்புலிகளை தோற்கடிப்பதற்கான இராணுவ நடவடிக்கைகளை தொடர்வதற்கு தாம் ஆதரவளிப்பதை இந்தியா மிக தெளிவாக்கியது.

விடுதலைப்புலிகள் இறுதி நாட்கள் தொடர்பாக இவ்வறிக்கையில் குறிப்பிடுகையில், போராளிகள் சூழ்ந்த வலை இறுகிவரும்போது விடுதலைப் புலிகள் சரணடைவது என்பதில் கொழும்புக்கு மிகமிக குறைந்த ஈர்ப்புடையதாக மாறிவந்தது.

யுத்தத்தின் இறுதியில் விடுதலைப் புலிகள் தப்பியிருப்பதில் இந்தியாவுக்கு ஆர்வம் எதுவும் இருந்ததா என்பதும் சந்தேகமானது.

காங்கிரஸ் கட்சி தேர்தலில் தோற்கடிக்கப்பட்டால் விடுதலைப் புலிகளுக்கு உதவியாக எவரும் வந்து விடக் கூடும் என இலங்கை கவலை கொண்டிருந்தது.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இந்திய அமைச்சர் பா.சிதம்பரம், பிரபாகரனுடன் தொடர்பு கொண்டு ஆயுதங்கள் கீழே வைப்பார்கள் என்ற முன்னதாகவே தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றை விடுதலைப்புலிகளை ஏற்றுக்கொள்ளுமாறு யோசனை கூறினார்.

(ஆனால் அவர் எவ்வாறு பிரபாகரனை தொடர்பு கொண்டார் என்று கூறப்படவில்லை.)

எனினும் இந்தவிடயம் புலிகள் சார்பு தமிழக அரசியல்வாதியான வைகோவுக்கு கசிந்தது.

அவர் இதை காங்கிரஸின் ஒரு தந்திரம் எனக் கூறி நிராகரித்தது டன் தேர்தலில் பாரதிய ஜனதாக்கட்சி வெற்றி பெற்று புலிகளை மீட்கும் என விடுதலைப் புலிகளுக்கு உறுதியளித்தார்.

ஆனால் அது நடைபெறவில்லை இந்தியாவில் நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட வேளையில் பிரபாகரன் கொல்லப்பட்டார் என இலங்கை அரசு அறிவித்தது.

இவ்வாறு நோர்வேயின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

## நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகத்தால் ஏற்றமிகு இளைஞர் விருது பெற்ற வைத்திய கலாநிதி எஸ்.சிவதாஸ் எழுதிய மகிழ்வுடன் என்ற நூலின் மூன்றாவது பதிப்பின் அறிமுக விழா நாளை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வைத்திய கலாநிதி பூ.லக்ஸ்மன் அறிமுக உரையையும், கத்தோலிக்க கலை இலக்கிய வட்டச்செயலர் ஜோசப் பாலா வாழ்த்துரையையும், கலாநிதி ஆறு திருமுருகன் நயப்புரையையும் வழங்கவுள்ளனர்.

தமிழ் சமுதாயத்தில் மகிழ்வுடன் வாழ்தல் சாத்தியமா? என்ற விடயம் பற்றி நூலாசிரியர் வைத்திய கலாநிதி எஸ்.சிவதாஸ் சிறப்புரையாற்றவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (பா-11)

## மண்டைதீவில் கட்டாக்காலி மாடுகள் நெல்வயல்கள் சேதம்-விவசாயிகள் சோகம்

மண்டைதீவில் கட்டாக்காலி மாடுகளால் நெல்வயல்கள் அழிக்கப்பட்டு வருவதாக அப்பகுதி விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த இருபத்தொரு வருடங்களுக்கு பின்னர் இம்முறை நெல் விதைக்கப்பட்டபோதிலும் கட்டாக் காலி மாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமையால், நெல் வயல்கள் அழிவடைந்து வருவதாகவும்,

எனவே உடனடியாக கட்டாக் காலி மாடுகள் விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ரு)

## நினைவஞ்சலி நிகழ்வு

(வவுனியா)

வவுனியா விவசாய கல்லூரி வளாகத்தினுள் 2006ஆம் ஆண்டு நவம்பர் 18ஆம் திகதி நடந்த குண்டு வெடிப்பில் உயிர்நீத்த மாணவர்களான தி.சிந்துஜன், இ.அச்சுதன், ச.கிந்துஜன், தி.கோபிநாத், எச்.எஸ்.றிஸ்வாட் முகமட் ஆகியோரின் சிரார்த்த தினமும் நினைவஞ்சலி நிகழ்வும், கல்லூரி பொது மண்டபத்தில் எதிர் வரும் 18ஆம் திகதி காலை 11 மணியளவில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் நிகழ்வில் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (பா-11)


**மனோதத்துவ வைத்தியம்**
(General Psychotheraphy)
பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P.ஆறுமுகம்**
T.P.: 0719315664 , 0777569205
**மீண்டும் யாழில்**
**10.11.2011 முதல் 16.11.2011 வரை 7 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-**

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா ,மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளை படுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம்,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். குழந்தைப் பேறின்மை - பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

கமர்ல் ரூரிஸ் இன் (சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்)
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்குமிடையில்,
392, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(C-4954)



**உடனடி வேலைவாய்ப்பு**
யாழ்ப்பாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் சர்வ தேச நிறுவனமான Thailand marketing company க்கு முகாமைத்துவ பயிற்சியாளர்கள் தேவை. (O/L,A/L)சித்தி உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். அனுபவம் அவசியமற்றது. தங்குமிடவசதி இலவசம். 6மாத கால பயிற்சி. பயிற்சியின் போது (12000,15000) வரை வழங்கப்படும்.
தொடர்பு: 0771363797, 0776219536, 0772151014
(6780)



**இலவசம்.....இலவசம்.....இலவசம்....**
இலங்கையில் முதன் முறையாக நவீன இயந்திரங்களின் உதவியுடன் கரிஷ்மா அல்பத்தினை (With out cover) இலவசமாக கட்டி பெற்றுக்கொள்ளலாம்.
பிரதியாக்கங்களிற்கு மட்டுமே பணம் செலுத்தினால் போதும்.






UV
8X12,10X15 - 10/=
10X30,12X30 - 15/=
(எங்களிடம் தொகையாக பிரதி செய்வோருக்கு மட்டும்)
Befor : Rs. ~~50000~~ After : Rs.10000
மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்
62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இ. 021 222 1358



**ஆண்டு நான்கின் நினைவு அஞ்சலி**
12.11.2007
திருமதி செல்லத்துரை தங்கம்மா



நாட்கள் நகர்ந்தன
என் இடர் தான் அகலவில்லை
உரிமையை இழந்தேன் உறவைப் பிரிந்தேன்
நின் நினைவை மட்டும் இழக்கவில்லை அன்னையே
நெஞ்சிருக்கும்வரை நின் நினைவிருக்கும்
நின் ஆத்மா சாந்திபெற வல்லசக்தி
ஸ்ரீராஜ ராஜேஸ்வரி கண்ணகி அம்பாளை
நிதம் வேண்டுகின்றேன்
என்றும் நின் துயரில் வாழும் நின் சேய்
செ.பவானி (ஆசிரியை), ஏழாலை சிறிமுருகன் வீதி.

## இன்று ஒரு தகவல்

# நிழல் மனிதர்கள்!

ஒருவன் வேகமாக ஓடி வந்தான். "ஏன் இப்படி தலை தெறிக்க ஓடி வருகிறாய்?'' என்று கேட்டேன்.

''பின்னால் துரத்திக்கொண்டு வருகிறது சேர்!'' ஏதாவது நாய் துரத்திக் கொண்டு வருவதுபோல நினைத்து அவனுக்குப் பின்னால் பார்த்தேன். கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் எதுவுமே தெரியவில்லை.

"ஏதுவும் உன்னைத் துரத்தவில்லையே...?" என்றேன்.

"நன்றாக பாருங்கள் சேர்" என்றான்.

"பார்த்துவிட்டுதான் சொல்கிறேன்" என்றேன்.

"இதோ பாருங்கள் சேர்! இதுதான் என்னைத் துரத்தியது'' என்றான். அவன் சுட்டிக்காட்டிய இடத்திலே பார்த்தேன். அங்கே அவனுடைய நிழல்தான் தெரிந்தது.

"என்னப்பா சொல்கிறாய்?'' என்று அவனைச் சற்று பார்த்தேன். அதன்பின்புதான் அவன் விபரமாகச் சொன்னான்.

"சேர்... எனக்கு நிழலைக் கண்டால் பிடிக்கிற தில்லை... எப்போது பார்த்தாலும் இது என்னையே பின் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது... இதை என்னால் சகிக்கவே முடியவில்லை... என்னிடமிருந்து பிரிப்பதற்கு எவ்வளவோ முயற்சிகள் எல்லாம் செய்து பார்த்துவிட்டேன்... முடியவில்லை!'' என்றான்.

"அப்படி என்னென்ன முயற்சிகள் செய்தாய்?'' என்று கேட்டேன். அவன் அனைத்தையும் விபரமாகச் சொன்னான்.

அவன் என்ன செய்துள்ளான் தெரியுமா? ஒரு பெரிய குழியைத் தோண்டி அதிலே தன்னுடைய நிழலைப் புதைத்து விடலாம் என நினைத்து... மண்வெட்டியை எடுத்துக் கொண்டு தோட்டப்பக்கமாகச் சென்றான்.

ஆழமாக ஒரு குழியைத் தோண்டினான். குனிந்து பார்த்தான். அந்தக் குழியினுள் தன்னுடைய நிழல் தெரிந்தது.

ஆகா... இதுதான் சமயம்... நிழல் இப்போது குழிக்குள்ளே இருக்கிறது. மண்ணைப் போட்டு மூடி விடலாமென்று நினைத்துக் கொண்டு சிறிது மண்ணை அள்ளிப் போட்டான். பார்த்தால்... இப்போது நிழல் அந்த மண்ணுக்கு மேலே தெரிந்தது.

இது என்ன வம்பாப் போச்சு... என்று அவசர அவசரமாக மண்ணை வாரிப் போட்டான். குழி பூராகவும் மூடிப் போட்டு பார்க்கிறான்... மறுபடியும் நிழல் மேலே வந்து உட்கார்ந்திருக்கிறது!

சரி... இதை குழியிலே புதைக்க முடியாது என்று முடிவு செய்தான். இதை இங்கேயே இப்படியே விட்டு விட்டு ஓடிப் போயிடுவோம் என்று நினைத்து எடுத்தான் ஓட்டம்.

அது காலை நேரம். இவன் மேற்கே நோக்கி ஓடிக் கொண்டிருந்தான். ஓடி ஓடிப் பார்க்கிறான். நிழல் இவனை விட வேகமாக இவனுக்கு முன்னே ஓடிக் கொண்டி ருந்தது.

சரி... திரும்பி ஓடிப் பார்ப்போம் என்று நினைத்துக் கொண்டு அப்படியே சட்டென்று திரும்பி ஓட ஆரம்பித் தான்.

அப்பாடா... நிழலைக் காணவில்லையே... சிறிது தூரம் ஓடி ஒரு இடத்திலே நின்று சாவகாசமாகத் திரும்பிப் பார்க்கிறான். பின்னாலே நிழல் துரத்துவதை அவதானித்தான்.

இப்படியாக ஓடி வந்தான். தன்னுடைய அவஸ்தையைச் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

"இந்த நிழலைத் துரத்தி அல்லது வெட்டிவிட ஏதாவது ஒரு வழி சொல்லுங்கள் சேர்!" என்றான்.

அச் சமயம் பார்த்து ஒரு பெரியவர் வந்தார். அவரிடம் யோசனை கேட்டேன்... என்ன செய்யலாமென்று அவர் சொன்னார். "நீ அங்கேயும் இங்கேயும் ஓடாதே... அப்படியே கீழே படுத்துக்கொள்!'' என்றார்.

அது நல்ல உச்சிவேளை. அவன் கூறியதன்படியே படுத்தான். இப்படியும் அப்படியும் திரும்பிப் பார்த்தான். நிழலைக் காணவில்லை. அவுன் இப்போதுதான் நிம்மதியாக இருந்தான்.

உடனே அந்த பெரியவர் சொன்னார்; எல்லா மனிதர்களுமே இப்படித்தான் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். நான் என்ற ஆணவம்தான் அவர்களை துரத்திக்கொண்டிருக்கிறது. அதைவிட்டுவிட்டு ஓட வேண்டும் என்று நினைத்தாலும் அது முன்னால் வந்து நிற்கிறது.

பரம்பொருளை நோக்கி ஓடும் போது இந்த ஆணவம் பின்னால் வந்து விடும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தொழில்நுட்பத்துறையின் வளர்ச்சி மாணவர்களின் வாசிப்பு பழக்கத்தினை சிதைக்கின்றது

## வடமாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர்

(மருதங்கேணி)

முப்பரிமாண இலத்திரனியல் சாதனங்களின் வருகையால் மாணவர்கள் வாசிப்பதில் அதிகம் ஆர்வம் காட்டுவதில்லை. இது மாணவர்களுக்கு மட்டுமல்லாது பெரியோர்களுக்கும் பொருந்தும்.

இவ்வாறு நெல்லை லதாங்கியின் மீண்டும் வசந்தம் சிறுகதை தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய வடமாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தொலைக்காட்சி திரைப்படம், கையடக்கதொலைபேசி போன்ற தொழில்நுட்பங்களின் வருகையினால் மாணவர்கள் மாத்திரமின்றி பெரியவர்களும் அவற்றில் மூழ்கி தமது கற்பனை வளத்தை இழந்து விடுகின்றனர். வாசிப்பதன் மூலமே அதன் தொடர்பில் கற்பனை வருகின்றது. இக் கற்பனை அவர்களின் சிந்தனையை தூண்ட ஏதுவாகின்றது. முப்பரிமாணங்களின் படங்கள் மூலம் கற்பனைக்கு இடமில்லாது முழுவதுமே கட்புல காட்சியாக காட்டப்படுவதால் கற்பனை செய்வதற்கு அங்கே இல்லாது போகின்றது.

கற்பனை இல்லாத போது புத்தாக்கத்திற்கு இடமில்லை. எனவே, இன்றைய பெற்றோர்கள் தமது பிள்ளைகளை படைப்பாக்கத்திறன் கொண்டர்களாக வளர்க்க வேண்டும். இதற்கு பெற்றோர்கள் ஒரு நாளில் அரை மணி நேரமாவது நூல்களை வாசிக்கவேண்டும்.

தமது பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக இருத்தல் வேண்டும். இத்தகைய ஒரு பின்புலத்தில் வாசிப்பதற்கு தூண்டுதலை ஏற்படுத்தக்கூடிய வகையிலான மொழிவளத்தை கையாளும் கற்பனைத்திறன் கொண்ட கதைகளை உருவாக்க வேண்டும்.

முன்னைய காலங்களில் 4 பக்கம், 8பக்கம் கொண்டு வெளிவந்த பத்திரிகைகள் இன்று 20 பக்கம்கொண்டு வெளிவருகின்றபோதிலும் மக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் குறைவடைந்து செல்கின்றது என்பது மிக மன வருத்தத்தை தருகின்றது என்றார். இந்நிகழ்வில் கலந்து கொண்ட கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(அ-35)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் மின்னியலாளர் பயிற்சி நெறிக்கு (NVQ சான்றிதழ்) யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி இலவசப் பயிற்சி நெறிக்கு இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான கல்வித் தகைமையாக க.பொ.த.(சா/த) வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பத்தாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 தொடக்கம் 35 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

எனவே, இதற்கு தகுதி உடையோர் முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள் என்பவற்றைக் குறிப்பிட்டு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர், NAITA ,இல.7 கோவில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார்.

(அ-2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 140 | 130 |
| உருளைக்கிழங்கு | 75 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 180 | 180 | 150 |
| தக்காளி | 110 | 120 | 80 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 40 | 30 |
| கோவா | 40 | 60 | 30 |
| கரட் | 100 | 120 | 120 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 70 | 100 | 50 |
| வாழைக்காய் | 35 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 90 | 90 |
| பெரிய வெங்காயம் | 75 | 70 | 80 |
| பாகற்காய் | 220 | 180 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 70 | 90 | 60 |
| பயற்றங்காய் | 120 | 90 | 100 |
| லீக்ஸ் | 40 | 40 | 40 |
| பீற்றூட் | 20 | 20 | 30 |
| கறிமிளகாய் | 100 | 130 | 120 |
| முருங்கைக்காய் | 30 | 60 | 50 |
| போஞ்சி | -- | 140 | 100 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 70 |
| கீரை - 1 பிடி | 15-18 | 40 | 15 |
| தேசிக்காய் | 220 | 200 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 20-30 | 30 | 30 |

# இராசி பலன்

*12.11.2011*

*(ஐப்பசி 26, சனிக்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு*

*துதியை பின்னிரவு 5.39 மணிவரை*

*கார்த்திகை முற்பகல் 10.14 மணி வரை*

*இராகுகாலம் 9.06-10.36 மணிவரை*

*சுபநேரம் 3.06-4.36 மணிவரை*

**மேடம்** நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் உறுதுணை புரிவர், அடிப்படை வசதிகளைப் பெருக்கிக்கொள்ள முன்வருவீர்கள்.

**இடபம்** குடும்பப் பொறுப்புக்கள் அதிகரிக்கும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், உடல் நலம் சீராகும், போசன சுகமுண்டு, தெய்வ சிந்தை மேலோங்கும்.

**மிதுனம்** விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்ச்சி தேவை, இடமாற்றம், ஊர் மாற்றம் செல்லும் எண்ணம் தோன்றலாம், சயன சுகக் குறைவான நாள், எடுத்த காரியங்களில் சற்று தாமதங்கள் ஏற்படலாம்.

**கடகம்** கலகலப்பான செய்திகள் வந்து சேரும் நாள், நீண்ட தூரம் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், தொழிலில் வருமானம் அதிகரிக்கும், உறவினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை அமையலாம்.

**சிங்கம்** முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், தொழிலில் எதிர்பாராத இலாபங்கள் கிடைக்கலாம், அந்நியர் உதவியுண்டு, பம்பரமாகப் பணி புரிந்து பாராட்டுப் பெறுவீர்கள்.

**கன்னி** பற்றாக்குறை அகன்று பண வரவு கிட்டும் நாள், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், தந்தை வழியில் தனவரவுண்டு, புதிய திட்டங்கள் கைகூடும்.

**துலாம்** வாழ்க்கைத் துணை வழியே விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது, கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், தொழில் நன்மை கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**விருச்சிகம்** உறவினர் வருகையால் உற்சாகமடையும் நாள், தொழில் வளர்ச்சிக்கு மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்பு நல்குவர், வெளியூர்த் தொடர்புகளால் நன்மையுண்டு.

**தனுசு** ஆரோக்கியம் சீராகி ஆனந்தடைவீர்கள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்** பிள்ளைகள் வழியில் பெருமையான செய்திகள் வந்து சேரலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், மறைமுகப் போட்டிகள் மாறும், பிறருக்காக பொறுப்புச் சொல்லி கொடுத்த தொகை வந்து சேரலாம்.

**கும்பம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், பெற்றோர் வழியில் ஏற்பட்ட தகராறுகள் அகலும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்** உடன் பிறப்புக்களின் ஆதரவு பெருகும் நாள், வருமானம் திருப்தி தரும், குடும்பத்தினர் விட்டுக் கொடுத்து நடந்து கொள்வர், நீண்ட நாளைய பிணக்குகள் முடிவுக்கு வரலாம்.

வளவன்

# நடைபாதைக்கு ஓரமாக வியாபாரம் செய்தவர்களுக்கு எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சந்தை மற்றும் அதனை அண்மித்த வர்த்தக நிலையங்களில் நடைபாதைக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் மரக்கறிகளை நல்லூர் பிரதேசசபை பறிமுதல் செய்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. நல்லூர் பிரதேச சபையினால் பலமுறை அறிவிக்கப்பட்டிருந்த போதும் நடைபாதைக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் பொருட்களை வைத்து வர்த்தக நடவடிக்கையில் வியாபாரிகள் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இதனை அடுத்து நேற்று காலை சந்தையில் இருந்து பல பொருட்கள் நல்லூர் பிரதேச சபையினால் பறிமுதல் செய்யப்பட்டது.

பறிமுதல் செய்யப்பட்டவைகளில் மரக்கறி வகைகளே அதிகமாக காணப்பட்டன. வியாபாரிகள் தொழில் நடவடிக்கை பாதிக்கப்படும் எனக் கருதி பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் மீளவும் அதன் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டது.


இருப்பினும் நடைபாதைக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் பிரதேச சபை அதிகாரிகளினால் அறிவுறுத்தப்பட்ட பின்பே பொருட்கள் கையளிக்கப்பட்டன.

பொருட்களை பிரதேச சபை பறிமுதல் செய்ததனால் வர்த்தகர்களிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டதோடு சில மணிநேரம் கடைகளை அடைத்து எமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

பொருட்கள் மீண்டும் கொடுக்கப்பட்ட பின்பு வியாபார நடவடிக்கைகள் வழமை போல தொடர்ந்து இடம் பெற்றன. (அ-6)

# பேருந்து தரிப்பிடத்தை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(கரவெட்டி)



மாலுசந்தி பகுதியில் உள்ள பஸ் தரிப்பு நிலையம் நீண்டகாலமாக புனரமைக்கப்படாமையால் அப்பகுதி மக்களும் பயணிகளும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மேற்படி பகுதியில் உள்ள பஸ்தரிப்பு நிலையமானது புனரமைக்கப்படாமையால் பயணம் செய்யும் பயணிகள் அவல நிலைக்குள்ளாக்கப்படுகின்றனர்.

மேற்குறித்த இடத்தில் உள்ள பயணிகள் கடைகளிலும் வீதியோரங்களிலும் மழை, வெயில் என்று பாராது ஒதுங்கி நின்று பயணம் செய்ய வேண்டியுள்ளது.

பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய பிரதேசங்களில் உள்ள மக்களே கூடுதலாக இப் பஸ்தரிப்பு நிலையத்தை பயன்படுத்துகின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இப் பஸ்தரிப்பு நிலையத்தை புனரமைத்து மக்கள் தரித்து நின்று பயணிப்பதற்கு உதவுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-3-24)

# நவிண்டில் கலைமதி அணி இறுதிபோட்டிக்குத் தெரிவு

(கரவெட்டி)

கம்பர்மலை யங்கம்பஸ் உதைபந்தாட்டப் இறுதிப்போட்டிக்கு நவிண்டில் கலைமதி அணி தெரிவாகியுள்ளது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கிற்கு உட்பட்ட 24 கழகங்கள் பங்குபற்றிய அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் முதலாவது அரையிறுதி ஆட்டம் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் வதிரி.டயமன்ஸ் அணியை 2:0 என்ற கோல்கணக்கில் நவிண்டில் கலைமதி அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது. (அ-3-24)

# பேருந்து சேவையை சீராக நடத்த மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

எழுதுமட்டுவாழ் பகுதியில் மீள்குடியேறியுள்ள குடும்பங்களில் இருந்து சாவகச்சேரியில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கு கல்வி கற்பதற்காக வரும் மாணவர்களுக்கு பாடசாலை பேருந்து சேவையை ஒழுங்குபடுத்தித் தருமாறு மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




இப்பாடசாலை பேருந்து சேவையானது தற்போது மிருசுவில் வரை நடைபெற்று வருகிறது. மாணவர்கள் எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் இருந்து மிருசுவில் வரை நடந்து வந்தே பாடசாலை பேருந்தில் பயணிக்க வேண்டிய அவலநிலை உள்ளது.

எனவே, மேற்குறித்த பகுதியில் மீள்குடியேறியுள்ள மாணவர்களின் நலன் ருதி மிருசுவில் வரை நடைபெறும் பாடசாலை பேருந்து சேவையை எழுதுமட்டுவாழ் பகுதி வரை ஏற்படுத்தி தருமாறு மக்களும் அப்பகுதி பாடசாலை மாணவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-29)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் வித்தியாலய அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கல்வியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் சட்டத்துறைத் தலைவருமான கலாநிதி த.கலாமணி, சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் ப ணி ப்பாளர் செ. குபேரநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் நினைவுப்பேருரையினை முன்னாள் வித்தியாலய ஆசிரியரும்உடுவில் அ.மி.த.க.பாடசாலை அதிபருமான செ. முரளிமோகன் ஆற்றவுள்ளார். மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி கியூ.கலாமணி வழங்கிவைப்பார். (அ-2)

# கடற்றொழில் உபகரணங்கள் வ்ழங்கும் நிகழ்வு

(பொற்பதி)

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் மீள்குடியேற்ற அமைச்சின் நிதியுதவியுடன் வடமராட்சி கிழக்கின் கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்குட்பட்ட பயனாளிகளுக்கு கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் நாளை ஞாயிற்றுக்கிழமை 10.30 மணிக்கு ஆழியவளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளதாக வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையால் தெரிவித்துள்ளனர்.

இவ்உதவிகள் மேற்குறிப்பிட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்திற்குட்பட்ட வெற்றிலைக்கேணி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், ஆழியவளை தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகிய கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களிற்கே வழங்கப்படவுள்ளது.

ஒவ்வொரு சங்கத்திலிருந்தும் 40 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு கட்டுமரம், வலைத் தொகுதி என்பன வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-64)

# படகு இயந்திரங்களை தவறவிட்டோருக்கு

யுத்தத்தின் பின் கைவிடப்பட்டு வடமராட்சி கிழக்கின் கட்டைக்காடு பகுதியில் ஒன்று சேர்த்து வைக்கப்பட்டுள்ள படகு இயந்திரங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி வழங்கப்படவுள்ளதாக அப்பிரதேச இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.


எனவே படகு இயந்திரத்திற்கு உரியவர்கள் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளுமாறு இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-3-64)

# முன்னோடிப் பரீட்சை

(சாவகச்சேரி)

இன்றைய இளைஞர்களின் நாளைய அமைப்பினால் தென்மராட்சி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் காலை 8 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் 11.30 மணி வரை ஆங்கிலம், பிற்பகல் 12.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை விஞ்ஞானம், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 11.30 மணிவரை கணிதம், பிற்பகல் 12.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை தமிழ் ஆகிய பரீட்சைகள் நடைபெறவுள்ளன. (அ-3-29)





வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தின் பிரதேச பண்பாட்டு பெரும் விழா பர்வதவர்த்தினி கலா மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.செல்வதீபன்)

# போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தெளிவான பதில் வழங்கப்பட்டுள்ளது

## நாமல் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள யுத்தக் குற்றச்சாட்டுக்கள் 2018 இல் இடம்பெறவுள்ள பொதுநலவாய விளையாட்டுப் போட்டியை நடத்தும் வாய்ப்பைப் பெறுவதற்கு பிரச்சினையாக இருக்காது என்று இலங்கை ஜனாதிபதியின் மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

2013 இல் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்பின் அடுத்த உச்சி மாநாட்டை இலங்கையில் மேற்கொள்வதற்கான தமது அதிகாரத்தை பேர்த்தில் கலந்து கொண்டிருந்த இதன் தலைவர்கள் வழங்கியிருந்தனர். பேர்த்தில் இடம்பெற்ற உச்சி மாநாட்டில் பொது நலவாய அமைப்பின் உறுப்பு நாட்டுத் தலைவர்கள் அனைவரும் 2013 இல் இந்த மாநாட்டை இலங்கையில் நடத்துவதென்று ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இதன்மூலம் இலங்கை மீது முன்வைக்கப்பட்ட யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை என்பது தெளிவாகியுள்ளது என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பேர்த்தில் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அதில் கலந்து கொண்டிருந்த நாட்டின் தலைவர்கள் பல கடினமான கேள்விகளை எழுப்பியிருந்தனர். இதற்கான திருப்திகரமான பதில்களை எனது தந்தையார் வழங்கினார்.

இந்தப் போர்க்குற்றச்சாட்டு தொடர்பான கேள்விகளுக்குத் தெளிவான பதிலைத் தெரிவிக்காது விட்டிருந்தால் அடுத்த உச்சி மாநாட்டை நாங்கள் இலங்கையில் நடத்தியிருக்க முடியாது.

ஆகவே இது 2018 இல் அம்பாந்தோட்டையில் விளையாட்டுப் போட்டிகளை மேற்கொள்வதற்குப் பிரச்சினையைத் தரமாட்டாது. ஆனால் நாங்கள் இங்கே தெளிவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டியுள்ளது.

இது விளையாட்டு அரசியலல்ல. விளையாட்டு விளையாட்டாகவும் அரசியல் அரசியலாகவும் இருக்க வேண்டும். இவ்விரண்டையும் கலக்க முயற்சிக்கக் கூடாது எனவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

2018 இல் அம்பாந்தோட்டையில் விளையாட்டை மேற்கொள்வதற்கான தீர்மானத்தை வலுப்படுத்துவதற்கான குழுவில் வேகப்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் உட்பட பலர் ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கரிபியன் தீவில் மேற்கொள்ளப்படும் வாக்களிப்பில் இலங்கையில் அம்பாந்தோட்டை நகரம் வெற்றியைப் பெறும் என்ற நம்பிக்கை அதிகரித்துள்ளதாகவும் இதற்காக இதுவரையில் இலங்கையில் வாக்களிப்பதற்காக 71 வாக்காளர்களின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சியில் இறங்கியுள்ளதாகவும் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார். (அ-2)

# மின்தடை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதனால் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சி பிரதேசம், புன்னாலைக்கட்டுவன் வடக்கு, தெற்கு, மயிலங்காடு பிரதேசத்தின் ஒரு பகுதி, ஈவினை பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (அ-2)

# 110 மில்லியன் டொலர் நிதியினை இலங்கைக்கு இந்தியா வழங்கியது



(கொழும்பு)

17 ஆவது சார்க் மாநாடு நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில் கலந்து கொள்வதற்காகச் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் ஆகியோருக்கிடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

அச் சந்திப்பின் போது வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீள்குடியேற்றம் இந்திய அரசாங்கத்தினால் வழங்கி மேற்கொள்ளப்பட்டு வரும் 50 ஆயிரம் வீட்டு திட்டம் மற்றும் இனப்பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இரு நாட்டு கடற்றொழிலாளர்கள் முகங்கொடுத்து வரும் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதனிடையே மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக இலங்கைக்கு 110 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் இச்சந்திப்பின் மூலம் முன்வந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# துறைமுக அதிகார சபையில் மேலதிகமாக 2000 ஊழியர்கள்

இலங்கை துறைமுக அதிகாரசபையில் தேவைக்கு அதிகமாக 2 ஆயிரம் பணியாளர்கள் கடமையாற்றுவதாகவும் இதனால் வருடாந்த அடிப்படையில் அவர்களுக்கான சம்பளம் வழங்குவதில் பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகார சபையில் மேலதிகமாக பணியாளர்கள் காணப்பட்டபோதிலும் கடந்த இரு வருடங்களாக 500 பணியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். துறைமுக அதிகார சபை நட்டத்தில் இயங்குகின்றதெனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும் திருகோணமலை துறைமுகத்திற்குச் சொந்தமான காணி சொத்துக்கள் எந்தவித ஒப்பந்தமுமின்றி இரு தனியார் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# நிறுவனங்களை சுவீகரிக்கும் செயற்பாட்டை நிறுத்துங்கள்

## ஐ.தே.எம்.பி. கோரிக்கை

சிம்பாப்வே தலைவர் ரொபர்ட் முகாபேயோ அந்நாட்டின் வெள்ளையர்களுடைய நிலங்களைப் பறித்து கறுப்பினத்தவர்களுக்கு வழங்கினார்.

நமது நாட்டு முகாபேயோ இலங்கையரின் நிலங்களை அபகரித்து வெளிநாட்டவருக்கு விற்றுவருகிறார் என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் கடந்த காலங்களில் பெறுமதியான காணிகள் வெளிநாட்டவர்களுக்கு விற்கப்பட்டுள்ளன.

அதேபோன்று பல்வேறு நிறுவனங்களை அரசு சுவீகரித்துள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# சந்தேக நபராக குறிப்பிடப்படாத துமிந்த எங்கும் சிகிச்சை பெறலாம்

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு




(கொழும்பு)

பாரத லக்ஸ்மனின் கொலை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா சந்தேக நபராக பொலிஸாரால் பெயரிடப்படவில்லை. எனவே அவர் எந்த நாட்டிலும் எந்த வைத்தியசாலையிலும் சிகிச்சை பெறுவதற்கு நீதிமன்றத்தின் அனுமதி கிடையாது என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சாதாரண நபர் ஒருவர் வெளிநாட்டுக்குச் சென்று சிகிச்சை பெறுவதற்கு எந்த இடத்திலும் அனுமதி பெற வேண்டியதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

துமிந்த சில்வா எம்.பி. வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றத்தின் அனுமதி பெற்றாரா என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். (அ-2)



சுன்னாகத்தில் அமைந்துள்ள வாழ்வகம் விழிப்புலனற்றோர் இல்லத்தின் கட்டட திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன், வாழ்வக பொறுப்பதிகாரி கே. ரவீந்திரன், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி வி.ரமேஷ் ஆகியோர் இணைந்து நாடாவெட்டி வைப்பதையும் கலந்து கொண்ட வாழ்வக சிறுவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)





யா /வயாவிளான் மத்திய மகா வித்தியாலய நவோதய பாடசாலையில் பிரதீபா பிரபா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர்களுக்கான பாராட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விழா நாயகர்கள் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வடமாகாணத்தின் சிறந்த அதிபராக கௌரவிக்கப்பட்ட க.கனகராசாவுக்கு பிரதம விருந்தினர் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பேராசிரியர் க.தேவராஜா பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் :- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

## பஜனை

(யாழ்ப்பாணம்)

உலகம் முழுவதும் அமைதியும் சாந்தியும் நிலவவேண்டும் என்பதற்காக 175 நாடுகளிலுமுள்ள பல்லாயிரக்கணக்கான சாயி நிலையங்களில் ஒரேநேரத்தில் 24 மணி நேர பஜனை நடைபெறுவதற்கு பகவான் ஸ்ரீசத்திய சாயி பாபா நிலையத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இதற்கமைய யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 6 மணி தொடக்கம் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6 மணி வரை பல்வேறு நிலைய அன்பர்கள் பஜனைகளை ஒழுங்குகள் செய்துள்ளனர்.

இதில் ஒவ்வொரு நிலையங்களுக்கும் அன்பர்களுக்கும் நேரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக இல 166/5, சேர் பொன் இராம நாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-2)

## கருத்தரங்கு

இலங்கை இந்திய நட்புறவின் அடிப்படையாக யாழ். பல்கலைக்கழகத்தில் இந்தியாவின் அயல் நாட்டுக்கொள்கைகளும் இந்திய-இலங்கை உறவும் எனும் கருத்தரங்குநடைபெறவுள்ளது. இதனை இலங்கைக்கான இந்தியத் தூதுவரும் முன்னாள் இந்திய வெளியுறவுத்துறை செயலாளரும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிற்கான தகவலாய்ச்சி மைய உரிமையாளருமான அம்பா சிடர் சியாம் சரண் நிகழ்த்தவுள்ளார்.

இக்கருத்தரங்கானது நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு கௌரவ விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ)

## இரணைப்பாலையில் 128 குடும்பங்களை மீள்குடியேற்றம் செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இரணைப்பாலை கிராம அலுவலகர் பிரிவில் எதிர்வரும் 20 ஆம் திகதி ஒரு தொகுதி இடம் பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்படவுள்ளனர்.

வவுனியா செட்டிக்குளம் மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளவர்களில் 128 குடும்பங்கள் அவர்களின் சொந்த இடமான இரணைப்பாலை கிராம அலுவலர்கள் பிரிவில் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.பத்திநாதன் தெரிவித்தார்.

வவுனியா செட்டிக்குளம் மெனிக்பாம் நலன்புரி நிலையத்தின் வலயம் -0 இலிருந்து 61 குடும்பங்களை சேர்ந்த 182 பேரும் வலயம் ஒன்றிலிருந்து 77 குடும்பங்களைச் சேர்ந்த 214 பேரும் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர்.

மீள்குடியேற்றத்திற்காக அழைத்துவரப்படவுள்ள இக்குடும்பங்கள் இரணைப்பாலை மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கான உணவும் வழங்கப்பட்டு அவர்களின் சொந்த இடங்களில் மீள் குடியேற்றப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

மெனிக்பாம் நலன்புரிநிலையத்திலிருந்து இந்த மக்களை அழைத்து வருவதற்கும் அவர்களின் உடைமைகளை ஏற்றிவருவதற்குமான போக்குவரத்துச் சேவையை புலம் பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்பு வழங்குமெனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## மிஹின் லங்கா விமான சேவையால் 680 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது

### விஜித ஹேரத் எம்.பி.தெரிவிப்பு

மிஹின் லங்கா விமான சேவையினால் கடந்த நான்கு வருடங்களில் 680 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. அதேபோன்று ஹெஜிங் ஒப்பந்தம், ஐஃபா களியாட்டம் உட்பட இறுதியாக நடைபெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளினாலும் பாரியளவிலான நிதி மோசடி செய்யப்பட்டும் வீண் விரயமாக்கப்பட்டும் உள்ளது. இதனால் நாட்டில் மேலும் பாரிய நிதி மற்றும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று ஜே.வி.பி குறிப்பிட்டுள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கெண்டு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இத்தகவலை வெளியிட்டார். (அ)

## முல்லை.மாவட்ட அரச திணைக்களங்களுக்கு அரச அதிபர் வெற்றிக் கிண்ணப்போட்டி

(மல்லாவி)

முல்லை. மாவட்ட அரச திணைக்களங்களுக்கிடையிலான அரச அதிபர் வெற்றிக் கிண்ணப்போட்டி இம்முறை முல்லை.மாவட்டத்தில் முதன்முறையாக நடத்தப்படுகின்றது. இப் பெருவிளையாட்டுக்களில் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், மென்பந்து, துடுப்பாட்டம் என 4 விளையாட்டுக்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

கரப்பந்தாட்டபோட்டியில் 9 அணிகளுடன் மோதி கரைதுரைப்பற்று உதவி அரசாங்க அதிபர் செயலக அணியும் மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் செயலக அணியும் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளன.

இக்கரப்பந்தாட்டத்திற்கான இறுதிப்போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முல்லை.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் சிறிஸ்லம்போட் கரைதுறைப்பற்று விளையாட்டு உத்தியோகத்தர் கே.மாதவஜெயப்பிரதாப் ஆகியோர் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ-3-15)

## நீதிமன்றத்தால் அபராதம்

(கிளிநொச்சி)

5 போத்தல் கோடாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு 25 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 6 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

(கிளிநொச்சி)

அனுமதிப்பத்திரம் இன்றி அரச சாராயத்தை விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சி மதுவரித்திணைக்களத்தால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு 3 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 2 வார சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (அ-3)

* * * * * *

(சாவகச்சேரி)

நுளம்பு பெருக்கத்திற்கு ஏற்ற வகையில் நீர் தேங்கி நிற்கக் கூடியவாறு வீட்டுவளவில் கழிவுப் பொருட்கள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இருநபர்கள் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் செல்லையா கணபதிப்பிள்ளை குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிகளெனக் கண்டு இருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் தலா 2 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

21 வயதிற்குட்பட்ட இளைஞர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் 17 வர்த்தகர்கள் சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் செல்லையா கணபதிப்பிள்ளை குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிகளெனக் கண்டு 17 வர்த்தகர்களுக்கும் தலா 2 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் தலா ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (அ-3-29)

## நிவாரணம் வழங்குவது குறித்து வரவு-செலவு திட்டத்தில் கவனம்

### பி.பி.ஜெயசுந்தர தெரிவிப்பு

வரவு-செலவுத்திட்ட தாயரிப்பு தொடர்பாக பல்வேறு குழுக்களிடமிருந்து அபிப்பிராயங்களைப் பெறும்பணி தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது.

சேரியின் செயலாளர் கலாநிதி பி.பி.ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

வர்த்தகர்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்

உற்பத்தித்துறையை, புடைவைத் தொழில்துறையைதொடர்ந்து வகைப்படுத்தலானது வரிச்சலுகைகள் பெறுவதில் கஷ்டத்தை ஏற்படுத்துகிறது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த தொழில் தொடர்பாக ஆய்வுகளை நடத்துவதற்கு மிக கூடுதலான செலவீனம் ஏற்படுவதும் ஒரு கஷ்ரமாகவுள்ளது.

இந்த பிரச்சினைகளுக்கு நிவாரணம் வழங்க வரவு-செலவுத்திட்டம் கவனம் செலுத்துமென்று துறைசாரியின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்திற்கான உரை பாராளுமன்றத்தில் இம்மாதம் 21 ஆம் திகதி நிகழ்த்தப்படும்.

வரவு-செலவுத்திட்ட விவாதத்திற்கு 7 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இரண்டாவது வாசிப்பு 30 ஆம் திகதி இடம்பெறும். குழுநிலை விவாதம் 17 நாட்களுக்கு இடம்பெறும். மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு அடுத்த மாதம் 21 ஆம் திகதி நடைபெறும். (அ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை செஞ்சிலுவை சங்கம்,
சண்டிலிப்பாய் பிரிவுத் தொண்டர்

**நே.மதியரசன்**

07.11.2011 அன்று BMICHல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டம் பெற்றமையினை பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர் மேலும் பல பட்டங்களை பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
இலங்கை செஞ்சிலுவை சங்கம்,
சண்டிலிப்பாய் பிரிவு.

(6781)

# இலங்கைக்கு மின்சாரம் வழங்கவே கூடங்குள அணுமின் நிலையம்

## தமிழர்களின் தலைக்கு வந்தது ஆபத்து என்கிறார் வைகோ



(கொழும்பு)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளர்கள் ஆட்சிமன்றக்குழு அரசியல் ஆலோசனைக்குழு அரசியல் ஆய்வு மைய உறுப்பினர்கள் கூட்டம் வியாழக்கிழமை அக்கட்சியின் பொதுச் செயலர் வைகோ தலைமையில் நடைபெற்றது.

இதில் கூடங்குளம் அணு மின் நிலையத்துக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விபரம்.

ஏற்கனவே கோடிக்கணக்கில் பணம் செலவழிக்கப்பட்டு விட்டது என்று அரசு கூறுகின்றது. கோடானுகோடி பணத்தைக் கொட்டி உலகின் மிக உயர்ந்த தொழில்நுட்பத்துடன் ஜப்பானிய அரசு அமைத்த புகுஷிமா அணுமின் நிலையம் சுனாமியால் நாசமாக்கப்பட்டு பல்லாயிரக் கணக்கானவர்கள் உயிர் இழந்து மூன்றரை இலட்சம் பேர் வசிப்பிடத்தை இழந்து விட்டனர்.

மின்சாரத்துக்காக உயிர்களைப் பலியிட நாங்கள் தயாராக் இல்லை. அணுமின் நிலையங்கள் அனைத்தையும் மூடுவோம். வேறு வழிகளில் மின்சாரம் தயாரிப்போம் என ஜப்பான் அரசு அறிவித்து விட்டது. ஏற்கனவே அணுமின் நிலையங்களை அமைத்து உள்ள ஜேர்மனியும் இத்தாலியும் அணுமின் நிலையங்களை மூடப் போகிறோம் என அறிவித்து விட்டன.

புதிதாக அணுமின் நிலையங்களை அமைப்பது இல்லை என்று ஐரோப்பிய நாடுகள் முடிவு செய்து விட்டன. கடல்கோளால் தமிழகத்தின் பெரும்பகுதி முன்னர் அழிந்தது. மீண்டும் கடல் சீற்றம் ஏற்பட்டால் தென்தமிழ் நாட்டில் கூடங்குளம் அணுமின் நிலையத்தால் கற்பனை செய்ய முடியாத பேரழிவு ஏற்படும்.

முல்லைப்பெரியாறு பிரச்சினை, ஈழத்தமிழர் படுகொலை, சிங்களவரால் தமிழக மீனவர்கள் நாளும் சுட்டுக் கொல்லப்படும் கொடுமை, மூன்று நிரபராதித் தமிழர்களின் உயிர் முடிக்கத் திட்டமிடும் நடவடிக்கை என அனைத்துப் பிரச்சினைகளிலுமே காங்கிரஸ் தலைமையிலான இந்திய அரசு தமிழகத்துக்கும் தமிழ் இனத்துக்கும் மன்னிக்க முடியாத துரோகங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

இந்த நிலையில் ஈழத்தமிழர்களைப் படுகொலை செய்ததற்காக இலங்கை அரசுக்குப் பாராட்டும் ஆதரவும் அளிக்கின்றவிதத்தில் இலங்கைக்கு மின்சாரம் வழங்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது.

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இரண்டு இடங்களில் அணு உலைகள் கிடையாது. தமிழ் நாட்டில் மட்டுமே இரண்டாவது அணு உலை அமைக்கப்படுகின்றது. தமிழகத்துக்கு மின்சாரம் இல்லாவிட்டாலும் இலங்கைக்கு மின்சாரம் வழங்க வேண்டும் என்பதற்காகவே கூடங்குளத்தில் அணு உலை கட்டப்படுகின்றது. அந்த அணு உலையால் ஏற்படும் ஆபத்து தமிழர்களின் தலையில்தான் போய் முடியும். (அ-2)

## திருச்சி விமான நிலையத்தில் தங்கக்கட்டிகள் பறிமுதல்

### இலங்கையிலிருந்து வந்த பெண் கைது


(கொழும்பு)

இலங்கையில் இருந்து திருச்சிக்குச் சென்ற விமானத்தில் 10 தங்கக்கட்டிகளை மறைத்துக் கொண்டு சென்ற பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலையத்தில் இவரை சுங்கத் துறை அதிகாரிகள் சோதனை செய்தபோது இவர் மறைத்து வைத்திருந்த 10 தங்கக் கட்டிகளை பறிமுதல் செய்தனர்.

ஒரு தங்கக் கட்டி 100 கிராம் எடையுள்ளதாகவும் தங்கக்கட்டிகளின் மொத்த மதிப்பு சுமார் 30 இலட்சம் ரூபாய் இருக்கும் என்றும் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக பொலிஸார் மேற்படி பெண்ணை விசாரணை செய்து வருகின்றனர். (அ-2)



இலங்கை ஸ்கூல்ஸ் கராத்தே சங்கத்தினால் பாடசாலை மாணவர்களிற்கிடையில் நடத்தப்பட்ட கராத்தே போட்டி நிகழ்ச்சி அண்மையில் கொழும்பில் சுகததாச உள்ளக அரங்கில் நடைபெற்றது. இதில் இடமிருந்து வலமாக பருத்தித் துறை தும்பளை சைவப்பிரகாச பாடசாலை மாணவன் எஸ்.தமிழ்ச்செல்வன் 14 வயது சண்டைப் போட்டியில் 3 ஆம் இடம் பெற்று வெண்கலப்பதக்கம், சான்றிதழையும் பெற்றுள்ளதனையும் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய மாணவன் இ. ஆழிக் குமரன் 13 வயது சண்டைப் போட்டியில் எட்டு சிறந்த வீரர்களுள் ஒருவராகவும் தெரிவு செய்யப்பட்டு சான்றிதழ் பெற்றுக் கொண்டுள்ளதையும் படத்தில் காணலாம்.

## களனி பல்கலை. மாணவர் குழுக்களுக்கிடையில் மோதல்

(கொழும்பு)

களனி பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பீட மாணவர் குழுக்கள் இடையே ஏற்பட்ட மோதலில் 8 பேர் காயமடைந்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் 3 முறைப்பாடுகள் களனி பொலிஸ் நிலையத்திற்குக் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவித்த களனி பொலிஸார் இச்சம்பவம் தொடர்பாக இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லை என தெரிவித்தனர்.

மாணவர் குழுக்களுக்கிடையிலான மோதலின் போது காயமடைந்த எட்டுப் பேரில் ஐவர் ராகம வைத்தியசாலையிலும் மூவர் கிரிபத்கொட வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் இம்மோதல் குறித்து களனி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கின்றனர். (அ-2)

## செவனகல சீனி தொழிற்சாலையை சுவீகரிப்பின் சர்வதேச நீதிமன்றத்தில் முறையிடுவேன்-கமகே

(கொழும்பு)

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் மூலம் தமது செவனகல சீனித்தொழிற்சாலையை அரசாங்கம் சுவீகரிப்பதற்கு எதிராக சர்வதேச நீதிமன் றத்திற்கு செல்லப்போவதாக வர்த்தகரும் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினருமான தயா கமகே தெரிவித்துள்ளார்.

இச்சட்டம் குறித்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவிற்கு தீர்ப்பு வரும் வரை காத்திருப்பதாகவும் அதன்பின்சர்வதேச நீதிமன்றிற்குச் செல்ல தீர்மானித்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இத்தொழிற்சாலை 2002 ஆம் ஆண்டு தனியார் மயப்படுத்தப்பட்ட போதுதான் அதைக் கொள்வனவு செய்ததாகவும் இதற்கான ஒப்பந்தத்தின்படி 700 ஊழியர்களை மீண்டும் பணிக்குச் சேர்த்ததுடன் 4 ஆயிரத்து 500 கரும்பு உற்பத்தியாளர்களிடமிருந்து கரும்பை வாங்கியதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

நான் உடன்படிக்கையை மதித்து நடந்தேன். அரசாங்கம் 469 ஹெக்டயர் நிலத்தை இருவருடங்களுக்கு முதல் இக் கம்பனிக்கு வழங்க தீர்மானித்திருந்தது.

அது நடைபெறாததால் நான் நீதிமன்றம் சென்றேன். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த ஏப்ரல் மாதம் அதில் கையெழுத்திட்டார். நான் ஒப்பந் தத்திலுள்ளதை உடனடியாகச் செய்த போது அரசாங்கம் அதற்கு 9 வருடங்களை எடுத்துக் கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த சீனித் தொழிற்சாலை முதலீட்டு சபையுடன் செய்து கொண்ட ஒப்பந் தத்தை மீறியுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கடந்த புதன் கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். (அ-2)

## சமுர்த்தி கெக்குழு சிறுவர் கலை இலக்கிய போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி கெக்குழு சிறுவர் கழகக் கலை இலக்கிய மாவட்ட மட்டப் போட்டி முடிவுகள் யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் ச.சிவஸ்ரீயினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் பிரதேச செயலாளர் பிரிவு விபரமும் வருமாறு,

**பாடல் தனி நபர் (5-9)**

பி.சுலக்சன் (யாழ்ப்பாணம்), ஜெ.தமஸ்வினி (சண்டிலிப்பாய்), கே.விபுதா (மருதங்கேணி)

**பாடல் தனி நபர் (10-14)**

பா. வேனுகா (சங்கானை), ஜெ.யதுசிகா (சண்டிலிப்பாய்), ப.ஜனுசன் (யாழ்ப்பாணம்)

**பாடல் தனி நபர் (15-18)**

ந.தர்சிகா (சண்டிலிப்பாய்), சி.கீர்த்திகா (கரவெட்டி), ப.விஜிதா (சங்கானை)

**நாட்டார் நடனம் (5-9)**

அஸ்வின் கழகம் (சண்டிலிப்பாய்)

**நாட்டார் நடனம் (10-14)**

சுழிபுரம் மேற்கு கழகம் (சங்கானை), அஸ்வின் கழகம் (சண்டிலிப்பாய் ), வண்ணார் பண்ணைக் கழகம் (யாழ்ப்பாணம்)

**நாட்டார் நடனம் (15-18)**

சுழிபுரம் மேற்குக் கழகம் (சங்கானை) , மலரும் மலர்கள் கழகம் (சண்டிலிப்பாய்), சிறாம்பியடி கழகம் (யாழ்ப்பாணம்)

**பேச்சு (5-9)**

சி.துவாரகான்யா (கரவெட்டி), கீ. அஜிந்தன் (சண்டிலிப்பாய்), மோ. மாதுரி (வேலணை)

**பேச்சு (10-14)**

வே.கீர்த்தனா (சங்கானை), இ. நளாயினி (சண்டிலிப்பாய்), உ.நிரோஜா (வேலணை)

**பேச்சு (15-18)**

மு.கோபிதா (சங்கானை), த. தர்சிகா (சண்டிலிப்பாய்)

**அறிவிப்பு (5-9)**

ப.பானுஜா (சண்டிலிப்பாய்)

**அறிவிப்பு (10-14)**

ப.பிரணவன் (சங்கானை), ப. டிலக்சன் (சண்டிலிப்பாய்), ஜோ. பகீரதன் (யாழ்ப்பாணம்)

**அறிவிப்பு (15-18)**

அ.ஜீசஸ் றொக்கின்சன் (யாழ்ப்பாணம்), இ.அனுஸ்மாலா (சண்டிலிப்பாய்)

**ஓவியம் (5-9)**

ம.வர்ஜினி (யாழ்ப்பாணம்) , ய.கரிஸ்சிகன் (சங்கானை), கே.விபுதா (மருதங்கேணி)

**ஓவியம். (10-14)**

ட. ராதா (சண்டிலிப்பாய்), ஜெ.கரல்மில்டன் (யாழ்ப்பாணம்), சி.திலக்சன் (சங்கானை)

**ஓவியம் (15-18)**

ச.சுஜிகரன் (சண்டிலிப்பாய்), செ.தர்சன் (கரவெட்டி), கு.கபில்ராஜ் (சங்கானை)

**குழு நாடகம்**

சுழிபுரம் மேற்கு கழகம் (சங்கானை), பிள்ளை நிலா கழகம் (சண்டிலிப்பாய்)

**சிறுவர் கதை (5-9)**

ஞா. பிரகலாதன் (சங்கானை), த.சதுசன் (சண்டிலிப்பாய்)

**சிறுவர் கதை (10-14)**

த. லக்ஷனா (கரவெட்டி), கு.கம்சவதனி (சண்டிலிப்பாய்), கு.இந்துஜா (சங்கானை)

**சிறுவர் கதை (15-18)**

ம.பேசிஷாளினி (கரவெட்டி), எஸ்.சொரூபிகா (சங்கானை), இ.இந்துஜா (வேலணை). (அ)

# சித்திரவதைகளுக்கு எதிரான மாநாட்டில் பங்கேற்கும்

# இலங்கை பிரதிநிதிகளுக்கு குற்றவியல் சட்ட அறிவில்லை

## ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றச்சாட்டு

(கொழும்பு)

**ஜெனீவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகளின் சித்திரவதைகளுக்கு எதிரான மாநாட்டில் இலங்கையின் சார்பில் பங்கேற்கும் முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் அடிப்படைக்குற்றவியல் சட்ட அறிவு களைக் கொண்டிருக்கவில்லை என ஆசிய மனித உரிமைகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.**

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் மற்றும் சித்திரவதைகள் குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கடந்த 9ஆம் திகதி அவருக்கு பதிலளிக்க வாய்ப்பு வழங்கப்பட்டது.

இதன்போது மொஹான் பீரிஸினால் சரியான புள்ளிவிபரங்களையும் சம்பவங்களையும் கூறமுடியவில்லை. 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் கீழ் இலங்கையின் உரிய சட்டமுறைகள் இருப்பதாகக் குறிப்பிட்டார்.

எனினும் அதனைக் கண்டித்துள்ள ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு நடைமுறை நிறைவேற்று அதிகாரம் கொண்டு ஜனாதிபதி முறையின் கீழ் அந்தச் சட்டங்கள் வலுவிழந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் சில சட்டத்தரணிகளை துரோகிகள் என்று குறிப்பிடப்பட்டமை மற்றும் ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமை காப்பாளர்கள் தாக்கப்பட்டமை குறித்து மொஹான் பீரிஸ் பதில் எதனையும் வழங்க மறந்து விட்டார்.

பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் சில சட்டதரணிகள் துரோகிகள் என்று குறிப்பிடப்பட்டமை எவ்வித பாதிப்புக்களையும் ஏற்படுத்தவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது ஊடகவியலாளர்கள் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போனாமை குறித்து கேள்வி எழுப்பப்பட்டபோது அவர் இலங்கைக்கு எதிராக பிரசாரத்துக்கு வெளிநாடு ஒன்றில் அகதியாக சென்றிருக்கலாம் என்று அவர் பதிலளித்துள்ளார். அவரால் வலுவான ஆதாரங்கள் சமர்ப்பிக்க முடியவில்லை .

சித்திரவதைகளுக்கு எதிராக சர்வதேச பிரகடனம், காணாமல் போனவர்கள் தொடர்பிலான பிரகடனம் சர்வதேச யுத்த நீதிமன்றம் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு மெஹான் பீரிஸ் பதிலளிக்கவில்லை.

வெலியமுன என்பவரது வீட்டின் மீது கிரனைட் தாக்குதல் நடத்தப்பட்டமை குறித்து கேட்டபோது மெஹான்பீரிஸ் அளித்த பதில்களில் அவருக்கு அடிப்படை சட்ட அறிவு இல்லை என்பதை உணர்த்தியதாக ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கையில் சித்திரவதைகள் தொடர்பில் பூச்சிய நிலை ஏற்பட வேண்டும் என்ற அடிப்படையில் செயற்படுவதாக அவர் குறிப்பிட்ட போது அதனை சித்திரவதைகள் தொடர்பான ஐக்கியநாடு அதிகாரிகள் ஏற்றுக் கொள்ளவில்லை.அவரின் பதில்கள் உண்மையை மறைப்பதாக அமைந்தள்ளதாக ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (அ-2)

## ஸ்ரீஅம்மா பகவானின் நன்றி நவிலல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ அம்மா பகவானின் நன்றி நவிலல் தினமான நவம்பர் 14 ஆம் திகதியை முன்னிட்டு, சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் நன்றி நவிலல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பக்தர்கள் அனைவரையும் கலந்து கொண்டு நிறைவடைந்த வேண்டுதல்களுக்காகவும் வாழ்கையில் உதவி புரிந்த அனைவருக்காகவும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்தோடு தீராத நோயினால் துன்பத்தை அனுபவிக்கும்மக்களும்வருகை தந்து பிரார்த்தனையில் ஈடுபட்டு பயனடையுமாறும் சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தினர் கேட்டுக் கொள்கின்றனர்.

இந்நன்றி கூறல் நிகழ்வானது யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்து சற்சங்கங்களிலும் நடைபெறவுள்ளது. (அ)

## அரச அதிபர்களின் இடமாற்றத்தை உடன் இரத்து செய்வது அவசியம்

### த.தே.கூ.எம்.பிக்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

மன்னார் மற்றும் முல்லைத்தீவு அரசாங்க அதிபர்களை இடமாற்றம் செய்வதாகக் கிடைத்துள்ள தகவலின் அடிப்படையில் அவ் இடமாற்றத்தினை தற்போதைய நிலை கருதி நிறுத்துமாறுகோரி வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்திஆனந்தன் மற்றும் விநோநோதராதலிங்கம் ஆகியோர் ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா வது, தற்போது வன்னியில் மீள் குடியேற்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

மக்களுக்கான வீட்டுத்திட்டங்கள், வாழ்வாதார உதவிகள் என்பன மந்தகதியில் நடைபெற்று வருகின்றன.

இத்தருணத்தில் வன்னி மக்களுக்கு ஏராளமான மனக்குறைகள் உள்ளன. அம் மக்களின் மனப்பாரத்தை தங்களது மொழியில் இறக்கி வைப்பதற்கு அனுசரணையாக உள்ள உயரதிகாரிகளே தேவை.மேலும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் மாவட்ட எல்லை மீள் நிர்மாணம் போன்ற செயல்கள் வடக்கில் உள்ள அனைத்து தரப்பினரதும் மனங்களில் பெரும் அச்சத்தையும் மனக் கிலேசத்தையும் உருவாக்கியுள்ள சூழலில் முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்றும் மன்னார் மாவட்டத்திற்கு தென்பகுதி பெரும்பான்மை யினத்தை சேர்ந்த ஒருவர் அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.சுமார் 30 வருடங்களுக்கு மேலாக வடக்குக்கிழக்கில் தமிழ் அதிகாரிகளே அரசாங்க அதிபர்களாக கடமையாற்றி வருகின்றனர். யுத்தம் நடைபெற்றீ காலத்தில் கூட இலங்கையரசு தனது மேலாண்மையை காட்டுவதற்கு இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

ஆனால், இன்று யுத்தம் முடிவுற்று மீள் குடியேற்றம் நடைபெறுகையில் மக்களின் உணர்வுகளை புறந்தள்ளிவிட்டு மேற்கொள்ளப்படும் இச்செயல் நல்லிணக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்தாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம் .

மீள்குடியேற்றம், அபிவிருத்தி, புனர் வாழ்வு என்பவை எமது மக்களின் பூரண ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டுமேயன்றி அவர்களை ஒதுக்கிவிட்டு நடைமுறைப் படுத்த முடியாது. எனவே, இடமாற்றத்தை இரத்து செய்ய வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

(கொழும்பு)

மீள உபயோகிக்கக்கூடியவாறு பாடப் புத்தங்களை பயன்படுத்திய மாணவர்களை இம்முறையும் சான்றிதழ் வழங்கி பாராட்டுவதற்கு கல்வி வெளியீட்டு திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதற்காக சகல பாடசாலைகளிடமிருந்து வகுப்பறைக்கு மூன்று மாணவர்கள் வீதம் தெரிவு செய்யப்படுவார்கள் என கல்வி வெளியீட்டு ஆணையாளர் டபிள்யூ. எம்.ரி.புஸ்பகுமார குறிப்பிட்டார்.

அவ்வாறு தெரிவுசெய்யப்படும் மாணவர்களுக்கான சான்றிதழ்கள் அச் [illegible]டு பாடசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள[illegible]க அவர் தெரிவித்தார் .

மீண்டும் உபயோக்கிக்ககூடிய வகையில் மாணவர்களினால் பாடப்புத்தங்கள் பயன்படுத்துவதால் வருடாந்தம் 900 மில்லியன் ரூபாவை சேமிக்க முடிவதாக கல்வி வெளியீட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-2)

## சின்ன பண்டிவிரிச்சான் காட்டில் ஒருதொகுதி வெடிபொருட்கள் மீட்பு

(மன்னார்)

மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சின்னப்பண்டிவிரிச்சான் கிராமத்தில் உள்ள காட்டுப் பகுதிக்குள் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி வெடிபொருட்களை மன்னார் புலனாய்வு துறையினரும் மடு புலனாய்வு துறையினரும் இணைந்து கடந்த செவ்வாய்க்கிழமை காலை மீட்டுள்ளதாக மடு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தண்ணிக்காய் வடிவிலான வெடிகுண்டு 04, மிதிவெடி 07 ,டி56 ரவைகள் 100,மகசின் 02,சயனைட்குப்பிகள் 08,புலிகளின் சீருடை 10 ,டெட்டனேட்டர் மற்றும் அதன் பியுஸ் 12, தங்கூசிரோல் 02, வயர் 40 அடி, கைக்குண்டு 07, எஸ்.எப்.ஜி.தமிழர் கைக்குண்டு 06, பாக் 07 ஆகியவற்றை மீட்டுள்ளனர்.

பொதுமக்கள் பொலிஸாருக்கு வழங்கிய இரகசிய தகவலையடுத்து இவை மீட்கப்பட்டுள்ளன.மீட்கப்பட்ட வெடிபொருட்கள் செயலிழக்கச் செய்யும் நோக்குடன் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (அ-2)





மாற்றுக்கொள்கைகளுக்கான நிதியத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்ட மக்களின் பிரதிநிதிகளை ஒருங்கிணைத்து வடக்கு, கிழக்கு மக்களிடையே காணி தொடர்பாக ஏற்பட்டுள்ள தெளிவற்றதன்மையைவிளக்கும் வகையிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றுஅண்மையில் கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்[illegible] இதில் பா[illegible]ளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் உரையாற்றுவதையும் வளவாளர்கள் அருகில் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- அலுவலகச்செய்தியாளர்)


# குருவின் பார்வையில்



ஆன்மீகம் 31

## தேசப்பற்று

ஒரு நேபாளியும், ஒரு பாக்கிஸ்தானியும், இந்தியர் ஒருவரும் சௌதி அரேபியாவிற்கு வேலைக்குச் சென்றிருந்தார்கள். சௌதி அரேபியாவில் மது அருந்துவது சட்டப்படி குற்றம், ஆனால், அவர்கள் ஒரு நாள் மது அருந்தினர். இதைத் தெரிந்து கொண்ட அந்நாட்டுக் காவலர்கள், அவர்கள் மூவரையும் பிடித்துக் கொண்டு போனார்கள். ஒவ்வொருவருக்கும் 10 கசையடிகள் கொடுக்க வேண்டுமென தண்டனை விதித்தனர். இவர்கள் மூவரும் இந்த கசையடியை எப்படித் தாங்கிக் கொள்வது என்று கவலையில் ஆழ்ந்தனர். தண்டனை விதிக்கபட்ட அந்தத் தருணத்தில், அரேபிய நாட்டு இளவரசருக்கு பிறந்த நாள் என்பதால், அவர் சிறையிலிருந்தவர்களை பார்வையிட வந்தார். இந்த மூவரின் கவலையைக்குறித்து கேள்விப்பட்டவர், நேபாளியிடம், "உனக்கு தண்டனையில் சிறுசலுகை கொடுக்கிறேன், என்ன வேண்டும் கேள்" என்றார். நேபாளி, "கசையடி கொடுக்கும்போது என் முதுகில் ஒரு தலையணையை வைத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும்" என்றார். சரியென தலையணையைக் கொடுத்தார்கள், கசையடியை கொடுக்க ஆரம்பித்தார்கள். 3 கசையடிகள் கொடுத்தவுடன் தலையணை பிய்ந்து போய்விட்டது. மற்ற 7 அடிகள் அவர் முதுகில் விழுந்தன.



இதை பாகிஸ்தானி பார்த்துக் கொண்டிருந்தார், சௌதி இளவரசர் பாகிஸ்தானிடம், "நீயும் நானும் ஒரே கடவுளை வழிபடுவதால், உனக்கு இரண்டு சலுகைகள் தருகிறேன், என்ன வேண்டும் கேள்" என்றார். பாகிஸ்தானி, "கசையடிகள் கொடுக்கும் போது என் முதுகில் 2 தலையணைகளை வைத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும்" என்று கேட்டார். அவருக்கு 2 தலையணைகள் கொடுக்கப்பட்டன. கசையடிகள் கொடுக்கத் தொடங்கினர், ஆறாவது கசையடியில் அந்த இரண்டு தலையணைகளும் பிய்ந்து போய், கடைசி நான்கு கசையடிகளும் முதுகில் விழுந்தன. இதை இந்தியர் பார்த்துக் கொண்டிருந்தார். இந்தியரிடம் சௌதி இளவரசர், "உங்கள் நாட்டிற்கும் எங்கள் நாட்டிற்கும் வியாபாரத் தொடர்புகள் செழிப்பாகி வருவதால் உங்களுக்கு 3 சலுகைகள் தருகிறேன், என்ன வேண்டும்" என்றார். அதற்கு இந்தியர், கையெடுத்துக் கும்பிட்டுச் சொன்னார், "இந்தத் தண்டனை முடிந்த பின்னர், உங்கள் அரண்மனையில் ஒரு வேலை வேண்டும்" என்று கேட்டார். இளவசரும் சரியென ஒப்புக் கொண்டார். இரண்டாவது சலுகை என் வென்று கேட்டதற்கு இந்தியர் "எனக்கு 10 கசையடிகள் போதாதது, 100 கசையடிகள் வேண்டும்" என்றார். இளவரசர், திகைத்துப் போனாலும் 100 கசையடி கொடுக்க ஒப்புக் கொண்டார். 3வது சலுகை என்ன வென்று கேட்ட போது "கசையடிகள் கொடுக்கும் போது எனக்குத் தலையணைகள் எதுவும் வேண்டாம், என் முதுகை பாக்கிஸ்தான் நண்பர் கட்டிப் பிடித்திருக்க வேண்டும்" என்றார். தேசப்பற்று இப்படித்தான் பலவிதமாக செயற்படும். ஏதோவொரு செயலை தீவிரப்படுத்துவதற்காக தேசப்பற்று என்று நாம் பேசிக் கொள்ளலாம். ஆனால், இதனையே நம் வாழ்வின் அடையாளமாக எடுத்துச் செயற்பட்டால், உலகில் வாழும் மனிதர்களிடையே பிளவு ஏற்பட்டு எதிர்ப்பும் வெறுப்பும் உருவாகிவிடும். தேசப்பற்றினை விழிப்புணர்வாக நாம் கையாள வேண்டும். (தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# ஒடுக்கப்பட்ட மக்களின் சின்னஞ்சிறு கடவுளர் வழிபாடு

04

## நாட்டாரியல்

## பெருந்தோட்ட மக்களின் மத வழிபாடு தொடர்பான சமூகவியல் ஆய்வு

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"

ரா.நித்தியானந்தன் B.A.(Hons),M.Phil

இவ்வாறு இம் மக்கள் கந்தனை விரும்பியமைக்கு காரணம் அவன் சிவனுக்கு எதிராகப் போராடியமை, நிராதரவாக பழநி மலையில் ஒற்றைத் துணியுடன் நின்றமை, கடல் கடந்து இலங்கை நோக்கி வந்தமையுமாகும். பழைய பாடல்களில் சிவபெருமான் "பைங்கண் பார்ப்பனன்" என்று சிறப்புப் பெறுகின்றபோது முருகன் "புலையன் எனும் வேலன்" என்று இழிவுபடுத்தப்படுகிறான். இது இத்தாழ் நிலை மக்களின் தெய்வமாக கந்தன் போற்றப்படக் காரணமாகின்றது. பெருந் தெய்வங்களை நிராகரிக்கின்ற பெருந் தோட்டங்கள், வள்ளியை மனமுவந்து ஏற்கின்றன. வள்ளி திருமணம் இம்மக்கள் மத்தியில் ஒரு சிறப்பான விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

சிவனை எதிர்க்கும் ஏனைய கடவுளரை அனுசரிக்கும் போக்கு ஏன் இடம் பெற்றது, என்பதற்கு இன்னொரு குறியீட்டுக் காரணியையும் இங்கு கூறலாம். அதாவது, தோட்ட மக்களின் துன்பங்கள் அவலங்களைக் கண்டும் காணாமல் இருக்கும் தோட்ட அதிகாரிகள், கங்காணிமார்களின் போக்கை சிவனின் நிஷ்டையின் குறியீடாக இம்மக்கள் இங்கு கருதுகின்றனர்.

### பெருந்தோட்டங்களில் இடும்பன் வழிபாடு


இடும்பன் வழிபாடு இத்தோட்ட மக்களின் வழிபாட்டில் முக்கிய இடம் பிடித்துள்ளது. இம்மக்கள் தமது காவல் தெய்வமாக இடும்பனைக் கருதுகின்றனர். தோட்ட எல்லைப் புறங்களிலே இடும்பன் தெய்வங்களில் குறியீடுகளை ஆல், வேம்பு மரங்களின் அடியில் காணலாம். இது தமிழ் நாட்டு வழிபாட்டில் இருந்து வந்திருக்க வேண்டும். எனினும் அதில் ஒரு சமூகவியல் தொடர்பினை இங்கு குறிப்பிடலாம். இடும்பன் தெய்வத்தின் ஐதீகக் கதை கைலாயத்தில் சிவகிரி, சக்திகிரி என்ற இரு மலைகளை பொதிகை மலையில் இருந்து அகத்திய முனிவரிடம் சேர்ப்பிக்கும்படி இடும்பாசுரனுக்கு சிவ பெருமான் ஆணையிட்டார். இவன் இம்மலைகளைக் காவடி போலக் கட்டிச்சுமந்து வந்தபோது களைப் படைந்து பழனியில் இறக்கி வைத்து விட்டு, கந்தனிடம் (சிவனின் கோபம், சாபம் என்பவற்றிற்கு பயந்து) சரணடைந்து முருகனின் காவல் தெய்வமாகின்றான். இக்கதை தோட்ட மக்களிடம் இன்றும் நிலவுகிறது. தோட்ட அதிகாரிகள், கங்காணிமாரின் கொடுமைகளைச் சுமக்க முடியாத இத்தொழிலாளர்கள் அதனை இடும்பனைப் போல கந்தனிடம் இறக்கிவைக்கின்ற குறியீட்டு வடிவம் இங்கு மனம் கொள்ளத்தக்கது. பெருந்தோட்ட மக்களின் இவ்வழிபாட்டிற்கு ஒரு வழிபாட்டுத் தொடர்ச்சியுண்டு. தமிழ் நாட்டின் பண்ணைகளினாலும் நிலப்பிரபுக்களாலும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் தாங்கள் அவற்றிலிருந்து நிவாரணம் பெற பெருந்தெய்வங்கள் உதவாதெனக் கருதியே சிறு தெய்வங்களின் உதவியை நாடினர். அதன் தொடர்ச்சி இலங்கைப் பெருந் தோட்டங்களில் காணப்படுகின்றது.

### பெருந்தோட்டங்களில் காமன் வழிபாடு

இலங்கையில் பெருந்தோட்டங்கள் எல்லாவற்றிலும் பொதுவாக ஆண்டு தோறும் மாசிமாதம் கொண்டாடப்படுகின்ற பெருவிழா காமன் பண்டிகை. காமனை ஒரு தெய்வமாக வணங்கவில்லை. காதல் தெய்வம் என்று கருதவும் இல்லை. எப்படி முருகனைக் கந்தனாக இம்மக்கள் பார்க்கின்றார்களோ அதுபோலவே மன்மதனைக் காமனாக இவர்கள் காண்கிறார்கள். சிவனை எதிர்த்தவனாக, வீரனாக, துணிவுள்ள ஒருவனாக, சிவனின் நிஷ்டையை கலைக்க வந்த ஒருவனாகக் காமனைக் கண்டு இம்மக்கள் மனதில் அமைதி காண்கிறார்கள். இப்படியான குறியீடு தென்னிந்திய மன்மதனிலிருந்து தோட்டப்புற காமனை வேறுபடுத்திக்காட்டுகிறது. காமன் பண்டிகை நடைபெறும் ஏழு நாட்களுக்கு முன் காமன் பொட்டல் ஒன்று அமைக்கப்படும். அதில் ஒரு காமன் திண்ணை என்ற மேடையில் காமனின் சின்னமான கம்பம் ஒன்று நாட்டப்படுகிறது. காமன் பண்டிகை ஆரம்பமாகி ரதியும் மன்மதனும் ஏழுநாட்கள் லயம் லயமாகச் சென்று காமன் கூத்தினை ஆடிக்காட்டுகின்றனர். பின்னர் காமன் திண்ணையில் காமனுக்கும் ரதிக்கும் திருமணம் நடைபெறுகிறது. பின்னர் மீண்டும் இருவரும் லயம்களின் (தொழிலாளர் குடியிருப்புக்கள்) வாசலில் சென்று நடனமாடுகின்றனர். (தொடரும்)

# வாழையில் பீடைகளும் முகாமைத்துவமும்

16-VIII



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

**கழுத்தடைப்பான் நோய்**

வாழைச் செய்கையில் பாதிப்பை ஏற்படுத்தும் பீடைகளை அலசிப்பார்க்கும் இத்தொடரில் இம்முறை கழுத்தடைப்பான் அல்லது குருத்தடைப்பான் நோயைப் பற்றி அறிந்து கொள்வது நல்லது. பரவலாக வாழைச் செய்கையில் பாதிப்பை ஏற்படுத்தும் இந்நோய்க்கான காரணி ஒரு வைரசு ஆகும்.

பொதுவாகவே வைரசு நோய்கள் பயிர்களில் ஏற்படும் போது அவற்றை கட்டுப்படுத்துவதற்கு எதுவித பீடைநாசினியையும் பயன்படுத்த முடியாத நிலையில் இந்நோய்கள் ஏற்படுவதனை தடுப்பதற்கான வழிவகைகளையே முன்னிறுத்தி செயற்படுத்துதல் வேண்டும்.

**கழுத்தடைப்பு வைரசு**

வாழை கழுத்தடைப்பு நோயை ஆங்கிலத்தில் Banana bunchy top என அழைப்பர். இந்நோயை ஏற்படுத்தும் வைரசுவை மண்ணிற அழுக்கணவன் காவிச் செல்லும். பொதுவாகவே இம்மாதிரியான வைரசுக்கள் பரவுதலுக்கு காவியாக தொழிற்படும். சாறு உறிஞ்சும் பூச்சியான அழுக்கணவன் (aphid)ஓரிடத்திலிருந்து இன்னொரு வாழைக்கு வைரசுவை தமது வாயுறுப்பில் கொண்டு சென்று தொற்றுதலை ஏற்படுத்துகின்றது.

ஹவாய் தீவுகளில் 1989 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்ட இந்நோய் கண்டங்களைத் தாண்டி உலகம் பூராகவும் பரவி இங்கே எங்களூர் வாழையையும் இறுதியாக விட்டு வைக்கவில்லை. ஓரளவிற்கு இந்நோயினது அறிகுறிகளை எங்களூர் விவசாயிகளினால் இனங்காண முடிந்தாலும் பலருக்கு இதனை இன்னதென்று இன்னமும் கண்டுபிடிக்க முடியாதிருப்பதை அவர்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடல் மூலம் தெரிய வந்துள்ளது.

அனைத்து வாழைச்செய்கையாளர்களையும் இவ்வைரசு நோய் பற்றி அறிந்திருப்பதற்காக இங்கே விளக்கமாக தரப்பட்டுள்ளது.

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

எம்மவர்களுக்கு அறிவூட்டி இப்பிரச்சினைக்கு தீர்வு கண்டிடலாம்.உலகம் முழுவதும் வாழை பயிரிடப்படும் இடங்களில் தீவிரமாக பரவி வரும் இந்நோயினால் பாரிய அளவில் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இதற்கு வாழை செய்கையாளர்களும் ஒரு வகையில் காரணமெனலாம்.



கழுத்தடைத்த வாழை

**நோயின் அறிகுறிகள்**


வைரசு நோயின் தாக்கம் தீவிரமாயுள்ள நிலையில் வாழையின் வளர்ச்சி குறைவானதாகவும் குறிப்பாக குட்டையானதாகவும் அதனது கழுத்துப் பகுதியில் இலைகளனைத்தும் செருகப்பட்டது போல நெருக்கமானதாக வழமைக்கு மாறானதாக தோற்றமளிக்கும். இதனையே கழுத்தடைப்பான் அல்லது குருத்தடைப்பான் என குறிப்பிடுவார்கள். இலைகளின் நீளம் குறைந்து கட்டையான இலைகளாகும். ஒடுங்கிய இலைகளாக விறைத்து நேராக நிற்பது போன்ற தோற்றமளிக்கும். இலைப்பரப்பு தடிப்பானதாகவும் முறியக்கூடியதான தன்மையையும்கொண்டிருக்கும். இதற்கும் மேலாக இலையின் விளிம்புப்பகுதி ஆரம்பத்தில் மஞ்சள் நிறமானதாகி இறுதியில் இலைகள் சுருங்கி பச்சையான பகுதியில் கோடுகள் போன்று காணப்படும். இலை நடுநரம்பு பகுதி உயர்ந்து வெளிறி காணப்படும். உருவாகும். வாழைக்குட்டிகள் உருவத்தில் சிறியதாகி நிறையவே காணப்படும். இவ்வாழைக்குட்டிகளை நடுகைக்காக எக்காரணங் கொண்டும் தெரிவு செய்யக் கூடாது. மாறாக நோயுற்ற வாழைக்குட்டியினூடாக வைரசுவும் அழுக்கணவனும் இலகுவாக பரவிவிடும். இதனைத்தான் எம்மவர்கள் வில்லங்கத்தை விலைக்கு வேண்டக்கூடாது என சிலேடையாக கூறுவர். குறிப்பாக நோயுற்ற வாழையிலிருந்து வாழையிலை மற்றும் வாழைக்குலை என்பனவற்றை பெறுவதனை முற்றாகத் தவிர்க்கவும்.

**கழுத்தடைப்பு நோயை முகாமைத்துவப்படுத்துவது எப்படி?**

சுத்தம் சுகம்தரும் எனும் வாக்குக்கிணங்க வாழைத்தோட்டத்தை சுத்தமாக வைத்திருக்கவும். அதிலும் நடுகைக்காக வாழைக்குட்டிகளை பெறும்போது நோயேதுமற்ற நல்லநிலையிலுள்ள வாழையினடியிலிருந்து பெறுதல் நன்று.

நோய் வரும் முன்காத்தல் என்றுமே, எதிலுமே நல்லது.இங்கு இது இவ்வைரசு நோய்க்கும் பொருந்தும். எக்காரணம் கொண்டும் வைரசு தொற்றுள்ள வாழையை தோட்டத்தினுள் அனுமதிப்பதோ அன்றி வளரவிடுவதோ பிரச்சினையாகி முழு வாழைத்தோட்டத்தையும் அழித்துவிட வேண்டிவரும்.

அநேகமான வாழைத் தோட்டங்களில் இந்நோயை



மண்ணிற அழுக்கணவன்

இனங்கண்டும் அதனை அகற்றாது அப்படியே விட்டு வைத்திருப்பதை அவதானிக்கலாம். இவ்வாறான பொறுப்பற்ற செயன் முறை மூலம் அவர் தனக்கும் பிரச்சி னையை வளர்த்து கொள்வதோடு ஏனைய வாழைச் செய்கையாளர்களுக்கும் பிரச்சினையை வலிந்து கொடுப்பவராக இருப்பர். இதனைத்தான் யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்பர்களோ?

வைரசு நோயற்ற வாழையின் கிழங்கு உட்பட முழுதாக தோண்டி எடுத்து தோட்டத்தின் மூலையில் கிடங்கு எடுத்து அதனுள் போட்டு எரித்துவிடலாம். எரிக்க முன்பு டைமீதோயேற்று பூச்சிநாசினியை வாழை முழுக்க விசிறி விட்டு எரிப்பது நல்லது. வாழைத் தோட்டத்தை தொடர்ச்சியாக அவதானிக்க வேண்டும்.

அழுக்கணவனை வாழையின் கழுத்து பகுதியில் அவதானித்தால் அதற்கு ஊடுபுகுந்து தாக்கும் (systemic) பூச்சிநாசினியொன்றை தெளித்து அழுக்கணவனை கட்டுப்படுத்தலாம்.

இன்றிலிருந்தாவது இவ்வாறான நோயுற்ற வாழையை விரைந்து அகற்றி அழிப்பதன்மூலம்அருகிலிருக்கும்வாழைத் தோட்டத்திற்கும் பரவிவிடாது தடுக்கலாம். இந்த சமூகப் பொறுப்பு விவசாயிகளில் கூட்டுறவு மூலம் மட்டுமே சாத்தியமாகும்.எதற்கும் ஒற்றுமை தானே பலம்.

(தொடரும்)

## துமிந்த சில்வாவின் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தோருக்கு விசாரணை

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தோர் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வெள்ளம்பிட்டிய பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த மாதம் 8 ஆம் திகதி முல்லேரியா பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை தொடர்ந்து துமிந்த சில்வாவிற்கு சொந்தமான சொத்துக்களுக்கு சிலர் சேதம் ஏற்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர உள்ளிட்ட ஐந்து பேர் கொல்லப்பட்டதுடன் துமிந்த சில்வா உள்ளிட்ட சிலர் படுகாயமடைந்திருந்தனர்.

துமிந்த சில்வாவின் அரசியல் காரியாலயம் உள்ளிட்ட சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டதாகவும் சேதம் விளைவித்தோர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் வெள்ளம்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

## மஹிந்தவுக்கு நன்றி தெரிவித்தார் மாலைதீவு ஜனாதிபதி மொஹமட்

(கொழும்பு)

17 ஆவது சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள மாலைதீவு சென்றுள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் நசீட்டுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

மாலைதீவு அரச தலைவர்கள் மாளிகையில் இச்சந்திபபு இடம் பெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த சந்திப்பின் போது இலங்கைக்கு வழங்கி வரும் ஒத்துழைப்புக்கள் குறித்து இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாலைதீவு ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

அதேபோன்று சார்க் மாநாட்டை நடத்த ஒத்துழைப்பு வழங்கிய இலங்கைக்கு மாலைதீவு ஜனாதிபதி நன்றி தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ் மற்றும் சம்பிக்க ரணவக்க ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ-2)

## ஏ.ரி.எம். அட்டையினை களவாடிய நபர் கைது

(கொழும்பு)

ஜப்பான் நாட்டவரின் ஏ.ரி.எம் அட்டையினை களவாடி அதன் மூலம் 2 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பணத்தினை மோசடி செய்த சந்தேக நபர் ஒருவரை வவுனியா பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

வவுனியா கௌசிக்குளம் பகுதியில் அமைந்துள் சேவாலங்கா நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசகராக கடமையாற்றி வரும் ஜப்பான் நாட்டவரின் ஏ.ரி.எம்.அட்டையினை களவாடியே குறித்த மோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஜப்பான் நாட்டவரின் மொழிப் பெயர்பாளர் எனவும் அவர் கொழும்பை சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கும் வவுனியா பொலிஸார் மேலதிக விசாராணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-2)

# சர்வதேச சமூகம் அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தக் கூடாது

## சித்ராங்கனி வாகீஸ்வரா தெரிவிப்பு

(கொழும்பு)
சர்வதேச சமூகம் அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தக் கூடாது என கனடாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சித்ராங்கனி வாகீஸ்வரா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சமாதானம் நிலை நாட்டப்படுவதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தாருஸ்மான் அறிக்கை அடிப்படையற்றது. அதனை உத்தியோக பூர்வமான ஆவணமாக பயன்படுத்த முடியாது.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாக இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைப்பதில் அர்த்தமில்லை.

இவ்வாறான குற்றச்சாட்டுக்களின் மூலம் சுயாதீனமான விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படக் கூடுமென அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 30 ஆண்டுகளாக தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பில் ஏன் கவனம் செலுத்தப்படவில்லை என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (அ-2)

# உத்தேச சுவீகரிப்பு சட்டமூலம் அரசின் சர்வாதிகார போக்கு

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)
நட்டமடையும் சொத்துக்களை சுவீகரிக்கும் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் அரசாங்கத்தின் எதேச்சாதிகாரப் போக்கு அம்பலமாகியுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இச்சட்டமூலத்திற்கு அரசியல் கட்சிகள், பௌத்த பிக்குகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் எதிர்ப்பை வெளியிட்ட போதிலும் அரசாங்கம் பிடிவாதமாக இந்த சட்டமூலத்தை நாடாளுமன்றில் நிறைவேற்றிய இந்த நடவடிக்கை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் ஜனநாயகத்திற்கு மதிப்பளித்திருந்தால் சட்டமூலத்தில் திருத்தங்களை மேற்கொண்டு நாடாளுமன்றில் சமர்ப்பித்திருக்க முடியும்.

திடீரென இந்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் அரசாங்கத்தின் சர்வாதிகாரப் போக்கு புலனாகியுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் சர்வதேச முதலீட்டாளர்களை அச்சமடையச் செய்யும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# போதுமான தொழில்நுட்ப அதிகாரிகள் நாட்டில் இல்லை

## உயர் கல்வி அமைச்சர் தெரிவிப்பு

நாட்டில் போதுமான இரண்டாம் நிலை தொழில்நுட்ப அதிகாரிகள் இல்லை என உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் உயர் கல்வியை சர்வதேச தரத்தில் கொண்டு செல்ல அரசாங்கம் முயற்சித்து வருகின்றது.

இதன் பின்னர் சர்வதேச தரத்துக்கு ஏற்புடைய இரண்டாம் நிலை தொழில்நுட்ப அதிகாரிகளை உருவாக்குவதே அரசாங்கத்தின் இலக்கு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# ஜனநாயகவாதிகள் சங்கத்தின் ஆசிய பிராந்திய தலைவராக மீண்டும் ரணில்

(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, சர்வதேச ஜனநாயகவாதிகள் சங்கத்தின் ஆசிய பிராந்திய தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பிரித்தானியாவின் லண்டன் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சங்கத்தின் மாநாட்டின் போது மீண்டும் இந்த நியமனம் அவருக்கு வழங்கப்பட்டது.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க நேற்று முன்தினம் கனேடிய நிதி அமைச்சர் ஜிம் பெல்ஹேர்டியை சந்தித்துள்ளார்.

இதன்போது இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அரசியல் தீர்வு குறித்தும் அது தொடர்பில் அரசாங்கமும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் முன்னெடுக்கின்ற பேச்சுவார்த்தைகள் குறித்தும் பேசப்பட்டுள்ளன. (அ-2)




★764- திபெத்தியப் படைகள் சீனாவின் டாங் மக்களின் தலைநகரான சங்கான் நகரை 15 நாட்கள் கைப்பற்றி வைத்திருந்தன.

★1833- அலபாமாவில் லியோனிட் விண்கற்கள் வீழ்ந்தன.

★1893-அன்றைய பிரித்தானிய இந்தியாவுக்கும் (தற்போதைய பாகிஸ்தான்) ஆப்கானிஸ்தானுக்கும் இடையேயான எல்லைக்கோடு நிறப்படுவதற்கான உடன்பாடு எட்டப்பட்டது.

★1905-நோர்வே மக்கள் வாக்கெடுப்பு மூலம் குடியாட்சியை விட மன்னராட்சியே சிறந்தது எனத் தெரிவித்தனர்.

★1906-பாரிசில் அல்பேர்ட்டோ சாண்டோஸ்- டியூமொண்ட் வானூர்தி ஒன்றைப் பறக்கவிட்டார்.

★1918-ஆஸ்திரியா குடியரசாகியது.

★1927-மகாத்மாகாந்தி இலங்கைக்கான தனது முதலாவதும் கடைசியுமான பயணத்தை மேற்கொண்டார்.

★1927-லியோன் ட்ரொட்ஸ்கி சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார். ஜோசப் ஸ்டாலின் சோவியத்தின் முழு அதிகாரத்தையும் கைப்பற்றினார்.

★1938-மடகஸ்காரை யூதர்களின் தாயகமாக மாற்றும் நாசி ஜேர்மனியின் திட்டத்தை ஹேர்மன் கோரிங் என்பவர் வெளிக்கொண்டு வந்தார்.

★1941-இரண்டாம் உலகப் போர்: செவஸ்தபோல் நகரில் சோவியத் போர்க் கப்பல் செர்வோனா உக்ரயீனா மூழ்கடிக்கப்பட்டது.

★1944-இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியாவின் அவ்ரோ போர் விமானம் ஜேர்மனியின் போர்க்கப்பல் ஒன்றை நோர்வேயில் மூழ்கடித்தது.

★1948- டோக்கியோவில் பன்னாட்டு போர்க் குற்றவாளிகளின் நீதிமன்றம் ஒன்று ஏழு ஜப்பானிய இராணுவ அதிகாரிகளுக்கும் 2 ஆம் உலகப் போரில் இழைத்த குற்றங்களுக்காக மரணதண்டனை விதித்தது.

★1969-மை லாய் படுகொலைகள் தொடர்பான உண்மைகளை ஊடகவியலாளர் சீமோர் ஹேர்ஷ் வெளியிட்டார்.

★1980-நாசாவின் விண்கப்பல் வொயேஜர் 1 சனிக்கோளுக்கு மிக அருகில் சென்று அதன் வளையங்களின் படங்களை பூமிக்கு அனுப்பியது.

★1981-கொலம்பியா விண்ணோடம் தனது இரண்டாவது விண்வெளிப் பயணத்தை இரண்டு வீரர்களுடன் ஆரம்பித்தது.

★1982-சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக யூரி அந்திரோப்பொவ் தெரிவு செய்யப்பட்டார்.

★1982-போலந்தின் சொலிடாரிட்டி தொழிற்சங்கத் தலைவர் லேக் வலேசா பதினொரு மாத சிறைத் தண்டனைக்குப் பின்பு விடுதலையானார்.

★1990-இணைய வலை பற்றிய தனது முதலாவது திட்டத்தை ரிம் பேர்னேர்ஸ்- லீ அறிவித்தார்.

★1991-கிழக்குத் திமோர் டிலியில் இடம்பெற்ற மாணவர் போராட்டம் இந்தோனேசிய இராணுவத்தினரால் முறியடிக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான மாணவர்கள் உயிரிழந்தனர்.

★1994-இலங்கையின் 5 ஆவது அரசுத் தலைவராக சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க தெரிவு செய்யப்பட்டார்.

★1996-சவுதி அரேபியாவின் போயிங் விமானமும் கசகஸ்தானின் இல்யூஷின் விமானமும் புதுடில்லிக்கு அருகில் நடுவானில் மோதிக் கொண்டதில் 349 பேர் உயிரிழந்தனர்.

★1998- கியோட்டோ பிரகடனத்தில் ஆல் கோர் கையெழுத்திட்டார்.

★2001- நியூயோர்க் நகரில் டொமினிக்கன் குடியரசு நோக்கிச் சென்ற அமெரிக்க விமானம் புறப்பட்ட சில விநாடிகளில் விபத்துக்குள்ளாகியதில் விமானத்தில் சென்ற 260 பேரும் தரையில் இருந்த 5 பேரும் உயிரிழந்தனர்.

★2001-ஆப்கானிஸ்தானின் காபூல் நகரை விட்டு தலிபான் படைகள் முற்றாக விலகினர்.

★2006-முன்னாள் சோவியத் குடியரசான தெற்கு ஒசேத்தியா ஜோர்ஜியாவிடம் இருந்து பிரிந்து செல்ல வாக்கெடுப்பை நடத்தியது.

### பிறப்புக்கள்

★1817-பஹாவுல்லா, பஹாய் சமயத்தைத் தோற்றுவித்தவர்(இ.1892)

★1896-சலீம் அலி, இந்திய பறவையியல் வல்லுநர் (இ.1987)

★1920-வல்லிக்கண்ணன், தமிழ் எழுத்தாளர் (இ.2006)

### இறப்பு

★2001-சத்குரு சிவாய சுப்ரமணிய சுவாமி, இந்து அமெரிக்க ஆன்மீகவாதி (பி. 1927)

### சிறப்பு நாள்

★பஹாய் நம்பிக்கை- புனித நாள் (பஹாவுல்லா பிறந்த நாள்)



★1866-சீனாவின் புரட்சித் தலைவரான சுன் இ சியனின் பிறந்த தினம் (இ.1925)

# காணாமல்போன எமது உறவுகள் எங்கேயாவது உயிருடன் இருப்பார்கள்

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான இராணுவ நடவடிக்கை நிறைவுக்கு வந்து இரண்டரை ஆண்டுகளின் பின்னர், பல நூற்றுக்கணக்கானவர்கள், கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கானவர்கள் தற்போதும் காணமற் போனவர்களாகவே உள்ளனர்.

பிரித்தானியாவின் பிரபலமான த இன்டிபென்டன்ற் நாளேட்டில், அதன் ஆசிய பிராந்திய செய்தியாளர் அன்ரூ பண்கோம்ப் எழுதியுள்ள கட்டுரையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவனது பெயர் அபி அப்போது அவனுக்கு வயது 6.

இவனது குடும்பம் தாம் இறுதியாக உயிர்ப் பாதுகாப்பிற்காக பதுங்கியிருந்த பதுங்கு குழிக்கு அருகில் மிக உக்கிரமான எறிகணைத் தாக்குதல் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையிலேயே அபியை அவனது குடும்பத்தவர்கள் இறுதியாகப் பார்த்திருந்தனர்.

இவனுடைய சகோதரிகள் மிக மோசமாக காயமடைந்திருந்தனர்.-அவனது தாயாரும்கூட காயமடைந்திருந்தார். இந்த நிலையில் இவன் தனது கையை தாயாரைச் சுற்றிப் போட்டவாறு "அம்மா" என மூன்று தடவைகள் முனகினான்.

இந்தச் சம்பவம் விடுதலைப்புலிகள் தம்மை நோக்கி முன்னேறி வந்து கொண்டிருந்த இராணுவத்தினருக்கு எதிராக இறுதியாகத் தமது நிலைகளை அமைத்துக் கொண்டபகுதியில்-இரத்தத்தால் உறைந்து போயிருந்த சதுப்பு நிலப்பகுதியில் மே 2009-இல் இடம்பெற்றிருந்தது.

இவ் ஒடுங்கிய பகுதிக்குள் நின்றிருந்த தமிழ்க்கிளர்ச்சியாளர்களுடன் 3 இலட்சம் வரையிலான மக்களும் அகப்பட்டிருந்தனர்.

அதன் பின்னர் அபியினுடைய குடும்பத்தவர்கள் சைவக்குருமார்கள் உள்ளடங்கலாக பல தொண்டர் அமைப்புக்களிடம் அபியைப்பற்றி விசாரித்தார்கள்.

"அவனுக்கு என்ன நடந்தென்பது எனக்குத் தெரியாது. அவன் எனது கழுத்தைச் சுற்றி தனது கைகளை போட்டது மட்டும் தான் எனக்கு தெரியும்" என அபியினுடைய தாயார் கேதாரகௌரி மகேந்திரன் தெரிவித்தார்.

இந்தக் குடும்பம் மட்டுமல்ல, தமிழீழ விடுதலைப்புலிகளுடனான இராணுவ நடவடிக்கை நிறைவுக்கு வந்து இரண்டரை ஆண்டுகளின் பின்னர் பல நூற்றுக்கணக்கானவர்கள், கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கானவர்கள் தற்போதும் காணாமற் போனவர்களாகவே உள்ளனர். இவர்கள் தொடர்பாக எவரும் பதிலளிக்கவில்லை.

இவ்வாறு பல பத்தாண்டுகளாகத் துன்பங்களைச் சந்தித்த வன்முறைகளால் பாதிக்கப்பட்ட இந்த மக்கள் யுத்த வடுவைக் கொண்டிருப்பதால் நல்லிணக்க முயற்சிகளை முன்னெடுப்பதில் இலங்கை அரசாங்கம் தடைகளைச் சந்தித்து வருகிறது.

700 இளையோர்கள் உள்ளடங்கலாக 2 ஆயிரத்து 592 தமிழ் மக்கள் காணாமற்போயுள்ளதாக இதுவரையில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக யுனிசெப் நிறுவனத்தின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. வவுனியாவைத் தளமாகக் கொண்டியங்கும் குடும்பங்களைத் தேடிக்கண்டு பிடிக்கும் அமைப்பு சிறார்களைத் தேடிக்கண்டு பிடிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

இவ்வமைப்பானது தன்னிடம் கிடைக்கும் ஏனைய காணாமற்போனவர்கள் தொடர்பான விபரங்களை, தொடர்புபட்ட அரசாங்க அதிகாரிகளிடம் கையளித்து வருகிறது.

2009இன் இறுதிப்பகுதியில் இவ்வமைப்பு தனது பணியை ஆரம்பித்ததில் இருந்து காணாமற்போன 30 சிறார்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களது குடும்பங்களுடன் மீள இணைத்துள்ளது. மேலும் 20 சிறார்கள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதைவிட வேறு காணாமற்போன 64 சிறார்களின் விபரங்கள் இவ்வமைப்பால், சேகரிக்கப்பட்டுள்ள தரவுத்தளத்துடன் தொடர்பு படுத்திப் பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு காணாமற் போன சிறார்களில் 65 வீதமானவர்கள் புலிகளால் பலாத்காரமாக படையில் இணைக்கப்பட்டவர்களாவர்.

"இது மிகவும் இலகுவான காரியம் அல்ல. மிகவம் கடினமான பணியாகும்." எனப் பிரிகேடியர் கல்கமுவ தெரிவித்துள்ளார். இவர் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியாவார்.

அத்துடன் காணாமற்போன சிறார்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக இராணுவப்பதிவுகள், வைத்தியசாலைகள், சிறுவர் இல்லங்கள் போன்றவற்றுடன் தொடர்பு கொள்வதற்காக நியமிக்கப்பட்ட மூன்று தகுதிகாண் பெண் பணியாளர்களுக்கு பொறுப்பாகவுள்ளார்.

சிலசிறுவர் இல்லங்கள் சிறார்கடத்தல்களில் ஈடுபட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் நிலவுகின்றது. "நாங்கள் எங்களால் இயன்றளவு இந்தக் குடும்பங்களுக்கு உதவி செய்கிறோம்" என கல்கமுவ மேலும் தெரிவித்தார்.

"எங்கள் எல்லோருக்கும் பெற்றோர்கள் அல்லது மகன்மார், மகள்மார் உண்டு. இதனால்தான் நாங்கள் இது தொடர்பான முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள முடிகின்றது" எனவும் அவர் குறிப்பிட்டார்.

அபியின் குடும்பம் போன்று பல குடும்பங்கள் தமது காணாமற்போன உறவுகளால் நிச்சயமற்ற வாழ்வை கொண்டுள்ளனர்.

இவர்கள் தமதுசொந்த இடங்களுக்குச் செல்ல மறுக்கின்றனனர். தமது பிள்ளைகள் இன்றி தம்மால் தமது இடங்களுக்கு செல்லவோ அல்லது வேலைகள் செய்வோ முடியாது என இவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதில் பெரும்பாலான சம்பவங்கள் ஜனவரி -மே 2009 வரையே் இடம்பெற்றுள்ளன. அதாவது இராணுவம் புலிகளின் அரண்களை நோக்கி முன்னேறி வந்து கொண்டிருந்த வேளையிலேயே இவ்வாறான சம்பவங்கள் அதிகம் இடம்பெற்றுள்ளன.

விடுதலைப்புலிகளின் தலைமை மையங்கள் அமைந்திருந்த கிளிநொச்சி, ஜனவரி 2009 இன் முற்பகுதியில் இராணுவத்தின் வசம் வீழ்ந்த பின்னர் ஏ-35 நெடுஞ்சாலை வழியாக பெருமளவான மக்கள் கிழக்குப் புறமாக அதாவது முல்லைத்தீவை நோக்கி இடம் பெயர்ந்தனர்.

முல்லைத்தீவுப் பிரதேசத்திலேயே இறுதி உள்நாட்டு யுத்தம் இடம் பெற்றதுடன் பத்திரிகையாளர்களுக்கான அனுமதியும் மட்டுப்படுத்தப்பட்டது.

தற்போது கிளிநொச்சி மற்றும் இவ்வீதி வழியாகப் பயணிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் தமது நண்பர் ஒருவரையோ அல்லது உறவினரையோ இழந்திருப்பதையும் அல்லது யாராவது நெருங்கிய உறவினர்கள் காணாமற்போயுள்ள வடுக்களைச் சுமந்து கொண்டு செல்வதையும் காணலாம்.

கிளிநொச்சியிலுள்ள சிகை அலங்கரிப்பு நிலையத்திலிருந்து பொன்னுத்துரை சூரியகுமார் என்பவர், நடந்து முடிந்த உள்நாட்டு யுத்தத்தின்போது தனது குடும்பத்தவர்களுடன் கிழக்குப்புறமாக இடம் பெயர்ந்து இலங்கை அரசாங்கத்தால், உருவாக்கப்பட்ட "யுத்தமற்ற வலையங்கள்" வரை சென்றதை நினைவு மீட்டுகிறார். இறுதியில் உள்நாட்டு யுத்தம் இடம்பெற்ற ஒடுங்கிய சதுப்பு நிலப்பகுதியில் அகப்பட்டுக்கொண்ட மக்கள்மீது அரசாங்கப்படைகளும் விடுதலைப்புலிகளும் எவ்வாறு தொடர்ச்சியாகத் தாக்குதல்களை மேற்கொண்டனர் என்பதைப் பலர் நேரில்பார்த்துள்ளனர்.

2009 மே 8 இல் தன்னுடன் கூடவிருந்த 13 பேரின் உயிர்கள் தனி ஒரு எறிகணையால், காவுகொள்ளப்பட்டதாகவும் தான் இதில் பலத்த காயங்களுக்கு உள்ளாகியதாகவும் சூரியகுமார் தெரிவித்தார். இதில் இவரது சகிந்தர் என்ற 8 வயது மகனும் கொல்லப்பட்டதாக சூரியகுமாரன் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன் அன்றைய நாளில் இருந்து சூரியகுமாரனின் 23 வயதான மைத்துனி ஒருவர் காணாமற் போயுள்ளார். "இவரைப் பற்றிய எந்தவித தகவல்களையும் நாம் அறிந்திருக்கவில்லை.

அங்கு நடந்த இந்தச் சம்பவத்தை உங்களால் கற்பனை செய்து கூடப்பார்க்க முடியாது. எல்லாமே அழிகப்பட்டுவிட்டது. இது மிகவும் குழப்பகரமான சம்பவமாகும்" என சூரிய குமாரன் தெரிவித்தார்.

ஏ-35 நெடுஞ்சாலைக்கு அருகில் வசிக்கும், பாலசிங்கம் என அழைக்கப்படும் விவசாயி ஒருவர் –தனது குடும்பம் பொக்கணைப் பிரதேசம் வரை பல தடவைகள் இடம் பெயர்ந்து

## நம்பிக்கையுடன் வாழும் தமிழ் உறவுகள்

சென்றதாக தெரிவித்தார்.

இங்கே இவரது சகோதரன் ஒருவர் காணாமற் போயுள்ளார். "எல்லாமக்களும் இராணுவத்தை நோக்கி ஓடினார்கள் எனது சகோதரன் அங்கு இருக்கவில்லை. நாங்கள் இறந்த உடல்களைத்தாண்டி ஓடினோம்" என இவ்வாண்டு, மே மாதத்தில் அரசாங்க முகாம் ஒன்றிலிருந்து விடுவிக்கப்பட்டு வந்தவிவசாயியான பாலசிங்கம் தெரிவித்தார். "எனது சகோதரனை நாங்கள் எல்லா இடமும் தேடினோம். நாங்கள் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம், பொலிஸ், அரச சார்பற்ற நிறுவனங்கள் என பல இடங்களிற்கும் சென்று வந்துள்ளோம். நான் தற்போதும் இவரைத் தேடிக் கொண்டிருக்கிறேன். இவ்வாறான அமைப்புக்களிடமிருந்து தகவல் எதுவும் கிடைக்காததால், காணமற்போனவர்களின் உறவுகள், மதகுருமார்கள், ஜோதிடர்கள் போன்றோரைத் தேடிச் சென்றுள்ளனர்.

காணாமற்போன உறவுகள் சிலர் இறந்து போயுள்ளதை எற்றுக்கொள்ள முடியாமல், தற்போதும் அவர்கள் உயிருடன் இருப்பதாகவே இவர்கள் கருதுவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கணவன்மார் காணமற்போன இளம் பெண்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழர்களின் இதய பூமியான யாழ்ப்பாணத்தில் உள்ள இந்துமத குருவான சிவசண்முகானந்தக் குருக்கள் என்பரைத்தேடி மக்கள் வருவதாகவும் அவரிடம் தமது "காணமற்போன" பிள்ளைகள் மற்றும் உறவுகள் தொடர்பாக தகவல்தருமாறு கேட்பதாகவும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுடன் மேற்கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை- 2006 ஜனாதிபதி மகிந்தராஜபக்சவால் முறிக்கப்பட்டு இராணுவ முன்னேற்றத் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இறுதி யுத்தம் நிறைவுக்கு வரும்வரை ஒரு இலட்சம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

"காணாமற் போனவர்களின் சாதகங்களுடன் மக்கள் எம்மிடம் வருகின்றனர். இந்த சாதகங்களினூடாக குறிப்பிட்ட நபர் உயிருடன் இருக்கின்றாரா இல்லையா என்பதைச் சொல்ல முடியும்" என இந்துமதக்குரு தெரிவித்தார்.

தமது அன்பிற்குரியவர்கள் தொடர்பாக தன்னிடம் ஜோதிடம் கேட்கவரும் மக்களிடம் தான் தவறாக எதையும் சொல்வதில்லையென்றும் சில சந்தர்ப்பங்களில் உண்மையில் குறிப்பிட்ட நபர் உயிருடன் இல்லாவிடில் அதை அப்படியே அவரது உறவுகளிடம் சொல்லாது "இவரைத் தேடி கண்டுபிடிப்பது மிகவும் கடினம்" என்றே சொல்வது வழமை என சிவசண்முகானந்தக் குருக் கள் மேலும் தெளிவுபடுத்தினார்.

ஏ-35 வீதிக்கருகில் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் சத்தியானந்தராஜா என்கிற விவசாயி தனது அண்ணி, மைத்துனி ஆகியோர் கொல்லப்பட்டதாகத் தெரிவித்தார்.

அத்துடன் இவரது 21 வயதுடைய மருமகன் ஒருவர் காணாமற் போயுள்ளார். இவர்தொடர்பாக அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்திடம் தொடர்பு கொண்டபோது எந்தவொருபதிலும் கிடைக்க வில்லை.

"இவரை இராணுவத்தினர் கொண்டு சென்றார்களா அல்லது புலிகள் கொண்டு சென்றனரா என்பது தொடர்பாக எமக்கு எதுவும் தெரியாது. தற்போது நாங்கள் மதகுரு ஒருவரை தொடர்பு கொண்டுள்ளோம். அத்துடன் ஜோதிடர்களையும் சென்று பார்த்துள்ளோம்.

இவர் தற்போது உயிருடன் இருப்பதாகவே அவர்கள் தெரிவிக்கின்றனர். அவர் தற்போது வராவிட்டாலும் 3 அல்லது 4 மாதங்களில் வருவார்" என் சத்தியானந்தராஜா தெரிவித்தார்.

வடக்கில் யுத்தத்திற்குப்பிந்திய பாரிய கட்டுமானத் திட்டங்களை மேற்கொள்வதில் அரசாங்கம் பல மில்லியன்களைச் செலவழித்துள்ளது. இதில் வீதி அபிவிருத்தித் திட்டங்கள், உடனடி வீடமைப்புத் திட்டங்கள், உணவு மற்றும் நிதி வழங்கல் போன்றவை உள்ளடங்குகின்றன.

இவ்வாறு காணாமற்போன உறவுகள் தொடர்பான விடயங்கள் போர் வடுவாகத் தற்போதும் உள்ளது. தற்போது புலிச் சந்தேக நபர்கள் என தடுத்து வைக்கப்பட்டவர்களின் பெயர்களை அரசாங்கம் வெளியிடவேண்டும் என மனித உரிமைகளுக்கான மாணவர் சங்கத்தின் தலைவர் நுவான்போபகே கேட்டுள்ளார்.

ஐ.நா. செயலாளர் பான்கீமூனால் நியமிக்கப்பட்ட வல்லுநர்குழு இவ்வாண்டின் ஆரம்பத்தில் இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது பல்வேறு விதமான யுத்த மீறல்கள் இடம்பெற்றுள்ளதை அதிகாரபூர்வமாக நிரூபித்துள்ளன.

இதில் பல பத்தாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அனைத்துலக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யுத்தவலயமற்ற பகுதிகளில் அமைந்திருந்த மருத்துவமனைகள் மீது இராணுவத்தினர்மேற் கொண்ட எறிகணைத் தாக்குதல்கள் மிக மோசமான யுத்தக்குற்றச் சாட்டாக முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால், ஐ.நா வல்லுநர்குழுவின் அறிக்கையை இலங்கை அரசு ஏற்க மறுத்துள்ளது. இது தொடர்பாக இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை தயாரித்துள்ளது. தடுத்து வைக்கப்பட்டிருந்த முந்நாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் 11 ஆயிரம்பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும், இதில் 200 பேர்வரை யுத்தக் குற்றம் சுமத்தப்பட்டவர்களாக உள்ளதாக வும் ஆளும் கட்சி நாடுமன்ற உறுப்பி னரும் இணக்கப்பாட்டு முயற்சியில் ஜனாதிபதி ஆலோசகராகச் செயற்படுபவருமான பேராசிரியர் ரஜீவவிஜயசிங்க தெரிவித்துள்ளார். புலிகளால் கொல்லப்பட்டவர்கள் உள்ளடங்கலாக 5 ஆயிரம் வரையான பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என விஜயசிங்க தெரிவித்துள்ளார். தற்போது மீளிணக்கப்பாட்டு முயற் சிக்காக அரசாங்கம் பொருளாதார, சமூக அபிவிருத்திகள் உள்ளடங்கலாக பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வரு வதாகவும் அவர் தெரிவித்தார். "நாங்கள் மக்களை கூட்டு சமூகமாக வாழ அவர்களைத்தூண்ட வேண்டி யுள்ளது" எனவும் அவர்தெரிவித்தார்.

தற்போது 9 வயது இருக்கக் கூடிய அபி குடும்பம் போன்ற பலகுடும்பங்களால் பெரிதாக ஒன்றும் செய்ய முடியாது.

ஆனால், இவர்கள் நம்பிக்கையுடன் காத்திருக்க மட்டுமே முடியும். "எனதுமகன் எங்கேயாவது உயிருடன் இருப்பானென நான் நம்புகிறேன்" என அபியின் தாயார் உள்ளம் குமுறுகிறார்.

கிளி, முல்லை மாவட்டத்தில்

# காணி உரிமைகள் சட்டம் தொடர்பான கருத்தரங்கு

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட மக்கள் பிரதிநிதிகளை ஒன்றிணைத்து கிளிநொச்சி மாவட்டத்தில் மாற்றுக் கொள்ளைகளுக்கான நிலையத்தினரால் காணி உரிமைகள் சட்டங்கள் தொடர்பான கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றுள்ளது.

மாற்றுக் கொள்கைளுக்கான நிலையத்தினால் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்தரங்கினை நடத்திவருகின்றனர். இதன் ஒரு அங்கமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மக்கள் பிரதிநிதிகளை ஒன்றிணைத்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தலைமையில் கரைச்சி பிரதேசசபை மண்டபத்தில் இவ் விழிப்புணர்வு கருத்தரங்கு இடம்பெற்றுள்ளது.

போருக்கு பின்னர் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு நெருக்குவாரங்களில் காணி தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் மிக முக்கியமாக கருதப்படுகின்றது. இந்த நிலையில் அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள பிம்சவிய திட்டம் மக்களிடையே காணி தொடர்பான ஒரு தெளிவற்ற சூழலை உருவாக்கியிருப்பதாக மக்கள் பிரதிநிதிகள் கருத்து தெரிவித்துள்ளமை தொடர்பாக குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கை ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்ன சிங்கம் தெளிவுபடுத்தியதுடன் வளவாளர்களாக மாற்றுக் கொள்கை நிலையத்தை சேர்ந்த சட்டத்தரணி பவானி பொன்சேகா மற்றும் மீராக்ரகீம், யாழ். பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளர் குருபரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-2)

# டெங்கை கட்டுப்படுத்துவதற்கு வவு. நகரசபை துரித வேலைத்திட்டம்

(வவுனியா)

வவுனியா நகரசபைக்குட்டபட்ட பகுதிகளில் டெங்கு நோய் பரவக்கூடிய சூழ்நிலை காணப்படுவதோடு அதனை பரவாது தடுப்பதற்கு நகர சபையினால் துரிதவேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வவுனியா நகர சபையின் உப தலைவர் எம்.எம். ரதன் தெரிவித்தார்.

இதற்கமைய எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை டெங்கொழிப்பு நாட்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இந் நாட்களில் நகரசபைக்குட்பட்ட பகுதியில் உள்ள பதினொரு வட்டாரத்திலும் சிரமதானப் பணிகள் மற்றும் குப்பைகள் அகற்றும் பணிகள் இடம்பெறும் எனவும் தெரிவித்தார்.

இதற்கமைய எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை பெரியார்குளம், இறம்பைக்குளம் சகாயமாதாபுரம் என்பனவும் மறுநாள் முதலாம் குறுக்குத் தெரு, இரண்டாம் குறுக்குத் தெரு, சூசைப்பிள்ளையார் குளம், சின்னப் புதுக்குளம் ஆகியனவும் 16 ஆம் திகதி கோவில் குளம், வெளிக்குளம் தெற்கிலுப்பை குளம் ஆகிய இடங்களில் இடம்பெறும்.

எதிர்வரும் 17 ஆம் திகதி தேக்கம்தோட்டம், மூன்றுமுறிப்பு, மதவுவைத்தகுளம், தோணிக்கல், கற்குழி என்பனவும் மறுநாள் வெள்ளிக்கிழமை உள்வட்ட வீதி, வெளிவட்ட வீதி, வை.எம்.சீ.ஏ.ஒழுங்கை, பூங்கா வீதி, குட்செட் வீதி, கரப்பன்காடு போன்ற கிராமங்களில் துப்புரவுப்பணி இடம்பெறவுள்ளன.

மீண்டும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை வைரவப்புளியங்குளமும் மறுநாள் செவ்வாய்க்கிழமை குருமண்காட்டுப்பகுதியிலும் புதன்கிழமை 23 ஆம் திகதி நகரப்பகுதியும் வியாழக்கிழமை 24 ஆம் திகதி தாண்டிக்குளம் , யாழ்வீதி, பத்தினியார், மகிழங்குளம், திருநாவற்குளம் போன்ற இடங்களிலும் வெள்ளிக்கிழமை பட்டைக்காடு, வேப்பங்குளம், பட்டானிச்சூர் கிராமங்களிலும் இறுதியாக சனிக்கிழமை பண்டாரிக்குளம், தட்சநாதன் குளம், உக்கிளாங்ளம் பகுதிகளிலும் துப்பரவு பணி இடம்பெறும் என குறிப்பிட்டார்.

இத் திட்டத்தினை சிறப்பாக செயற்படுத்துவதற்கு பொதுமக்கள் தமது பூரணமான ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

(அ-2)

# கிளிநொச்சி ஆசிரிய ஆலோசகரை விடுதலை செய்யுங்கள்!

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

சரியான காரணங்களை கூறாது இது வரை தீவிரவாத தடுப்பு பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆசிரிய ஆலோசகர் குலவீரசிங்கம் கோகுலனை முறையான விசாரணைகளின் பின்னர் விடுவிக்கவேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.நாட்டில் அவசரகாலச்சட்டம் மற்றும் யுத்தம் இன்றி அமைதியான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதூகவும் இந்நிலையில் சரியான காரணங்கள் இன்றி ஆசிரியர் ஒருவர் விசாரணைக்கு இழுத்துச்செல்லப்பட்டுள்ளமையை கண்டிப்பதாக சங்கத்தின் பிரதான செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

மானிப்பாய் பொலிஸார் எனக்கூறிய சிலர் கிளிநொச்சி வலயக் கல்வி பணிமனையில் சங்கீத பாட ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றிய ஆசிரிய ஆலோசகரை கடந்த 6 ஆம் திகதி அழைத்துச் சென்றுள்ளனர்.

வாக்குமூலம் எடுத்துவிட்டு மூன்று மணித்தியாலயத்திற்குள் விடுதலை செய்வதாகக் கூறி அழைத்துச் சென்று பின் இரகசியமாக அழைத்துவந்து குடும்பத்தாரிடம் மாத்திரம் காட்டிவிட்டு மீண்டும் அழைத்துச் சென்றுள்ளனர். அதன் பின்னர் இதுவரையில் அவர் காரணமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கோகுலனின் மனைவியான ஆசிரியை விலாசிதா HRC/JA/170/2011/01 என்ற எண்ணில் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த ஆசிரியர் ஆலோசகரை விடுதலை செய்ய வலியுறுத்தி பொலிஸ் மா அதிபருக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகவும் தெரியவருகிறது. (அ-2)

# கிளி. கரைச்சி பிரதேச கலைஞர் கௌரவிப்பு

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தினால் நடத்தப்படவுள்ள இவ்வாண்டுக்கான எழுத்தாளர்கள், கலைஞர்கள் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர். இதற்காக பின்வரும் சமூக ,கலை, இலக்கிய பணியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் விபரம் பின்வருமாறு;

இளையதம்பி நடராசா (எழுத்துத்துறை), மணிமுத்து இராசதுரை(இசைத்துறை), கே.அலெக்சாண்டர்(நாடகம்), ஐயாக் கண்ணு ஆறுமுகம் (ஆர்மோனியம்), வல்லிபுரம் ஏழுமலைப்பிள்ளை (நாடகம், திரைப்படம் ,இலக்கியம்), வேலன் சின்னத்தம்பி(ஆர்மோனியம், கூத்து), வைத்தி ஐயம்பிள்ளை(கூத்து), செல்வராணி சேகரம்பிள்ளை(சமயப்பணி), அப்பாச்சி வல்லிபுரம்(கூத்து), சிவராஜா சிவகருணாகரன்(எழுத்துத்துறை), சிவராமதீசன் (ஓவியம்), தில்லை நடராசன்(பல்துறை) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான கௌரவிப்பானது எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள கலாசார விழாவில் வழங்கப்படவுள்ளதாக கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (அ-2)

# பரந்தன் பொதுச்சந்தை புதிதாக நிர்மாணம்

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச சபையின் பரிபாலனத்தில் உள்ள பரந்தன் நகர பொதுச் சந்தை புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சந்தைக் கட்டடத்தில் செயற்படத் தொடங்கியுள்ளது.

யுத்தத்திற்கு பிண்பு தற்காலிக கொட்டகை ஒன்றின்கீழ் செயற்பட்டு வந்த இச் சந்தைக்கான கட்டடத்தை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அனுசரணை வழங்கி கட்டிக் கொடுத்துள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான நகரங்களில் ஒன்றான பரந்தனில் பஸ் நிலையம் ஒன்று இதுவரை நிறுவப்படாததால் மழை காலத்தில் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

இதேபோல், மாவட்டத்தின் பிரதான தலை நகரான கிளிநொச்சி நகரிலும் பஸ் நிலையம் இல்லாததால் பயணிகள் பலவித அசௌகரியங்களை எதிர்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# முன்னாள் போராளிகள் 40 பேர் விடுவிக்கப்படுவர்


## புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

நீதிமன்ற உத்தரவிற்கமைய தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு நிலையங்களில் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் சந்தன ராஜகுரு தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு நிலையங்களில் பயிற்சிகளை நிறைவுசெய்த மேலும் 40 முன்னாள் போராளிகள் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என அவர் கூறியுள்ளார்.

இதில் மூன்று பெண்களும் அடங்குவதாக புனர்வாழ்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவர்களை சமூகமயப்படுத்தும் நிகழ்வு வவுனியாவில் இடம்பெறவுள்ளது. (அ-2)





துணுக்காய் கல்வி வலயத்தில் பிரதிக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி ஓய்வு பெற்ற சி.இராஜேஸ்வரனுக்கு இவ்வலயத்தைச் சேர்ந்த 56 பாடசாலை அதிபர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட மணிவிழாவும் பிரிவு உபசாரநிகழ்வும் அண்மையில் மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் மணிவிழா நாயகன் மாலை அணிவித்து விருந்தினர்களுடன் அழைத்துவரப்படுவதையும் துணுக்காய் கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப்பணிப்பாளர் த.விஜயபாலா உரையாற்றுவதையும் இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மல்லாவிச் செய்தியாளர்)

# ஊடக ஒழுக்கவிதிகளை தயாரிப்பதற்கு விசேட குழு

## வர்த்தமானி அறிவித்தல் விரைவில் என்கிறார் டபிள்யூ.கி.கணேகல

(கொழும்பு)

ஊடக ஒழுக்கவிதிகள் விரைவில் அறிமுகம் செய்யப்பட உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது .சில இணையத்தளங்கள் முக்கியஸ்தர்களை இலக்கு வைத்து அவதூறான செய்திகளை வெளியிட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நாட்டில் இயங்கி வரும் ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு புதிய ஒழுக்க விதியொன்று விரைவில் அறிமுகம் செய்யப்பட உள்ளது.தனியார் மற்றும் அரச ஊடக நிறுவனங்களுடன் இணைந்து இந்த ஒழுக்கவிதிகள் தயாரிக்கப்பட உள்ளன. உரிய சட்டங்களின் பிரகாரம் இந்த புதிய ஒழுக்க விதிகள் வர்த்தமானியில் அறிவிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஊடக ஒழுக்க விதிகளை தயாரிப்பதற்காக விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக ஊடகஅமைச்சின் செயலாளர் டபிள்யூ.பி. கணேகல தெவித்துள்ளார்

ஏற்றுக்கொள்ள முடியாத ஒழுக்க விதிகளை அறிமுகம் செய்யப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். சகல ஊடக நிறுவனங்களினாலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் இந்த ஒழுக்கவிதிகள் அமையப் பெறும் என அவர் தெரிவித்துள்ளார்.

' ஊடகங்களுக்கான ஒழுக்க கோவையும் வழிகாட்டல் செயற்பாடும் விரைவில் வர்த்தமானியில் வெளியிடப்படவுள்ளது.

இலங்கையில் உள்ள சகல அரசாங்க, தனியார் துறை பத்திரிகைகள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள், செய்திகளை வெளியிடும் இணையத்தளங்ள் ஆகியவற்றுக்கான தர்மத்திற்கு ஏற்புடைய வகையிலான ஒழுக்கக்கோவை தயாரிக்கப்படுகிறது.

இதேவேளை ஊடகங்களுக்கான வழிகாட்டல் வழங்கும் சட்டப்பிரமாணங்களையும் அரசாங்கம் இப்போது ஒளிபரப்பு, அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் கீழ் சட்ட வரைஞரின் ஊடாக தயாரித்து வருகின்றதென்று ஊடக மற்று தகவல்துறை அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இது பற்றி மேலும் விளக்கமளித்த அவர், இலங்கையில் ஊடகங்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் அல்லது கண்காணிக்கும் அதிகாரம் தமது அமைச்சுக்கு இருக்கிறது என்றும் இதுவரையில் அரசாங்க ஊடகங்களைத்தவிர தனியார் ஊடகங்கள் குறிப்பாக தனியார் இலத்திரனியல் ஊடகங்கள் தங்களை இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்த புதிய சட்டப்பிரமாணம் தயாரிக்கப்பட்டவுடன் இலங்கையில் உள்ள சகல அரச, தனியார் ஊடகங்களின் பொறுப்பதிகாரிகளை அழைத்து அதுபற்றி கலந்துரையாடல்கள் நடத்தபடுமென்றும் அப்போது சகல ஊடகங்களின் கருத்துக்கள் கேட்டறியப்படுமென்றும் அந்த ஊடகங்களின் பொறுப்பதிகாரிகள் தெரிவிக்கும் கருத்துக்கள் நியாயபூர்வமாக இருந்தால் அவற்றுக்கு ஏற்புடைய வகையில் திருத்தங்கள் கொண்டுவரப்படும்.

அதன்பின்னர் அந்த சட்டப்பிரமாணங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டபின்னர் சட்டபூர்வமாக நடைமுறைப்படுத்தப்படுமென் றும் கூறினார். இந்த புதிய சட்டப் பிரமாணங்கள் மூலம் தனிநபர் சுதந்திரத்தை பாதிக்காத வகையில் ஊடகங்கள் செயற்படுவதற்கு உத்தரவாதம் அளிக்கப்படுமென்றும் கணேகல மேலும் தெரிவித்தார். (அ-2)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

என்றிப் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களை மேற்கொள்ளும் ஒப்பந்தகாரர்களை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வடமாகாணசபை கேட்போர் கூடத்தில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

எனவே இச்சந்திப்பில் அனைத்து ஒப்பந்தகாரர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுள்ளது.

(அ)

## கடனட்டை மோசடியில் கைது செய்த பெண் பிணையில் விடுதலை

(கொழும்பு)

மட்டக்களப்பில் இலத்திரனியல் கடனட்டை மோசடியில் ஈடுபட்ட 21 வயது யுவதியொருவர் அண்மையில் மட்டக்களப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது ஒரு இலட்சம் சரீரப்பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 3 ஆம் திகதி கொமர்ஷல்வங்கியிலிருந்து இலத்திரனியல் கடனட்டை ஊடாக பணத்தைப் பெற்றுக் கொண்ட முறைப்பாட்டுக்காரர் தவறுதலாக கடனட்டை மீளப் பெற்றுக் கொள்ளாமல் சென்ற நிலையில் குறித்த யுவதி தன் கடனட்டை மூலமாக பெற்றுக்கொள்ளச் சென்ற வேளை குறித்த கடனட்டையை மீட்ட நிலையில் அதனுடாக பண மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

குறித்த நபர் தனது கடனட்டையை காணவில்லை என 5 ஆம் திகதி மட்டக்களப்பு பொலிஸில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து மட்டக்களப்பு குற்றப்புலன் விசாரணைப் பிரிவினர் வங்கி முகாமையாளரின் உதவியுடன் மேற்கொண்ட விசாரணையைத் தொடர்ந்து குறித்த யுவதி கைது செய்யப்பட்டார்.

அக்கடனட்டையைப் பயன்படுத்தி குறித்த யுவதி ஆயிரத்து நானூறு ரூபாவுக்கு பாதணியும் இரண்டு இலட்சத்து இரண்டாயிரம் ரூபாவிற்கு பெறுமதியான இரண்டு பவுண் தங்கச் சங்கிலியும் கொள்வனவு செய்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த யுவதியிடமிருந்து அப்பொருட்களும் கடனட்டையும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட சந்தேக நபர் ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் விடுதலை செய்யப்பட்ட நிலையில் அக்கடனட்டைக்கு பொருட்களை வழங்கிய வர்த்தகர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(அ-2)

## மன்னார் பிரதேசசபைக்கு ஆளுநரால் விருதுகள் வழங்கல்

(கொழும்பு)

வடக்கு மாகாண உள்ளூராட்சி மாநாடு கண்காட்சி நிகழ்வின் போது மன்னார் பிரதேச சபைக்கு ஆறு விருதுகளும் சான்றிதழ்களும் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியால் வழங்கப்பட்டன.

மன்னார் பிரதேசசபை 2009 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி வார போட்டியில் முதலாமிடத்தினையும் மாகாணமட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தையும் 2010 இல் உள்ளூராட்சி வாரப்போட்டியில்மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தையும் மாகாணமட்டத்தில் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டது.

அத்துடன் உள்ளூராட்சி மாநாட்டின் கண்காட்சியில் சிறந்த தெரிவில் 9 ஆம் இடம் பெற்று சிறந்த பங்குபற்றுதலுக்கான விருதுமாக 6 விருதுகள் இப்பிரதேசசபைக்கு வழங்கப்பட்டன.

இதேவேளை 2007-2008காலப்பகுதியிலும் வடக்கு மாகாணத்தில் சிறந்த செயலாளருக்கான விருதும் மன்னார் பிரதேசசபை செயலாளருக்கு கிடைத்துள்ளது. இதேவேளை தேசிய ரீதியில் சிறந்த உள்ளூராட்சி சபையாக தெரிவுசெய்யப்பட்டு தற்போதும் உள்ள நிலையை ஆளுநர் பாராட்டி கௌரவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-2)

## நாட்டில் குற்றச் செயல்கள் உயர்வடைந்துள்ளன-ஐ.தே.க

நாட்டில் குற்றச் செயல்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. முதல் ஒன்பது மாதங்களில் 553 படுகொலைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

தாக்குதல் சம்பவங்களினால் பாரியளவில் காயங்கள் ஏற்பட்ட ஆயிரத்து233 சம்பவங்களும் பதிவாகியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

நாட்டில் இடம்பெற்று வரும் குற்றச் செயல்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்க உள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தாம் இன்று விசேட உரையொன்றை பாராளுமன்றில் ஆற்ற உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். முதல் ஒன்பது மாதங்களில் ஆயிரத்து 298 பாலியல் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலை ஆரோக்கியமானதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## ஜனவரியில் இருந்து மருந்து விலைகள் பேணப்படும்

எதிர்வரும் ஜனவரியில் இருந்து மருந்துகளிற்கான விலைக் கட்டுப்பாடு கொண்டு வரப்பட இருக்கின்றது.இது தொடர்பான வர்த்தமானி விரைவில் வெளியிடப்பட இருப்பதாகவும் சுகாதார அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கான நோக்கம் சந்தையில் ஒரு மருந்து ஒரே விலையில் விற்கப்படுவதற்கேயாகும். அரச மருந்துக் கூட்டுத்தாபனமும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனமும் இதற்காக ஒன்றாக இணைந்துசெயற்படவுள்ளன.(அ-2)


வாழ்க வையகம்



வாழ்க வளமுடன்

அருட்தந்தை
தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்களால் வடிவமைக்கப்பட்ட
மனவளக் கலை யோகா பயிற்சிகள்

*முழுமை நலவாழ்விற்கு மனவளக்கலை யோகா*

இடம்:- இணுவில்-பரராசசேகரப் பிள்ளையார் மணிமண்டபம்

காலம்:- 12/11/2011 மாலை 5.00மணிக்கு இலவச அறிமுக உரை
13/11/2011 மாலை 5.00 மணிமுதல் 18/11/2011 திகதிவரை

காயகல் பயிற்சி, தியானம், உடற்பயிற்சி என்பன நடைபெறும்.
பயிற்சி வழங்குபவர்:- மனவளக்கலைப் பேராசிரியர் அருள் நிதி
K ஜெயபால் (Bse) அவர்கள் (தமிழ்நாடு-இந்தியா)

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் 40 வருடங்களுக்கு மேலாக தொடர் ஆராய்ச்சியை மேற்கொண்டு குறுகிய நேரத்தில் தினந்தோறும் இலகுவாக செய்யக் கூடியதும், அற்புதமான பிரதிபலனை அளிக்க வல்லதுமான சித்தர் வழிவந்த காயகல்பப் பயிற்சி மற்றும் உடற்பயிற்சி, தியானப்பயிற்சி, அகத்தாய்வுப் பயிற்சி போன்றவற்றை முறையாகவும், நிறைவாகவும் பெற்றுக் கொண்டு பயன் பெறுங்கள்.

இப்பயிற்சிகளின் மூலம் நோய் வராமல் பாதுகாப்பதுடன் சோம்பல் நீங்கி, சுறுசுறுப்புடன், ஞாபக சக்தியை அதிகரித்து, சீரான கண்பார்வையுடன், இரத்த அழுத்த சமன்பாடு, இருதயநோயை ஆற்றுப்படுத்தி, பொருளாதார நிறைவு, குடும்ப அமைதி, பெண்களுக்கான மாதவிலக்குப் பிரச்சனையை குணமாக்கி மொத்தத்தில் திருவுடைய ஆற்றல்மிகு தோற்றப் பொலிவுடனும், மன நிறைவுடன் வாழ வழிகாட்டும்.

ஏற்கனவே பயிற்சியைப் பெற்றவர்கள் ஆவலுடன் தொடர்ந்து பயிற்சியைப் பெற்று வருகிறார்கள். இந் நிலையில் நீங்களும் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள இவ்வரிய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

வாழ்க வளமுடன்

★ பயிற்சிக்குக் கட்டணம் உண்டு

தொடர்புகளுக்கு:-
16.லில்லி அவனியூ,
ளவத்தை,
ழம்பு - 06

இலங்கை மனவளக்கலை மன்ற
அறக்கட்டளை.

T.P:-5658412, 2580711 (சி-4955)

# தூக்குத் தண்டனையை இரத்துச் செய்ய அமைச்சரவையை கூட்டி முடிவெடுப்பார்

## ஜெயா மீது நம்பிக்கை என்றார் சீமான்

(கொழும்பு)

பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோக்கான தூக்குதண்டனைக்கு 8வாரகாலதடை விதிக்கப்பட்டது. இதுதொடர்பாக நீதிமன்றத்தில் விசாரணை இடம்பெற்று வருகிறது.

இந்த நிலையில் நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் வேலூர் சிறையில் இருக்கும் முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோரை சந்தித்து பேசினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கருத்துரைக்கையில், சிறையில் உள்ள 3 பேரின் தூக்கு தண்டனை வழக்கு எதிர்வரும் 29 ஆம் திகதி விசாரணைக்கு வருகிறது. அவர்கள் 3 பேரும் சட்ட ரீதியாக விடுதலையாவார்கள். தூக்கு தண்டனை இரத்து செய்யப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளது.

தூக்கு தண்டனையே கூடாது என்று தமிழர்கள் மட்டுமல்ல பல்வேறு அமைப்பினரும் குரல் கொடுத்து வருகின்றனர். இதனை எதிர்த்து ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம் ஆகியவை நடத்தி எங்கள் உணர்வை வெளிப்படுத்தி வருகிறோம்.

கொல்லக்குத் தண்டனை கொலையாகாது. 21 ஆண்டுகள் நீண்ட ஆயுள் தண்டனை அனுபவித்து உள்ளனர். அவர்களுக்கு 2 தண்டனை கொடுக்க கூடாது.

எதிர்வரும் 29 ஆம் திகதி நீதிமன்றில் நடக்கும் வழக்கில் அவர்கள் விடுதலையாவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

தமிழக அமைச்சரவையை முதலமைச்சர் ஜெயலலிதா கூட்டி தூக்கு தண்டனையை இரத்து செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை உள்ளது.

நான் 2008 இல் இருந்து 10 ஆண்டுகள் அமெரிக்கா, கனடா செல்ல விசா எடுத்துள்ளேன். தற்போது சர்வதேச அளவில் தமிழர்களை நான் ஒருங்கிணைந்திடுவேன் என்ற அச்சம் காரணமாக எனக்கு அமெரிக்கா, கனடாவுக்கு செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று கூறினார். (அ-2)

# புதிர் போட்டி

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தினால் நடத்தப்படும் விசேட புதிர்ப்போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9 மணிக்கு வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்றவுள்ள கோட்டமட்ட, வலய மட்ட மாணவர்கள் அன்றைய தினம் உரிய நேரத்திற்கு பங்கு பற்றுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா அறிவித்துள்ளார்.

(அ-3-24)

# இந்தியாவில் கடனட்டை மோசடியில் ஈடுபட்ட இலங்கையர்கள் கைது

## த-இந்து நாளேடு தகவல்

(கொழும்பு)

இந்தியாவில் கடனட்டை மோசடியில் ஈடுபட்ட இலங்கையைச் சேர்ந்த சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாக த. இந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த சில மாதங்களில் இவ்வாறான மூன்றாவது குழு கைது செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைதானவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.ஜோன்ரோஸ் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே வங்கி கிளைகளுக்கு வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தல்களின் அடிப்படையில் மோசடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தொடர்ச்சியாக கடனட்டை மோசடியில் ஈடுபட்டு வருகின்ற நான்கு இலங்கையர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவர்கள் குறித்த தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அவர்களை தற்போது தமிழக பொலிஸாரினால் தேடப்பட்டு வருவதாகவும் அவர்களின் கடவுச் சீட்டு உள்ளிட்ட விபரங்கள் பொலிஸ் வசம் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# பிரதி அமைச்சர் குணரட்னவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பிரதி அமைச்சர் ஒருவருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நடவடிக்கைகளை விமர்சனம் செய்த குற்றத்திற்காக விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொது முயற்சியான்மை பிரதி அமைச்சர் சரத் குமார குணரட்னவிற்கு எதிராக வழக்கு விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

மேல் மாகாண சுற்றுலா மற்றும் வீடமைப்பு அமைச்சர் நிமால் லன்சாவின் வீட்டில் சோதனை நடத்தப்பட்டதனைத் தொடர்ந்து அவரது வீட்டுக்கு ஜனாதிபதி சென்றதனை பிரதி அமைச்சர் குணரட்ன விமர்சனம் செய்திருந்தார்.

தனியார் தொலைக்காட்சி நிறுவனமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் பிரதி அமைச்சர் ஜனாதிபதியின் நடவடிக்கைகளை விமர்சனம் செய்துள்ளார்.

பிரதி அமைச்சரின் விமர்சனம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பிரதி அமைச்சரின் நடவடிக்கைகள் குறித்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினர் ஒழுக்காற்று விசாரணை நடத்தவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

குணரட்ன கடந்த 30 ஆண்டுகளாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் செயற்பாட்டாளராக கடமையாற்றி வருகின்றார்.

நிமால் லன்சா அதே தொகுதியை பிரதிநிதித்துவம் செய்வதுடன் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அண்மையில் ஆளும் கட்சிக்கு தாவியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-2)

# நோர்வே கருத்தரங்கில் பங்கெடுக்க மிலிந்த பயணம்

(கொழும்பு)

இலங்கை சமாதான முனைப்புக்கள் தொடர்பில் நோர்வேயில் நடைபெறவுள்ள கருத்தரங்கில் ஜனாதிபதியின் ஆலோசகர் மிலிந்த மொரகொட கலந்து கொள்ளவுள்ளார். நேற்றைய தினம் குறித்த கருத்தரங்கு நோர்வேயில் நடைபெற்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மிலிந்த மொரகொடவை கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக அனுப்பி வைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அபிவிருத்தி மற்றும் கூட்டுறவிற்கான நோர்வே முகவர் நிறுவனத்தினால் இந்த கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட சமாதான முனைப்புக்கள் ஏதனால் தோல்வியடைந்தன உள்ளிட்ட காரணிகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாக இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஐ.தே.கவின் மூன்று தலைவர்களும் முரண்பாடுகளை மறக்க வேண்டும்


## ஹரீன் பெர்னாண்டோ எம்.பி.ஆலோசனை

(கொழும்பு)

ரணில், கரு, சஜித் ஆகிய மூன்று தலைவர்களும் இணைந்து தமக்கிடையேயான முரண்பாடுகளை மறந்து ஒன்றிணைந்து கட்சியின் முன்னேற்றத்துக்காக செயற்பட வேண்டும். இல்லையேல் கட்சியின் நான்காம் நபர் ஒருவர் தலைமை பீடத்துக்கு வரக்கூடும் என எச்சரிக்கிறார் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் சர்வாதிகார செயற்பாடுகள் மேலோங்கியுள்ளன. அதனை தடுத்து நிறுத்த பாராளுமன்றத்தில் குரல் கொடுத்து வரும் அதேவேளை மக்களை ஒன்றிணைத்துக் கொண்டு வீதியில் இறங்கிப் போராட வேண்டும். அதன்மூலமே அரசாங்கத்தின் தவறான செயற்பாடுகளை தடுத்து நிறுத்தி நாட்டில் மீண்டும் ஜனநாயகத்தை நிலைநாட்ட முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)




யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியில் முத்தமிழ் மன்றம் நடத்திய முத்தமிழ் பெருவிழா அண்மையில் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.
இதில் மாணவர்களின் கலை நிகழ்வு இடம்பெறுவதைப் படத்தில் காணலாம்.

# துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான தேசிய பாதுகாப்பிற்கும் நிரந்தர தீர்விற்குமான செயற்றிட்டத்தினால் துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில் கிராம சேவையாளர் பிரிவுகளான புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி, ஜயகன் குளம் ஆகிய மக்களிற்கான நடமாடும் சேவையொன்று எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.15 மணிவரை முல்லைத்தீவு ஜயகன் குளம் அ.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந் நடமாடும் சேவையில் துணுக்காய் பிரதேச செயலகம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பதிவாளர் நாயகத் திணைக்களம், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சமூக சேவைகள் திணைக்களம், சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு, பொலிஸ் நிலையம், மாங்குளம், பால்நிலை வன்முறைக்கு எதிரான அமைப்பு, கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்களம், விவசாயத் திணைக்களம், சிறுவர் பராமரிப்பு திணைக்களம், மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குழு, பிரதேச சபை ஆகிய நிறுவனங்கள் தமது சேவைகளை வழங்கவுள்ளன.

இந் நடமாடும் சேவையின் மூலம் மக்கள் தமது பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியுமென முல்லைத்தீவு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான செயற்றிட்ட பிராந்திய நிகழ்ச்சித் திட்ட அதிகாரி இ.அமலன் அறிவித்துள்ளார்.

(அ-2)

# புகையிரதத்தில் ஏற முற்பட்ட பெண் பரிதாப மரணம்

நாவலப்பிட்டி கலபட புகையிரத நிலையத்தில் நேற்று காலை 7 மணியளவில் புகையிரதத்தில் ஏறுவதற்காக முற்பட்ட பெண்ணொருவர் தவறி வீழ்ந்து பரிதாபகரமாக மரணமாகியுள்ளார்.

கலபட தோட்டத்தை சேர்ந்த ஜோன்பீற்றர் குணவதி (வயது 48) என்பவரே இவ்வாறு மரணமானவர் ஆவார்.

ஹற்றன் நோக்கிச் சென்றுகொண்டிருந்த புகையிரதத்தில் ஏறுவதற்காக முற்பட்ட மேற்படி பெண் தற்செயலாக தவறி கீழே வீழ்ந்து படுகாயமடைந்துள்ளார். இந்த நிலையில் மேற்படி பெண்ணை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபோது வழியில் மரணமானார்.

சடலம் தற்போது நாவலப்பிட்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்த விபத்துச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# நிலக்கரி சுரங்கவிபத்தில் 20 பேர் உயிரிழப்பு

(பீஜிங்)

சீனாவில் யுனான் மாநிலத்தில் உள்ள நிலக்கரி சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்தில் 20 பேர் பலியானார்கள்.24 பேர் சுரங்கத்திற்குள் சிக்குண்டு தவிக்கிறார்கள்.அவர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.நேற்று காலை 6.30 இந்த விபத்து நடந்தது.

சிஷீவாங்க் என்ற இடத்தில் உள் சுரங்கத்தில் கியாஸ் வெடிவிபத்து ஏற்பட்டது. அப்போது எவ்வளவு பேர் சுரங்கத்தில் பணியில் இருந்தார்கள் என்பது தெரியவில்லை.இந்த விபத்தில் 20 பேர் பலியானார்கள்.

மேலும் 24-பேர் சிக்கிக்கொண்டு உள்ளனர். அவர்களை மீட்பதற்காக 30 தீயணைப்பு படையினரும் 100 மீட்புக்குழுவினரும் மீட்புப்பணியில் ஈடுபட்டு உள்ளனர். 300 மருத்துவ பணியாளர்கள் மருத்துவ உதவிக்காக ஆயத்தமாக இருக்கின்றார்கள்.

சீனாவில் சுரங்க விபத்துக்கள் அதிக அளவில் நடக்கின்றன.

கடந்த சில வாரங்களில் பல விபத்துக்கள் நடந்து உள்ளன. (அ-2)

# இந்தியாவின் விளையாட்டு மைதானமாக ஆப்கானிஸ்தான்

## முஷாரப் தெரிவிப்பு

இந்தியாவின் விளையாட்டு மைதானமாக ஆப்கானிஸ்தான் உள்ளது என பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப் தற்போது அமெரிக்கா மற்றும் லண்டனில் தங்கியுள்ளார். பாகிஸ்தானில் அவர் மீது ஏராளமான குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

முன்னாள் பிரதமர் பெனாசீர் கொல்லப்பட்ட வழக்கிலும் அவர் மீது குற்றச்சாட்டு உள்ளது. எனவே தாயகம் திரும்பினால் கைது செய்யப்பட உள்ளார்.

இதற்கிடையே அவர் பி.பி.சி தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது,

பாகிஸ்தானில் உள்ள பல்வேறு பிரிவினைவாதங்களால் அங்கு குழப்ப நிலை காணப்படுகின்றது.

அபோதாபாத்தில் ஒசாமா பின்லேடன் ஒளிந்திருந்தால் அந்நாட்டின் இராணுவ பாதுகாப்பு சரியில்லை என கூற முடியாது.

பயங்கரவாதத்தை ஒழிக்க நான் அமெரிக்காவுடன் நட்புறவு கொண்டிருந்த அதே வேளையில் தலிபான் போன்ற அமைப்புகளுடன் தொடர்பு வைத்திருந்ததாக கூறப்படும் குற்றச்சாட்டு அடிப்படையில்லாதது.

தலிபான் தலைவர் முல்லா ஓமர் பாகிஸ்தானில் இருப்பதாக தெரியவில்லை. இதையே தான் ஒசாமா பின்லேடன் விடயத்திலும் கூறினேன். உண்மையிலேயே ஒசாமா பாகிஸ்தானில் இருந்தது எனக்குத் தெரியாது.

ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான் எதிர்ப்பு பிரசாரத்தை இந்தியா செய்து வருகின்றது. இதற்கு ஏராளமான ஆதாரங்களை நான் காட்ட முடியும். காந்தகார், ஜலாலாபாத் ஆகிய இடங்களில் இந்திய தூதரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆப்கானிஸ்தான் இராணுவத்தினருக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இதன்மூலம் அவர்கள் பாகிஸ்தான் எதிர்ப்பு பிரசாரத்தை செய்து வருகின்றனர். கடந்த 50




ஆண்டுகளாக ரஷ்யா மற்றும் இந்தியாவின் விளையாட்டு மைதானமாக ஆப்கானிஸ்தான் இருந்து வருகின்றது.

என்னை கைது செய்யும் சூழ்நிலை காணப்பட்டாலும் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி பாகிஸ்தான் திரும்ப உள்ளேன். பெனாசீர் பூட்டோவிற்கு போதிய பாதுகாப்பு கொடுக்காததற்கு ஜனாதிபதியாக இருந்த நான் எந்த விதத்திலும் பொறுப்பாக முடியாது.

ஏனென்றால் கடந்த 2002 க்குப் பின் பாகிஸ்தானில் பாராளுமன்றம் நடைபெற்றது. பிரதமர் இருந்தார். அவர்கள் தான் பாதுகாப்பு விடயங்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும். (அ-2)

# இஸ்ரேலின் முன்னாள் ஜனாதிபதிக்கு சிறை



இஸ்ரேல் முன்னாள் ஜனாதிபதி மோஷி கத்நாவ் (65வயது). இவர் பதவியிலிருந்த போது தனது பெண் உதவியாளரை கற்பழித்ததர்கவும் மேலும் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகவும் அவர் மீது புகார் கூறப்பட்டது.

அதைத்தொடர்ந்து அவர் மீது கடந்த 2009 ஆம் ஆண்டு நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. 18 மாதங்கள் நடந்த விசாரணைக்கு பின் கடந்த ஆண்டு அவருக்கு 7 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இதை எதிர்த்து கத்நாவ் உயர் நீதிமன்றில் மேல் முஉறயீடு செய்தார்.தனது பெண் உதவியாளரை கற்பழிக்கவில்லை என்றும் தங்களுக்கு இடையே காதல் இருந்ததாகவும் கூறி 246 பக்க மறுப்பு அறிக்கை தாக்கல் செய்திருந்தார் .

ஆனால் அவரது மேல் முறையீட்டு மனுவை உயர் நீதிமன்ற நீதிபதி நிராகரித்தார்.மேலும் கீழ் நீதிமன்றம் விதித்த 7 ஆண்டு சிறைத்தண்டனையை உறுதி செய்தார்.அவர் எதிர்வரும் டிசம்பர் மாதம் 7 ஆம் திகதி முதல் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார். (அ-2)

# இராணுவப் பயிற்சியில் இளவரசர் வில்லியம்



முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ஆர்ஜென்டீனா தனக்கு அருகில் உள்ள பாக்லாந்தில் தனது படைகளைக் கொண்டு நிறுத்தியது.


பாக்லாந்து தீவானது பிரிட்டனில் ஆளுகைக்கு உட்பட்டது.இந்நிலையில் ஆர்ஜென்டீனாவின் அத்துமீறல் பிரிட்டனுக்கு கோபத்தை வரவழைத்தது.பிரிட்டன் தனது படைகளை அனுப்பி பாக்லாந்து தீவை ஆர்ஜென்டீனாவிடம் இருந்து மீட்டது.

தற்போது பிரிட்டனின் பாதுகாப்பமைச்சகமானது தனது இளவரசர் வில்லியமை 2012 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பாக்லாந்து தீவுக்கு இராணுவப்பயிற்சிக்காக அனுப்பத் திட்டமிட்டுள்ளது. பிளைட் லெப்டிணென்ட் வேல்ஸ் வில்லியம் அவரது குழுவினருடன் ஆறு வாரங்களாவது பாக்லாந்து தீவில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் இருப்பார்கள் என்று அமைச்சகம் தகவல் வெளியிட்டுள்ளது.

பாக்லாந்து தீவை சுற்றியுள்ள பனிக் கடலில் சிக்கி திணறும் மாலுமிகளைக் காப்பாற்றும் பணியில் இளவரசர் தன் ஆயிரத்து 200 வீரர்களுடன் ஈடுபட போகின்றார்.

இந்தக் காலகட்டத்தில்தான் பாக்லாந்து போரின் 30 ஆவது நினைவு தினமும் கொண்டாடப்படும்.ஆர்ஜென்டீனா நாட்டுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாத வகையில் இளவரசரின் படை பாக்லாந்தில் தங்கியிருக்கும்.

இது குறித்து அரச விமான படையின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், பிளைட் லெப்டிணென்ட் வேல்ஸ் பணி மேம்பாட்டுக்காக பாக்லாந்து செல்கிறார். இது படைச் சுழற்சி முறையில் வரும் சாதாரணமான ஒரு பயிற்சியாகும் என்றார். (அ-2)




# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தாய்லாந்து நாட்டுக்கு உதவி



வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள தாய்லாந்திற்கு உரிய உதவிகளை வழங்க அமெரிக்கா தீர்மானித்துள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்துள்ளார்.

தலைநகர் பாங்கொக் உட்பட 25 மாகாணங்களில் வெள்ளத்தால் பேரழிவு ஏற்பட்டுள்ளது.இந்த வெள்ளத்தால் பாங்கொக்கில் 20 சதவீதப்பகுதிகள் நீரில் மூழ்கிவிட்டன.அங்குள்ள 8 மாவட்டங்களில் மக்களை பாதுகாப்பாக வெளியேற்ற அரசு உத்தரவிட்டுள்ளது.

தலைநகரின் மையப்பகுதியில் வெள்ளம் இல்லை என்ற போதிலும் ஒரு கோடி மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.இதனால் நோய்கள் பரவும் அபாயம் அதிகரித்துள்ளது.கடந்த 3 மாதங்களாக பெரும் மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளத்தை வெளியேற்ற அரசு தீவிரமாக செயற்பட்டு வருகின்றது.

இச[illegible]து கிலாரி கிளின்டன் கூறியதாவது, அடுத்த வாரம் வெள்ளம் பாதித்த பகுதிகளை பார்வையிடவுள்[illegible]ன. தலைநகர் பாங்கொக்கில் பிரதமர் இங்லக்ஷினவர்த்ராவை சந்தித்து பேசிய பின்பு தான் எவ்வளவு நிதி வழங்கப்படும் மற்றும் எத்தகைய உதவிகள் வழங்கப்படும் என்று இறுதி செய்யப்படும் என்று அவர் தெரிவித்தார். (அ-2)



சீனா வந்திருந்த சர்வதேச நிதி ஆணையத்தின் தலைவர் கிறிஸ்டினா லகார்டோ (இடது) அந்நாட்டு பிரதமர் வென்ஜியாபோவை பீஜிங் நகரில் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

சாத்தான் நேரில் செல்லமுடியாத இடங்களுக்கு மதுவை அனுப்பி வைக்கிறான்.

– யூதப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## போருக்குப் பின்பான பேரழிவின் பேரிகை முழக்கம் கேட்கிறது

எங்கள் தமிழ்த் தேசம் குறித்து நாளுக்கு நாள் வெளிவரும் தகவல்களால் தலை வெடித்து சுக்குநூறாகிப் போகும் போல் உள்ளது.

யுத்த சூழல் அகன்றுவிட்டது என்று கூறினாலும் யுத்தத்திற்குப் பின்பான சூழலில் ஏற்படப் போகும் ஆபத்துக்கள் பேரழிவைத் தரும் என்பதை பல விடயங்கள் கோடிகாட்டி நிற்கின்றன.

அதில் ஒன்றுதான் எங்கள் மாணவர் சிலரிடம் அறிமுகமாகியுள்ள போதைவஸ்துப் பாவனையாகும்.

கேட்கவும் நினைக்கவும் நெஞ்சம் பதறுகின்றது. எங்கள் இளம் செல்வங்களின் எதிர்கால வாழ்வு பாழாகிப் போவதைப் பார்த்திருக்கும் பாவிகளானோமோ என்று எண்ணி ஏங்கி விழுந்து புரண்டு அழும் அளவிற்கு எங்கள் கலாசாரத்தின் மேல் பேரிடி விழுந்துவிட்டது.

எனது பிள்ளை எங்கே போகிறான் என்பதை அறியாப் பெற்றாரும்; எனது மாணவன் நடத்தைகள் எப்படி என்பதை அறியமுடியாதவாறான அளவில், காகிதத்தில் கற்றல் தேர்ச்சிக்கு அடையாளமிட்டு, அறிக்கைக் கொப்பிகளுக்கு கவரிட்டு, கலர் மை தீட்டி, கல்வித் திணைக்களத்திடம் இருந்து தங்களைப் பாதுகாக்கப் பாடுபடும் ஆசிரியர்களும், எப்படித்தான் எங்கள் இளம் சந்ததியை வழிப்படுத்தப் போகின்றனர்.

பேசும் கலை, பாடும் கலை, நாடகம் நடிக்கும் கலை என்று எங்கள் திறனை வளர்க்கும் பாசறைகள் இல்லை.

சிந்து நடைக் கூத்துப் பழக்கும் அண்ணாவிக் கலாசாரம் இல்லை. கால்நடை வளர்க்கும் பொறுப்பில்லை. வேளாண்மை செய்ய விருப்பில்லை.

வீட்டில் பெற்றோர் தொடர் நாடகத்திற்காக அந்தி சந்தி அழுகை செய்கிறார்கள். பிள்ளையோ கையடக்கத் தொலைபேசியில் கண்டபாட்டில் கதையளக்கிறபோது, மகனோ மதுபானத்தின் வகைகளைப் பட்டியல் இட்டு மனனஞ் செய்து நாளும் சுவை பார்க்கிறான்.

யாரிடம் பொறுப்பு இருக்கிறது. பெற்றவர்கள் பொறுப்பற்றவர்களாயின்; ஆசிரியர்கள் அக்கறை அற்றவர்களாயின் போதைவஸ்துக்கள் தான் எங்கள் பிள்ளைகளின் பொக்கற்றுகளில் நிறைந்திருக்கும்.

நிலைமை இதுவாக இருந்தால் ஆசிரியர்களுக்கும் ஆயுதப் பாதுகாப்பு விரைவில் தேவைப்படும்.

# சீமானை விமான நிலையத்தில் வைத்து அமெரிக்கா திருப்பி அனுப்பியது ஏன்?

## வெளியாகும் புதிய தகவல்கள்!



நாம் தமிழர் இயக்கத்தின் தலைவர் சீமான் நியூயோர்க் இலங்கைத் தமிழ் சங்கத்தினால் நவம்பர் மாதம் 5ஆம் திகதி நடத்தப்பட்ட தமிழர் சங்கமம் நிகழ்வில் பங்கு கொண்டு உரையாற்றச் சென்ற போது அமெரிக்காவில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டசம்பவம்தொடர்பாகப் புதியதகவல்கள் வெளியாகியுள்ளன.

சீமானுக்கு பத்து வருட காலம் செல்லுபடியாகக் கூடிய பல தடவை பயன்படுத்தக்கூடிய நுழைவு அனுமதியினை 2007-ம் ஆண்டு அமெரிக்கா வழங்கியிருந்ததாகவும் இந்நுழைவு அனுமதியின் அடிப்படையில் 2008-ம் ஆண்டு சீமான் அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருந்ததாகவும் தெரிய வந்துள்ளது.

அத்துடன் கனடாவில் இருந்து சீமான் 2009-ம் ஆண்டு நாடு கடத்தப்பட்ட சம்பவத்தினைத் தொடர்ந்து அமெரிக்காவும் சீமானுக்கு வழங்கியிருந்த 10 வருடகால நுழைவு அனுமதியினை இரத்துச் செய்திருந்ததாக நியூயோர்க் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் சீமானின் நுழைவு அனுமதி அமெரிக்க அரசினால் 2009-ம் ஆண்டு இறுதிப் பகுதியில் இரத்துச் செய்யப்பட்டிருந்த போதும் இத் தகவல் அமெரிக்க அரசினால் சீமானுக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

தனது அமெரிக்கா நுழைவு அனுமதி இரத்துச் செய்யப்பட்ட தகவல் தெரிய வராத நிலையில் 2007 ஆம் ஆண்டு பெறப்பட்ட 10 வருட கால நுழைவு அனுமதியின் அடிப்படையில் நியூயோர்க் இலங்கைத் தமிழர் சங்கத்தின் நிகழ்வில் கலந்து கொள்ளச் சீமான் சென்ற போது நுழைவு அனுமதி இரத்துச் செய்யப்பட்ட காரணத்தை முன்வைத்தே அவர் திருப்பி அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நவம்பர் 5 ஆம் திகதி நடத்தப்பட்ட தமிழர் சங்கம நிகழ்வில் சீமானுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விசுவநாதன் உருத்திரகுமாரன் ஆகியோரும் உரையாற்ற இருந்தனர்.

சீமான் நேரடியாக வருகைதர முடியாத காரணத்தினால் ஏனையோர் நேரடியாக உரையாற்ற சீமானின் தொலைபேசி வழியி லான உரை நிகழ்வில் இடம்பெற்றதாகவும் நியூயோர்க் தகவல்கள் தெரிவிக்கின்றன. (பா)

## இளையோருக்கு உதவி வழங்கல்

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிஸ்கோ பிரிவினால் 30 வயதிற்கு உட்பட்ட வேலையற்ற வருமானம் குறைந்த இளைஞர் யுவதிகளுக்கு கடன் வழங்கும் நிகழ்வானது எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைகாலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மிகக்குறைந்த வட்டியில் அரச வங்கிகளினூடாக ஒவ்வொரு வருக்கும் தலா இரண்டரை இலட்சம் ரூபாய் கடனாக பெற்றுக்கொடுக்கப்பட்டு அவர்களை சுயதொழிலில் ஈடுபடுத்தி வாழ்வாதாரத்தினை உயர்த்தும் நோக்குடனேயே இத்திட்டம் செயற்படவுள்ளது என நிஸ்கோ பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார். (அ)

## புதிதாக நியமனம் பெற்ற முகாமைத்துவ உதவியாளர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அண்மையில் புதிதாக நியமனம் பெற்ற பொது முகாமைத்துவ அலுவலர்களில் புதுமுகப் பயிற்சியை இதுவரை பெற்றுக் கொள்ளாத மற்றும் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ள பயிற்சி நெறிக்கு பதிவுகளை மேற்கொள்ளாத அனைவரும் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னதாக மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் தங்களது பதிவுகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு யாழ். அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (பா)

## கிராம அபிவிருத்தி திட்டமிடல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையால் நடத்தப்படும் ஜே/61 கிராம சேவையாளர் பிரிவு மக்கள் பங்கேற்புடனான கிராம அபிவிருத்தி திட்டமிடல் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமைகாலை 9.00 மணிக்கு நெடுங்குளம் மாதர் கிராம அபிவிருத்திச்சங்க கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இக்கூட்டத்தில் பங்குபற்றி தங்கள்பிரிவின் கிராம அபிவிருத்திக்கான ஒத்துழைப்பினை வழங்குமாறு யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கேட்டுக்கொள்கின்றார். (பா)

## விரிவுரைகள் திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவத்தின் முதலாம் ஆண்டு மாணவர்களிற்கான கல்வி டிப்ளோமா வகுப்புக்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறமாட்டாது எனவும் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் எனவும் தேசிய கல்வி நிறுவக பிராந்திய இணைப்பாளர் திருமதி த.வில்வநாதன் அறிவித்துள்ளார்.

✷ ✷ ✷ ✷ ✷ ✷

யாழ்.தேசிய கல்வியற் கல்லூரியில் இன்று சனிக்கிழமை கல்விமாணி விரிவுரைகள் யாவும் தவிர்க்க முடியாத காரணத்தால் இரத்து செய்யப்பட்டுள்ளதாக தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார்.

எனவே சகல தமிழ், ஆங்கில மொழிமூல கல்விமாணி மாணவர்களையும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் ஒன்று கூடுமாறு அவர் கேட்டுள்ளார். (அ)

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாண்ம்)

ஊர்காவற்றுறை பிரதேசசபையின் புதிய தலைமைச் செயலகத்தில் இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த கட்டடத் திறப்பு விழா தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பிரதேசசபை தவிசாளர் ம.ஜெயகாந்தன் அறிவித்துள்ளார்.

இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## புதிய மாணவர்களுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் 2012 ஆம் ஆண்டு தரம் 6 இல் புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான (தமிழ்/ஆங்கிலம்) மொழிமூலமான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கு பரீட்சை ஒன்றின் மூலம் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இதற்கான விண்ணப்பங்களை பாடசாலை நாட்களில் அலுவலகத் தில் பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் தரம் 2 தொடக்கம் தரம் 10 வரையான வகுப்புக்களுக்கும் வெற்றிடமுள்ள வகுப்புக்களுக்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கு மாணவர்கள் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படவுள்ளதாக அதிபர் அறிவித்துள்ளார். (அ-2)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### உயர் உயர சோதனையும் வரும்



✷ இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யும் கைகள் ஆகியவை அனைவருக்கும் தேவை.

✷ உண்மை அல்லாதவற்றில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பதுடன் உண்மையில் பிடிப்புள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். இதைக் கடைபிப்பவர்கள் வெற்றி பெறுவது உறுதி.

✷ ஒவ்வொரு ஆன்மாவிலும் தெய்வீகசக்தி ஒழிந்து கிடக்கிறது. அதை வெளிக்கொண்டு வருவதே நம் வாழ்க்கையின் இலட்சியம். இதற்காக புறவாழ்க்கையிலும், அகவாழ்க்கையிலும் கட்டுப்பாட்டுடன் நடக்க வேண்டும்.

✷ உலகம் கோழைகளுக்காக ஏற்பட்டதல்ல. இங்கிருந்து தப்பி ஓட முயற்சி செய்யாதீர்கள். செய்யும் செயலில் வெற்றியோ தோல்வியோ கவலைப்பட்டு கொண்டிருக்கக் கூடாது. தொடர்ந்து பணியைச் செய்ய வேண்டும்.

✷ மனிதன் எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறானோ அந்த அளவுக்கு அவன் கடுமையான சோதனைகளையும் கடந்து தான் ஆக வேண்டும். கடவுளின் குழந்தைகளாகிய மனிதர்களுக்குத் தொண்டு செய். மனிதர்களுக்குத் தொண்டு செய்வதன் மூலம் ஆண்டவனுக்கு நீ தொண்டு செய்தவனாகிறாய்.

# கிலானி அமைதியே உருவானவர் நான் அவரை எப்போதும் மதிக்கின்றேன்

## மன்மோகன் புகழாரம்

(அட்டு)

**உறவை மேம்படுத்திக்கொள்ள இந்தியாவும் பாகிஸ்தானும் உறுதிபூண்டுள்ளன. சார்க் மாநாட்டில் நடைபெற்ற பிரதமர் மன் மோகன்சிங்- பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி சந்திப்பின் போது இந்த உறுதி மேற்கொள்ளப்பட்டது.**

மாலைதீவில் அட்டு நகரில் நடைபெற்ற 17 ஆவது சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றுள்ள இவ்விரு தலைவர்களும் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினர்.

சுமார் ஒரு மணிநேரத்துக்கு மேல் நடைபெற்ற இந்த சந்திப்பில் இரு நாடுகளுக் கிடையியே வர்த்தக உறவை மேம்படுத்துவது உட்பட பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

கூட்டத்துக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய மன்மோகன் சிங் இரு நாடுகளுக் கிடையிலான வர்த்த உறவில் புதிய அத்தியாயத்தை எழுத நேரம் பிறந்து விட்டதாக தெரிவித்தார்.

எதிர்வரும் காலத்தில் இந்தியா- பாகிஸ்தான் உறவு மேலும் சிறப்பாக இருக்கும். இருதரப்பு பேச்சை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்ல இருவருமே முடிவு செய்துள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார்.

கிலானியை அமைதியே உருவான மனிதர் என்றே நான் எப்போதும் மதிக்கின்றேன். எரிச்சலூட்டும் வார்த்தைகளை பேசியும் மாறி மாறி குற்றம் சாட்டியும் இரு நாடுகளும் ஏற்கெனவே பெருமளவில் காலத்தை வீணடித்து விட்டன. இனி இதுபோன்று நடைபெறாது. உறவை வலுப்படுத்த கிலானி காட்டும் ஆர்வம் மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது என்றும் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

**வெளிப்படையாக பேசினோம்**

கிலானி இருநாடுகளுக்கும் கவலையளிக்கும் விடயங்கள் உட்பட அனைத்து விவகாரங்கள் குறித்து இருவருமே வெளிப்படையாக பேசினோம். பயங்கரவாதம், சியாச்சின் பிரச்சினை, வர்த்தக ஒப்பந்தம், நதிநீர் பகிர்வு என நீங்கள் கூறும் அனைத்து விடயங்களையும் விவாதிக்கத் தயாராக இருக்கிறேன் என்றும் மன்மோகன் சிங்கிடம்தெரிவித்தேன்.

அடுத்த சுற்று பேச்சுஇதைவிடவும் பயனளிப்பதாக இருக்கும் என்றும் கிலானி தெரிவித்தார்.



ஐ.நா.பாதுகாப்பு சபையில் பாகிஸ்தானுக்கு நிரந்தரமற்ற உறுப்பு நாடு அந்தஸ்த்து கிடைக்க ஆதரவு தெரிவித்த இந்தியாவுக்கு கிலானி நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இருதரப்பு வர்த்தகத்தில் இருநாடுகளும் மிகவும் வேண்டப்பட்ட நாடு என்ற அடிப்படையில் செயற்பட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் இந்தியா -பாகிஸ்தான் இடையே விரும்பத்தக்க வர்த்தக ஒப்பந்தம் ஏற்படும். எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு முதல் இரு நாடுகளுக்கிடடையே சுங்கவரி இல்லாமல் பொருட்களின் பரிமாற்றம் நடக்கும்.

முன்னதாக 15 ஆண்டுகளுக்கு முன்பே வர்த்தகத்தில் மிகவும் விரும்பத்தக்க நாடு என்ற தகுதியை பாகிஸ்தானுக்கு இந்தியா அளித்தது. பாகிஸ்தான் இப்போது தான் இந்தியாவை வர்த்தகத்தில் விரும்பத்தக்க நாடாக ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்தியா -பாகிஸ்தான் இடையே விசா வழங்குவதில் உள்ள கட்டுப்பாடுகளை தளர்த்துவது தொடர்பாக இருநாட்டு அதிகாரிகள் அடங்கிய கூட்டுக்குழு அமைக்கப்பட்டது. பல்வேறு பிரச்சினைகளால் கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் இக்குழு செயற்படாமல் இருந்தது. இந்நிலையில் இப்போதைய சந்திப்பின் போது இந்த விடயத்திலும் நல்ல முடிவு எடுக்கப்பட்டது. விசா கட்டுப்பாடுகளைத் தளர்த்திக் கொள்ள இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர். (அ-2)

## 40 வருடங்களாக சிறையில் வாடும் பாகிஸ்தானியர்கள்

ஜம்மு காஷ்மீர் சிறையில் வழக்கு எதுவும் இல்லாமல் கடந்த 40 ஆண்டுகளாக அடைக் கப்பட்டுள்ள 2 பாகிஸ்தானியர் பற்றி அதிர்ச்சி தெரிவித்த உச்ச நீதிமன்றம் இது குறித்து அறிக்கை கேட்டுள்ளது.

இது தொடர்பாக பொதுமக்களின் சார்பில் பொது நல மனு ஒன்றினைத் தாக்கல் செய்திருந்தார். ஒருவர் இந்தியச் சிறைகளில் வாடும் வெளிநாட்டவர் குறித்த மத்திய அரசின் அறிக்கையை அளிக்குமாறு கோரப்பட் டிருந்தது.

இது தொடர்பாக விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதி ஆர். என்.லோதா வழக்கு எதுவும் போடப்படாத நிலையில் 254 பாகிஸ்தான் நாட்டவர்கள் இந்திய சிறைகளில் அடைக் கப்பட்டுள்ளனர் என்பது மிகவும் அதிர்ச்சி தரத்தக்க செய்தி என்று கூறினார்.

ஜம்மு காஷ்மீர் பகுதியில் எல்லை தாண்டி வந்த குற்றத்தின் அடிப்படையில் கைது செய்யப்படும் பலர் சிறையில் உள்ளதாகவும் அதில் 4 பேர் பெண்கள் என்றும் தெரியவந்ததாகவும் நீதிமன்றம் கூறியிருந்தது.

இதுபோல் வழக்குகள் எதுவும் போடப்படாமல் நாட்டின் வெவ்வேறு மாநிலங்களில் இவ்வாறு அடைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது என்றும் இது குறித்து அரசு அறிக்கை அளிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் கூறியது. (அ-2)

# ஆயுதப்படை சிறப்பு அதிகாரச்சட்டத்தை மீளப் பெறுவதற்கு அதிகாரமுண்டு

## காஷ்மீர் முதல்வர் தெரிவிப்பு

(ஜம்மு)

ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை வாபஸ்பெறுவதற்கு எங்கள் அரசுக்கு அதிகாரம் உண்டு என காஷ்மீர் முதல்வர் ஒமர் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

காஷ்மீரில் பயங்கரவாதிகளின் அட்டகாசம் அதிகரித்தபோது, ஆயதப்படை சிறப்பு அதிகாரச்சட்டம் கடந்த 90 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. சந்தேகப்படும் நபர்களை கைது செய்ய இந்தச்சட்டத்தின் மூலம் இராணுவத்துக்கும் பொலிஸாருக்கும் அதிகாரம் வழங்கப்பட்டது. இந்த சட்டத்தை உள்ளூர் மதவாதக்கட்சிகளும் பிரிவினைவாாத ஆதரவு இயக்கங்களும் எதிர்க்கின்றன.

இது தொடர்பாக நடத்தப்படும் கண்டன ஊர்வலங்களில் வன்முறைகள் வெடிப்பதால் இச்சட்டத்தை வாபஸ்பெற மாநில முதல்வர் ஒமர் அப்துல்லா முடிவு செய்துள்ளார். ஆனால், இதற்கு இராணுவம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இந்தச்சட்டத்தால் இராணுவம் ஊனமாக்கப் படுவதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.ஆயுதப்படை சிறப்பு அதிகாரச்சட்டத்தை வாபஸ் பெறுவது குறித்து முதல்வர் ஒமர் வீட்டில் நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில் எல்லைப் பாதுகாப்புப்படை உயர் அதிகாரிகள் மத்திய ரிஸர்வ் படைப் பொலிஸார், புலனாய்வு அமைப்பு அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். ஆயுதப்படை சிறப்பு அதிகாரச்சட்டத்தை வாபஸ்பெறுவதால் ஏற்படக்கூடிய சாதக, பாதகங்கள் இந்தக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. இந்த கூட்டத்தில் நடந்த விடயங்கள் அப்படியே பத்திரிகைகளிலும் தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கு முதல்வர் ஒமர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ நகரில் நடைபெற்ற விழாவின் போது முதல்வர் ஒமர் , நிருபர்களிடம் கூறியதாவது, காஷ்மீரில் இராணும் தேவைப்படாத இடங்களில் ஆயதப்படை சிறப்புஅதிகாரசபை சட்டத்தை வாபஸ் பெறுவதற்கு மத்திய உள்துறை அமைச்சர் ஆதரவு தெரிவித்துள்ளார். பாதுகாப்பு குறித்து காபினட் குழுவிலும் இதற்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை வாபஸ் பெற மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என கூறமுடியாது.

மக்களால் தேர்வு செய்யப்பட்ட நாங்கள் அளிக்கும் பரிந்துரையின் பேரில் கவர்னர் மூலமாக இந்த சட்டத்தை வாபஸ் பெற முடியும் முடியாது என்பதை நான் தீர்வாகக் கொள்ள விரும்பவில்லை என்றார்.

(அ-2)

# பாரதச் செய்திகள்

## 2ஜி ஸ்பெக்ட்ரம் முறையீட்டு வழக்கில் 150 முக்கிய புள்ளிகள் சாட்சியம்

(புதுடில்லி)

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் நடந்த முறைகேடு தொடர்பான வழக்கு விசாரணை டில்லி சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றில் நேற்று காலை ஆரம்பமாகியது. நாடே எதிர்பார்க்கும் இந்த வழக்கில் 150 பெரிய புள்ளிகள் சாட்சியம் அளிக்கவுள்ளனர். இதற்கென காலை 10 மணிக்கு குற்றவாளிகளான ராஜா, கனிமொழி மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகள் கார்ப்ரேட் நிறுவன நிர்வாகிகள் உட்பட 12 பேர் ஆஜர் படுத்தப்பட்டனர்.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் நடந்த முறைகேடு தொடர்பான வழக்கில் மத்திய தொதைத்தொடர்புத் துறை முன்னாள் அமைச்சர் ராஜா, தி.மு.க ராஜ்சபா எம்.பி கனிமொழி, கலைஞர் டி.வி நிர்வாகி சரத்குமார், ரிலையன்ஸ் தொலைத்தொடர்பு நிறுவன அதிகாரிகள் கவுதம்தோஷி, சுரேந்திர பிபாரா, ஹரி நாயர் உள்ளிட்ட 14 பேர் மீதும், மூன்று நிறுவனங்கள் மீதும் நம்பிக்கை மோசடி சதி உள்ளிட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.


இதுவரை இந்த வழக்கில் குற்றப் பத்திரிகை தாக்கல் மற்றும் குற்றச்சாட்டுக்கள் பதிவு போன்றவை சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றில் நீதிபதி ஓ.பி.சைனி முன்பாக நடந்தன. குற்றஞ்சாட்டப்பட்வர்கள் மீது கடந்த மாதம் 22 ஆம் திகதி குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப் பட்டன. இதைத் தொடர்ந்து குற்றம் சாட்டப்பட்டு கைதாகி சிறையில் இருப்பவர்கள் பிணை பெற முடியும் என்றும் வழக்கு விசாரணை ஆரம்பமாகுமெனவும் தகவல் வெளியானது.

இந்நிலையில் கனிமொழி,சரத்குமார் ஆகியோரின் பிணை மனுக்களை சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றம் நிராகரித்து விட்டது. இதைத் தொடர்ந்து டில்லி உயர்நீதிமன்றில் இவர்கள் பிணை மனு தாக்கல் செய்துள்ளனர். அதே நேரத்தில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டு விட்டதால் ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கு விசாரணை நேற்று முதல் தொடங்கியுள்ளது.

இந்த மாதத்தில் மட்டும் 28 சாட்சிகளிடம் விசாரணை நடத்தப்பட உள்ளது. இவர்களில் 11 பேர் ரிலையன்ஸ் தொலைத்தொடர்பு நிறுவனத்தை சேர்ந்தவர்கள் . சி.பி.ஐ தாக்கல் செய்த சாட்சிகள் பட்டியலில் லிரையன்ஸ் நிறுவன அதிகாரிகள் சேதுராமன், அனந்த் சுப்பிரமணியம், ஆஷிப் கர்யேகார் உள்ளிட்டோரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இந்த சாட்சிகளிடம் முதலில் விசாரணை நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கை உயர்நீதிமன்றில் கண்காணித்து வருகிறது. தேசிய அளவில் முக்கியத்துவம் பெற்றுள்ள வழக்கு என்பதால் வரும் நாட்களில் சாட்சிகள் விசாரணை பரபரப்பை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குற்றப்பத்திரிகை இதற்கிடையே 2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டை பெறுவதற்காக விதிமுறைகளை மீறியதாக எஸ்ஸார் நிறுவனத்தின் அதிகாரிகள் சிலர் மீது சி.பி.ஐ விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.


(அ-2)



ஹரித்துவார் எனும் இடத்தில் பௌர்ணமி விழாவை முன்னிட்டு கங்கை நதியில் புனித நீராடிய பக்தர்கள் கூட்டத்தைப் படத்தில் காணலாம்.

# பாகிஸ்தான் அணி இலகு வெற்றி

# இலங்கை துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்றம்




முதலாவது ஒருநாள்போட்டியில்பாகிஸ்தான் அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலங்கை அணியை வீழ்த்தியது.

இலங்கை - பாகிஸ்தான் அணிகள் மோதும் 5 போட்டிகள் கொண்ட சர்வதேச ஒரு நாள் தொடர் அபுதாபியில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதலாவது ஒருநாள் போட்டி நேற்று டுபாயில் நடைபெற்றுள்ளது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிமுன்னணி வீரர்கள் சோபிக்காத நிலையில் 40.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 131 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சாண்டிமல் 28 ஓட்டங்களையும் உபுல் தரங்க 25 ஓட்டங்களையும் மஹேல ஜெயவர்த்தன 24 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் சகிட் அப்ரடி 3 விக்கெட்டுக்களையும் ஹபீஸ், அஜ்மல் தலா 2 விக்கெட்டுக்களையும் சீமா, ரஷாக் தலா ஒருவிக் கெட்டும் வீழ்த்தினர்

பதிலுக்கு இலகுவான இலக்கை விரட்டிய பாகிஸ்தான்அணி 21.5 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களைமாத்திரமிழந்து 132 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதில்யூனிஸ்கான் ஆட்டமிழக்காமல் 57 பந்துகளில் (7 பவுண்டரிகள் உட்பட) 56 ஓட்டங்களையும் இம்ரான் பர்காத் 50 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் லக்மல் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இவ் வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இப் போட்டியில் ஆட்டநாயகனாக பாகிஸ்தான்அணியின் வெற்றிக்கு பந்து வீச்சில் ஜொலித்த சகிட் அப்ரிடி தெரிவானார்.

## பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கணவனின் தாக்குதலால் மனைவி தலையில்படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் யாழ்நகர் ஸ்ரான்லி வீதியில் நேற்று இரவு 8.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தாயாரான ஆர்.என்.ஜெயசுதா (வயது 30) என்ற பெண்னே தாக்குதலுக்கு உள்ளானார். (பா-11,9)

## தென்னாபிரிக்கா வெற்றி

அவுஸ்திரேலியா அணியுடனான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியுள்ளது.

தென்னாபிரிக்காவின் கேப்டவுனில் நடைபெற்ற இப்போட்டி இரண்டரை நாட்களில் முடிவுற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப் போட்டியில் அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 284 ஓட்டங்களையும் தென்னாபிரிக்கா 96 ஓட்டங்களையும் எடுத்தன.

இரண்டாவது இன்னிங்ஸில் அவுஸ்திரேலியா 47 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

236 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி நேற்று முன்தின ஆட்ட நேர முடிபின் போது ஒரு விக்கெட் இழப்பிற்கு 81 ஓட்டங்களை பெற்றிருந்தது.

போட்டியின் மூன்றாவது நாளான நேற்று தென்னாபிரிக்கா அணி,மேலும் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் ஹசிம் அம்லா, 112 ஓட்டங்களையும் அணித்தலைவர் கிறேம் ஸ்மித் ஆட்டமிழக்காமல் 101 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஆட்டநாயகனாக தென்னாபிரிக்காவின் அறிமுக வேகப் பந்துவீச்சாளர் பிலாண்டர் தெரிவானார்.

## நியமனக்கடிதம் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தாதியர் பயிற்சிக்கல்லூரியில் பயிற்சியை நிறைவு செய்த தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர்களுக்குவடமாகாண வைத்திய சாலைகளுக்கும் , சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் கடமையாற்றுவதற்குகான நியமனக்கடிதம் வழங்கும் வைபவம், வடமாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் காலை10மணிக்குயாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில்பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளும் வடக்கு மாகாண ஆளுநர் நியமனக் கடிதங்களை வழங்கி வைப்பார்

அத்துடன் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். மற்றும் யாழ்பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (பா)

## யாழ்.மாநகரசபையின் அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

கட்டாக்காலி மிருகங்களை கட்டிவளர்க்குமாறு யாழ்.மாநகர சபை பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மாநகர சபைகள் சட்டத்தின் 84ஆவது பிரிவின் அடிப்படையில் யாழ்.மாநகரசபை வீதிகளில் கட்டாக்காலிகளாகத் திரியும் எருது, எருமை, செம்மறியாடு, வெள்ளாடு, பன்றி முதலிய மிருகங்களையும் தெருவோரங்களில் கட்டிவைக்கப்படும் வண்டில் மாடுகளையும் பிடித்து பட்டியில் அடைப்பதற்கு யாழ்.மாநகர சபைக்கு அதிகாரம் உண்டு.

எனவே இதனைத் தவிர்ப்பதற்கு வளர்ப்பு மிருகங்களை வீடுகளில் கட்டிவளர்க்குமாறு யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோ.பற்குணராசா அறிவித்துள்ளார். (பா-9)




நல்லூர் ரோட்டறக்ட் கழகத்தினரினால் செவிப்புலன் திறனற்றோர் சங்க வளாகத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதானம் மேற்கொள்ளப்படுவதை படத்தில் காணலாம்.

## போரில் குதிக்க..

மாலைதீவில் நடைபெறும் 17வது சார்க் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு ரைம்ஸ் நவ் தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இச்செவ்வியில்,விடுதலைப்புலிகள் தொடர்பாக கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த ஜனாதிபதி ராஜபக்ஷ,

பிரித்தானியா, கனடா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் பணம்வசூலித்து மீண்டும் ஒருங்கிணைய முயற்சித்து வருவது குறித்து தாங்கள் அறிந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து தங்களிடம் சரணடைந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளிகள் மூலம் தங்களுக்கு தகவல் கிடைத்துள்ளதாக குறிப்பிட்ட அவர், விடுதலைப்புலிகள் மீண்டும் போரில் குதிக்கவும் முயற்சிப் பதாகவும் கூறியுள்ளார்.

இச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் இலங்கை அரசு செய்துள்ள சாதனைகளை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேரில் வந்து பார்த்துத் தெரிந்து கொள்ளட்டும்.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா எப்போது விரும்பினாலும் இலங்கைக்கு விஜயம் செய்யலாம். நாங்கள்அவரை வரவேற்கத் தயாராக இருக்கின்றோம்.

இலங்கையில் போர் இடம்பெற்ற பகுதிகளில் நாங்கள் என்ன செய்து வருகின்றோம் என்பதை அங்கு வந்து பார்த்து அனைவரும் தெரிந்து கொள்ளலாம். இந்தியாவும் சரி,பிறநாடுகளும் சரி எங்களது பணிகளைப் பார்த்துச் சென்றுள்ளனர். எங்களின் பணிகளில் அனைவருக்கும் திருப்தியே.

நான் ஆரம்பத்திலிருந்தே ஒன்றை உறுதியாக சொல்லி வருகின்றேன். இந்தியா எங்களது தொப்புள் கொடி உறவு. இந்தியாவுக்கு பின்னர் தான் சீனா. இந்தியா எங்களது உறவினர் என்றால் சீனா எங்களது நண்பர். நாங்கள் மட்டுமல்ல ஐரோப்பிய யூனியனும் கூட சீனாவின் உதவியை நாடுகிறது.

எங்களது நாட்டில் துறைமுகம், விமான நிலையம், மின் நிலையம் ஆகியவை அமைக்கும் பணியில் ஈடுபட நாங்கள் முதலில் இந்தியாவைத்தான் நாடினோம். இந்தியாவுக்கு தான் வாய்ப்பளித்தேம். பின்னர் தான் சீனா விடம் சென்றோம்.

எங்களைப் பொறுத்த வரை இந்தியா தான் முதலில். பின்னர் தான் சீனா. சீனா மட்டுமல்ல, அமெரிக்காவும் கூட இலங்கையில் முதலீடுகளைச் செய்துள்ளது.

சீனாவுடனான எங்களது நட்பால் இந்தியாவுடனான உறவில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. அதற்கான வாய்ப்பில்லை. அதற்கான உறுதிமொழியை நாங்கள் இந்தியாவிடம் ஏற்கனவே கொடுத்துள்ளோம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இச் செவ்வியில் தெரிவித்துள்ளார். (பா)

## ஆணைக்குழு...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் எதிர் வரும் 20ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் வைத்துகையளிக்கும்படி நல்லிணக்க ஆணைக் குழுவின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக இவ்வூடகம் தெரிவித்துள்ளது.

உண்மைகளை கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவால்மொத்தமாக 57 அமர்வுகள்நடத்தப்பட்டுஆயிரத்துக்கும்மேற்பட்ட நேரடிச்சாட்சியங்களும் 5 ஆயிரத்து 100 இற்கும் மேற்பட்ட எழுத்து மூலமான சாட்சியங்களும் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உண்மைகளை கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையை கடந்த வருடம் செப்ரம்பர் மாதம் அரசாங்கத்திடம் கையளித்து இருந்தது.

இந்த இடைக்கால அறிக்கையில் தடுத்த வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விவகாரம், சட்டம், மற்றும் ஒழுங்கு, காணி மற்றும் மொழி விவகாரம், துணை ஆயுதக்குழுக்களின் விவகாரம் என்பன தொடர்பில் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழு தனது பரிந்துரைகளை முன்வைத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

**TILKO JAFFNA CITY HOTEL**
70/6,K.K.S ROAD,JAFFNA. T.P:0212225969
Web:cityhoteljaffna.com
e-mail:info@hoteljaffna.com
Tilko Jaffna City Hotel for Business & Relaxation in the heart of Jaffna City
Conference Hall Facilities including Multimedia & PA System
Large Banquet Hall For Wedding Receptions, Work Shops, Conventions & Seminars
Non Ac Mini Conference Hall
Special take away Lunch/Dinner Pack
Morning/ Evening Snacks
Special Package Rate for
Family Get-to-Gathers, Birthday/ Anniversary Functions, Company Get to Gathers
Await Opening
Special Barbaque at our Garden Cafeteria
Inclusive of Chines/Indian Jaffna Authentic
Variety Cuisine s From our open hot ranga Kitchen

உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுது போக்கு அம்சங்களுக்கு யாழ். நகரின் மத்தியில் ஒளி, ஒலி அமைப்பு மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய மாநாட்டு மண்டபம், சிறிய /நடுத்தர /பிரமாண்டமான குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத சகல வசதிகளுடன் கூடிய மண்டபங்கள்,திருமண, பிறந்த நாள் கொண்டாட்டங்கள்,வியாபார நிறுவன ஒன்றுகூடல்களுக்கும் ஏதுவான பாரிய மண்டப வசதி அத்துடன் மதிய, இரவு போதி செய்யப்பட்ட உணவு வகைகள், காலை, மாலை சிற்றுண்டிகள்...
இந்தியா, சீனா மற்றும் யாழ். பாரம்பரிய உணவு வகைகளும் ஒரே இடத்தில்...
மிகவிரைவில் TILKO HOTEL இல் Barbeque வசதியுடனான பூந்தோட்ட உணவகம் திறக்கப்பட வுள்ளது.
உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு யாழ் நகரில்...
T.P.:077 6943479
K.Gunaseelan
Marketing Executive

# பாடசாலை அதிபர் ...

பிரஸ்தாப அதிபர் யாழ். கந்தர் மடம் புகையிரத வீதியிலுள்ள தனது வீட்டில் யாழ்.பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் மருத்துவபீட சிங்கள மாணவர்கள் நால்வரையும் க.பொ.த. உயர் தரத்தில் பயிலும் தமிழ் மாணவர் ஒருவரையும் வாடகைக்கு அமர்த்தியுள்ளார்.

இதனால், விடுமுறை தினங்களில் தமது வீட்டை வந்து கண் காணித்து செல்வது வழமை.

இந்நிலையில் நேற்று முன் தினம் காலை மீசாலையிலிருந்து சம்பவம் இடம்பெற்ற வீட்டிற்கு வருகை தந்த பிரஸ்தாப அதிபர் பகல் முழுவதும் தேசியகல்வி நிறுவக உத்தியோகத்தர்களுடன் அலுவலகப் பணிகளை மேற் கொண் டுள்ளார்.

மாலை 6.00 மணிவரை அவர் வீடு திரும்பாத நிலையில் அவரது மனைவி தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டபோது, நகை யகம் ஒன்றில் நகை வாங்கச் சென்றதனால் தாமதமாகி விட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இரவு 8.30 மணியளவில் தமது சக உத்தியோகத்தர் ஒருவருடனும் தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

இந்நிலையில் இரவு 10 மணியாகியும் அதிபர் வீடு திரும்பாததையடுத்து அவரது மனைவி தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டபோது கைத்தொலைபேசி இயங்கவில்லை.

இதனையடுத்து, அவரின் மைத்துனர் (மனைவியின் சகோதரன்) மீசாலையிலிருந்து கந்தர்மடம் வீட்டுக்கு தேடி வந்துள்ளார்.

உறவினர் நள்ளிரவு ஒருமணியளவில் வந்து பார்த்தபோது வீட்டின் மேல் மாடியில் பிரஸ்தாப அதிபர் வெட்டுக் காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

அத்துடன், மேல்மாடியில் அதிபர் சடலமாக மீட்கப்பட்ட அறையின் கதவும் உடைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் உறவினர் உடனடியாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து நேற்று அதிகாலை சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் வீட்டின் கீழ் தளத்தில் வாடகைக்கு தங்கியிருந்த மாணவர்களை உறக்கத்திலிருந்து எழுப்பி விசாரணை செய்துள்ளனர்.

யாழ்.நாக விகாரையில் நடந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டு விட்டு நள்ளிரவு வேளையே வீட்டுக்கு வந்ததாக குறித்த மாணவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் சடலத்தின் அருகே 5 பவுண் தங்க நகை கொள்வனவு செய்தமைக்கான பற்றுச்சீட்டு காணப்பட்டபோதும் அந்த தங்க நகையைக் காணவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் பிரஸ்தாப அதிபர் அணிந்திருந்த சங்கிலி சடலத்தில் காணப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் இடத்திற்கு நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்ட யாழ். மாவட்ட நீதிபதி அ. பிரேம்சங்கர், பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவு இட்டார்.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பில் பல கோணங்களில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், தொடர்புள்ளவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் எனவும் யாழ் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்தார்.(பா-6)

# இடமாற்றம்

இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி** ஸ்தாபனம்

10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு : 021 222 4134


# ஹெரோயின் ...

குற்றச்சாட்டின் பேரிலும் அண்மையில் யாழ். நகரப் பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் சிலரை கைது செய்து விசாரணைகள் மேற்கொண் டிருந்தோம்.

அத்தோடு மாணவர்களுக்கு போதைப் பொருட்களை விற்பனை செய்த நபர் என்ற சந்தேகத்தின் பெயரில் ஒருவரை நேற்று முன் தினம் கைது செய்திருந்தோம்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படி போதைப் பொருள்களை விற்பனை செய்யும் முகவர்களையும், வெளி மாவட்டங்களிலிருந்து யாழ்.மாவட்டத்திற்கு போதைப் பொருட்களைக் கொண்டு வரும் முகவர்கள் தொடர்பிலும் தகவல்கள் கிடைத்துள்ளது.

இந்த தகவல்களின் ஊடாக யாழ். மாவட்டத்திற்கு போதைப் பொருட்களைக் கொண்டுவரும் முகவர் இனங் காணப்பட்டுள்ளார். அவரை இன்று கைது செய்தே தீருவோம்.

போதைப் பொருட்களை மாணவர்களுக்கு விற்கும் வலைப் பின்னலை மட்டு மல்லாது யாழ். மாவட்டதில் போதைப் பொருட்களை விற்பனை செய்துவரும் ஏனைய முகவர்களையும் கைது செய்து சட்டத்தின்முன் நிறுத்துவோம்.

மாணவர்களோ, தனிநபர்களோ இனிவரும் காலங்களில் போதைப் பொருள் பாவனையில் ஈடுபட முடியாதபடி பொலிஸ் கூடிய பலத்தை பிரயோகித்து தடுத்து நிறுத்தும் எனத் தெரிவித்தார்

இதேவேளை கைது செய்யப்பட்ட மாணவர்கள் யாழ்.நீதவான் நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (பா-6)

# இலங்கையின் சமாதான ...

மிக்கெல்சன் இன்ஸ்டிடியூட் டைச் சேர்ந்த குன்னார் செர்போ,

அமைதி முயற்சி தோல்வியடைந்ததற்கு 4 காரணங்களை முக்கியமாக குறிப்பிட்டார்.

முதலாவதாக இலங்கை அரசும், விடுதலைப்புலிகளும் இந்த அமைதி முயற்சிகளில் இறங்கிய போது கூட, தங்களது இலட்சியங்களை நிலைப்பாடுகளை கைவிடாமலேயே வந்தனர்.இதனால் அவர்கள் ஒரு அரசியல் தீர்வைக்காணும் முயற்சியில் உளச் சுத்தியுடன் ஈடுபடவில்லை என்று கூறிவிட முடியாது என்று இந்த அறிக்கை கூறுகின்றது.

ஆனால் இந்த அமைதி முயற்சி எப்படி அரசியல்ரீதியாக முடிய வேண்டும் என்று இந்த இருதரப்புகளுமே அவர்கள் வரையறுத்துக்கொண்ட நிலையிலிருந்து குறிப்பிடத்தக்க அளவில் எந்த ஒரு மாற்றத்தையும் செய்யவில்லை என்று அது தெரிவிக்கின்றது.

இரண்டாவதாக,இலங்கை நாடு மற்றும் அரசியலில் இருந்த கட்டமைப்பு ரீதியான அம்சங்களும் இந்த அமைதி வழிமுறையைப் பாதித்தன. இலங்கையில் நிலவும் பரம்பரை அரசியல், உட்கட்சி போட்டிகள், வேண்டியவர்களுக்கு அனுகூலம் செய்யும் அரசியல், தேசியவாத அரசியல் அணி திரட்டல் ஆகியவை நாட்டை சீர்திருத்துவதற்கும் சர்வதேச நாடுகள் தலையிடுவதற்கும் இடைஞ்சலாக இருந்தன.

மூன்றாவதாக, ஒரு பேச்சுவார்த்தை ரீதியிலான தீர்வுக்கு இருந்த வாய்ப்பு என்பது மிகவும் குறுகிய வாய்ப்புத்தான். அரசியல் மற்றும் இராணுவ ரீதியிலான சமநிலை இருக்கும் ஒரு நிலை, மேலை நாடுகளோடு ஒத்த கருத்துணர்வில் இயங்கும் ஒரு அரசு இருப்பது, பல தரப்பட்ட சர்வதேச நாடுகளின் ஆதரவு பேச்சுவார்த்தைகளுக்கு இருந்தது என்று ஒரு சாதகமான சூழ்நிலை போன்றவை மிக விரைவிலேயே மாறிவிட்டன.

மிகமுக்கியமாக, 2004ம் ஆண்டில் விடுதலைப்புலிகளின் இயக்கம் பிளவு கண்டது. இராணுவ சமநிலையை, அரசுக்கு சாதகமாக மாற்றியது.

'இந்த பிளவுக்குப் பின்னர் இரண்டு தரப்புகளுமே மற்ற தரப்புக்கு குறிப்பிடத்தக்க சலுகைகளைக் காட்டவேண்டியதற்கான தேவையைக் குறைத்து விட்டது என்று அந்த அறிக்கை சுட்டிக் காட்டு றது.

நான்காவதாக, ஐக்கிய தேசியக் கட்சியரசு இந்த அமைதி வழிமுறையை , பாதுகாப்பு உத்தரவாதங்கள், சர்வதேச கொடை வழங்கும் நாடுகளிடம் நிதி உதவி மற்றும் அரசியல் ரீதியாக சிக்கலான பொருளாதார சீர்திருத்தங்கள் ஆகியவை மூலம் , சர்வதேச மயமாக்க எடுத்த முயற்சிகள் சிங்கள தேசியவாத எதிர் வினையைத்தான் தூண்டின என்றும் அறிக்கை கூறுகிறது.

இதன் விளைவாக ,ஒருதேசியவாத முனைப்புள்ள கட்சி இலங்கையில் ஆட்சிக்கு வர உதவியது என்று அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான இந்த புதிய அரசு ஆசிய நாடுகளின் ஆதரவுடன் புதிய சர்வதேச பாதுகாப்பு வலையத்தை தனக்கு ஆதரவாக அமை துக் கொண்டு, விடுதலைப் புலிகள். மீது மேலும் கடுமையான ஒரு அணுகுமுறையை எடுக்கவே உதவியது.

இதன் மூலம் மஹிந்த அரச இந்த மோதலுக்கு இராணுவ ரீதியான தீர்வை முன்னெடுக்க வழி பிறந்தது.

ஒரு பலவீனமான, மென்மையான நோர்வேயால்,இந்த இயங்கு சக்திகளை எதிர்க்க முடியவில்லை என இந்த அறிக்கை கூறுகிறது. ஒரு கேந்திர தொலைநோக்கு திட்டம் இல்லாமல்,துடிப்புடன் செயல்படக்கூடிய சர்வதேச வலையமைப்பு இல்லாமல் இந்த அமைதி வழிமுறை பாதிக்கப்பட்டது என்றும் இருதரப்புகளும் பின்வாங்க முடியாத விட்டுக் கொடுப்புகளையும்,உறுதி மொழிகளையும் தர வைப்பதற்கும் அவற்றை இரு தரப்பும் கடைப்பிடிக்கச் செய் வதற்கும் நோர்வேயால் இயலாமல் போனது என்று அறிக்கை குறிப்பிடுகி ன்றது.

மேலும், இலங்கையின் அரசியலில் ஒரு சதுரங்கப் பகடையாக பயன்படுத்தப்படுவதை உணர்ந்து இதை தடுத்திருக்க வேண்டும். 2006 ம் ஆண்டு ஜெனிவா பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தபோது, மத்தியஸ்த முயற்சிகளிலிருந்து நோர்வே விலகிக் கொண்டிருக்க வேண்டும் என்று குன்னார் செர்போ தெரிவித்துள்ளார்

இந்ந அமைதி வழிமுறையிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள்நிறைய இருப்பதாகவும் இந்த அறிக்கை கூறுகிறது.

# அரசு - கூட்டமைப்பு ...

குறித்து அந்நாட்டு உயரதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி விட்டு திரும்பியுள்ளனர்.

இந்நிலையில், அரசாங்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்தவுள்ள இப் பேச்சுவார்த்தை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது என கொழும்பு ஊடகம் சுட்டிக்காட்டுகிறது. (பா)

# மாணவரிடையே போதை ...

அமைத்து மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் மாணவர்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல். உரிய வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்குதல். பாடசாலை மட்ட ஒழுக்கத்தை உறுதிப்படுத்தல்.

♦வலயக் கல்விப் பணிப்பாளரது மேற்பார்வையில் சகல பாடசாலைகளுக்கும் சென்று இச்செயற்பாடுகளைக் கண்காணிக்கும் குழுக்களை அமைத்து கண்காணித்தும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை மேற்கொள்ளல்.

♦ பெற்றோர்கள் தமது பதின்மவயதுடைய பிள்ளைகளின் செயற்பாடுகளையும் ஒழுக்கத் தையும் கண்காணிப்பது அவசியமானது. பாடசாலை தவிர்ந்த பெருமளவு நேரத்தைப் பெற்றோருடன்தான் மாணவ[illegible] கழிப்பத[illegible]ால் இது விடயத்தில் பெற்[illegible]ரது அக்[illegible]றையினைப் பாடசாலை வ[illegible]யுறுத்[illegible]தல்.

♦ இவ்விடயங்கள் தொடர்பில் பொலிஸார் மாதம் ஒரு தடவை பாடசாலைகளுக்கு விஜயம் செய் து விழிப்பணர்வுச் செயற் பாடுகளையும் ஆலோசனை வழிகாட்டல்களையும் வழங்குதல்.

♦பாடசாலைகளில் எவ்வித விழாக்கள், செயற்பாடுகள் (பாடவிதான அமுலாக்கம் தவிர்ந்த) நடை பெறுவதாக இருந்தாலும் உரிய முறையில் மாகாண கல்விப் பணிப்பாளர், கல்விச் செயலாளர் ஊடாக ஆளுநரின் அனுமதி பெற்றே செயற்படுதல் வேண்டும்.

♦ பாடசாலை நன்கொடைகள், அன்பளிப்புகள், சிறப்புச் செயற்பாடுகள் யாவும் மேற்குறிப்பிட்ட நடைமுறையில் 'அனுமதி பெற்றே செயற்படுதல் வேண்டும்.

அத்துடன் வட மாகாணக் கல்வித்துறையின் முழுமையான வளர்ச்சிக்கு உதவும் வகையில் எதிர் காலத்தில் தனது நேரப்படி கண்காணிப்பில் மேற்பார்வைக் குழு நியமித்து மேற்பார்வை செய்ய திட்டமிட்டிருப்பதாக ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ சந்திரசிறி குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், வட மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், 12 வலயங்களின் கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட கல்வி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது வடக்கு மாகாணத்தில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகங்கள், போதைப்பொருள்பாவனை, கலாசார சீரழிவுகள் தொடர்பில் பாடசாலை மட்டத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப் பட்டன.(பா)

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் சந்திக்கும் டிப்போவுக்கும் இடையில் பலாலி Main Road -ல் 2 காணிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு: 0770204629

எந்த நாட்களாயினும் மாலை 4.00 மணிக்கு பிறகு தொடர்பு கொள்ளவும்.

(6779)

இப்பத்திரிகை வலம்புரி அன்.[illegible] ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்[illegible], பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.